www.tamilarangam.net

புலம்

Pulam

1
தை, மாசி
1998



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருட்டிங்கில் தரமிகு நவீன ஜவளி மாளிகை

உங்கள் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய ஒரே இடம்.

RANI FASHION DESIGN & TAILORING

33, UPPER TOOTING ROAD, LONDON SW17.

Tel:- 0181- 648 2788 / 0181- 767 7627

**SAREE BLOUSES, SALWAR KAMEEZ, PARTY FROCKS
MATENITY DRESSES, ALTERATIONS & EMBROIDERY,
WEDDING CARDS**

பட்டு சாறிகள், பிளவுஸ் துணி
வகைகள் கூறை சேலைகள், ஷல்வார்
கமிஸ் வகைகள், குழந்தைகளுக்கான
ரெடிமேற் ஆடைகள்

உங்கள் விருப்பத்திற் கேற்ப
அழகிய டிசைன்களில்
சாறிபிளவ்ஸ் தைப்பதற்கு
ஞாபகத்தில் இருக்க
வேண்டிய ஒரே இடம்.

உங்கள் அவசர தேவைகட்கு
24 மணிநேர ஓடர்களும்
ஏற்றுக் கொள்ளப்படும்.

சிறந்ததரம்,
குறைந்தவிலை
மறவாதீர்கள்

**RANI FASHION
DESIGN
& TAILORING.**

www.tamilarangam.net

புலம் - 1
தை, மாசி - 98

நாமும் நிலத்தினது நாகரிக வாழ்வுக்கு
நம்மால் இயன்ற பணிகள் நடத்திடுவோம்.
சும்மா இரோம்.

ஏடிட்டோர்:
இரவி.அருணாசலம்

தொகுப்பு:
செல்லத்துரை. நாவரசன்

வெளியீடு:
கோபு
(நேயர் மன்றம் சார்பாக)

நிர்வாகம்:
சுந்தரம். சிறீஸ்கந்தராசா

ஆலோசனை:
அ.தாசீசியஸ்,
எஸ்.கே.ராஜென்
ஜி.எஸ். குமார்,
யசோதா. மித்திரதாஸ்

Pulam -1

Editor:
Ravi. Arunasalam

Co-ordinator:
Sellaturai. Navarasan

Publisher:
Gobu

Manager:
Suntharam,
Sriskandarajah

Advicers:
A.Tharcisius,
S.K.Rajen
G.S.Kumar
Yasotha. Mithrathas

தொடர்பு:
புலம்,
IBC - Tamil,
P.O.Box -1505
London SW8 2ZH.

தொலைபேசி: 0181 787 8000
தொலை மடல்: 0181 787 8010
email: ibc @ fastaccess.co.UK.

அச்சுப்பதிப்பு:
வாசன் அச்சகம்
45C Crusoe Road.
Mitcham, Surrey CR4.

ஓவியம்:
கண்ணா

இன்று புதிதாய்ப் பிறந்தோம்.

நண்பர்களே,

- புலம். இது புதிய சஞ்சிகை. இரு மாதங்களுக்கொரு முறை இப்போது வருகின்றது. வசதிப்படின் ஒருமாதத்திற்கொரு முறையாக வெளியாகும்.

- புலம் வெளிவருவதற்கான நோக்கங்கள் நிறையவே உள்ளன. சொல்லாமலே விடுவோம். செய்வோம்.

- நிறையப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளியாகிற சூழலில் இன்னுமொன்று வேண்டுமா? என்று யாரும் கேட்கலாம். நூறு பூக்கள் மலரட்டும். இதுவே சொல்லத்தக்க பதில். ஏனைய பத்திரிகைகள், சஞ்சிகைகளுடன் புலம் மேற்கொள்ள விரும்புவது நேசமான கைகுலுக்கல்களே.

- முதலிதழ் இது. முடியும் வரை திறம்படச் செய்வோம். இன்னும் என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள். செய்கின்றோம்.

- எளிமை, தரம் இவற்றைப் பேணுவோம். மேலும், யாவராலும் யாவருக்கென்றும் படைக்கப்படுவதன் களம் இது.

- மக்களே, மக்கள் மட்டுமே வரலாற்றை உருவாக்கும் சக்தி. ஆதலினால்,

- புதிதாய் ஏதும் செய்வோம்.

- புலம் -

இங்கிலாந்து-1£. பிரான்ஸ் - 10FFr. ஜேர்மனி - 3DM. சுவிஸ் - 2.50SFr. நோர்வே - 12NOK. டென்மார்க் - 12DK. கனடா - 2.50CS. இலங்கை - 20ரூபா. இந்தியா - 15ரூபா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேரும் திங்களும்

"ஊரெலல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே;
வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை"
என்று
வந்தான் ஒருவன்.

வயிற்றில் உலகத்தாய்
நொந்து சுமந்திங்கு நூறாண்டு வாழ்வதற்காய்ப்
பெற்ற மகனே அவனும்.
பெருந் தோளும்
கைகளும், கண்ணில் ஒளியும், கவலையிடை
உய்ய விழையும் உளமும் உடையவன் தான்:

வந்தான்; அவன் ஓர் இளைஞன்;
மனிதன் தான்:
சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து வானத்தே
முந்த நாள் ஏறி முழுநிலவைத் தொட்டுவிட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி!

"ஈண்டு நாம் யாரும் இசைந்தொன்றி நின்றிடுதல்
வேண்டும்" எனும் ஓர் இனிய விருப்போடு
வந்தான், குனிந்து வணங்கி வடம் பிடிக்க.
"நில்!" என்றான் ஓராள்
"நிறுத்து!" என்றான் மற்றோராள்

"புல்" என்றான் ஓராள்
"புலை" என்றான் இன்னோராள்
"கொல்" என்றாள் ஓராள்
"கொளுத்து" என்றான் வேறோராள்:

கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு
பல்லோடு உதடுபறந்து சிதறுண்டு
சில்லென்று செந்நீர் தெறித்து
நிலம் சிவந்து
மல் லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்.

ஊரெல்லாம் கூடி இழுக்க உகந்த தேர்
வேர் கொண்டதுபோல் வெடுக்கென்று நின்றுவிட்
பாரெல்லாம் அன்று படைத்தளித்த அன்னையோ
உட்கார்ந் திருந்துவிட்டாள் ஊமையாய்த் தான்பெற்ற
மக்களுடைய மதத்தினைக் கண்டபடி.

முந்த நாள் வான முழுநிலவைத் தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்
அதோ மண்ணிற் புரள்கிறது!

மஹாகவி

(1927 - 1971) யாழ்ப்பாணத்திலுள்ள அளவெட்டி என்னும் கிராமத்தில் பிறந்தவர். பண்டிதன், புதுக்கம்பன், புதுநாப்புலவர், மாபாடி, மகாலட்சுமி முதலிய புனைபெயர்களிலும் இவர் கவிதைகள் எழுதியுள்ளார். சொந்தப் பெயர் து.உருத்திரமூர்த்தி. இடைநிலைக்கல்வியோடு 19 ஆம் வயதில் அரச எழுது வினைஞராகச் சேர்ந்தார். 1967 முதல் இலங்கை நிருவாக சேவையில் (C.A.S) சேர்ந்து உயர் அதிகாரியாகக் கடமையாற்றினார்.

1943 இல் இருந்து இவரது கவிதைகள் பத்திரிகைகளில் பிரசுரமாகத் தொடங்கின. ஆரம்பகாலத்தில் சில சிறுகதைகளும் எழுதியுள்ளார் . ஏராளமான கவிதைகள், ஐந்து காவியங்கள், மூன்று மேடைப் பாநாடகங்கள், சுமார் பத்து வானொலிப் பாநாடகங்கள் என்பன இவரது படைப்புகள் ஈழத்தில் முதலாவது கவிதை ஏடான தேன் மொழி 1955 - 1956 யின் இணை ஆசிரியராகவும் பணி புரிந்தவர்.

இதுவரை வெளிவந்த நூல்கள்:

வள்ளி - 1995, குறும்பா - 1966, கண்மணியாள் காதை - 1968, கோடை - 1970, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் - 1971, வீடும் வெளியும் - 1973, இரண்டு காவியங்கள் - 1974, புதியதொரு வீடு (ஆறு நாடகங்கள் தொகுப்பில் - 1979).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ், இனி.

-முடிநாகர்-

"மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்."

என்று ஒருவர் கூறியபோது பாரதியார் ஆத்திரப்பட்டுக் கொண்டார். பாரதியார் ஆத்திரப்பட்டிருக்கத் தேவையில்லை என்று இப்போது காலம் சொல்கிறது. பாரதியார் அப்போதே.

"வேறு வேறு பாசைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ"

என்று ஒரு சிலரைத் துரத்தியும் விட்டார். வீட்டு வார்த்தை என்பது அவரது தாய்மொழியே என்பது சொல்லாமலே தெரிந்து விடும்.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்."

என்றும்,

"தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

என்றும் பாரதியார் கூறியது எமது தோளைக் கனக்கச் செய்கின்றது.

மண்ணை விட்டுப் புறப்பட்ட பின் தமிழ் கொஞ்சம் கொஞ்சமாக எங்களை விட்டுப் போகின்றது. தமிழ் போகின்றதா? நாங்கள் போகின்றோமா?
இங்கு சிலர் இருக்கின்றார்கள். அவர்களைத் தொட்டு விட்டாலே 'தமிழ்ப் பொறி' (நெருப்புப் பொறியல்ல) பறக்கும் ஆனால், ஆச்சரியம் என்னவென்றால், அவர்கள் வீடு சென்றாலோ வீட்டு வார்த்தை வேறு வேறு பாசைகளில் உலாவுவதைக் காணலாம். இப்படியென்றால் மெல்லத்தமிழினிச் சாகுமோ? இல்லையோ?

தமிழ் என்ற சொல்லிற்கு பல்வேறு பொருள் கூறுகின்றனர். அது ஒரு மொழி. அவ்வளவே தான். கருத்தைப் பரிமாறுகின்ற ஒரு சாதனம். இதற்கு மிஞ்சி மொழிபற்றிக் கூற ஒன்றுமில்லை. ஆனால், மொழியின் பெயரால் ஒரு இனம் அடையாளப்படுத்தப்படும் போது மொழிக்கு ஒரு வலு உண்டு. இதனால் மொழி என்பது கருத்துப் பரிமாறுகின்ற சாதனம் என்பதற்கும் அப்பால், அதற்கு ஒரு அழுத்தம் கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. மொழி அழிபடின், இனம் அழிபடும். மொழி உயிர்க்கின் இனம் சிறக்கும். மொழியைச் சார்ந்தே இனம் வாழ்கின்றது. எனவே, மொழி அழிபடாமல் பார்ப்பது, இனம் அழிபடாமல் பார்ப்பதற்குத் தேவையானது.

இதே போல இன்னொரு சிக்கலும் எழுகின்றது. மொழி புதுவளம் பெறவேண்டும். உலக மொழிகளுடன் ஒப்பிட்டு உயர்தரம் பெறவேண்டும். மொழி மாற்றம் பெறவேண்டும்.

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல; காலவகையினானே"

என்று நன்னூலார் கி.பி. 13ம் நூற்றாண்டில் கூறிவிடுகின்றார். 700 ஆண்டுகள் கழிந்து விட்டன. என்றாலும், பழையன கழிக்க நாங்கள் பயப்படுகின்றோம். இப்படி அஞ்சியே வாழ்வோமென்றால், மொழி அழிந்துவிடும். மொழி புதிய ஓடைகளினூடே ஓடவேண்டும். புதிய வளங்களை தன்னுள் வாங்கவேண்டும்.

மொழியின் வளத்திற்கு இலக்கணம் அவசியம். இலக்கணம் என்பது மனனம் செய்து விட்டு சூத்திரங்களை ஒப்புவிப்பதல்ல. மாறாக, மொழியின் வடிவத்திற்கு விஞ்ஞான பூர்வமாக அமைக்கப்பட்ட வரன் முறையேயாகும். எந்த மொழிக்கும் இலக்கணம் அவசியம்.

தமிழ் மொழிக்கு இலக்கண நூல்கள் அதிகம் இருந்தன. அகத்தியருக்கு முருகன் தமிழ் கற்பித்தார். அகத்தியர் அகத்தியம் என்றொரு இலக்கண நூல் எழுதினார் என்றொரு பண்டைக் கதை கூறுவதுண்டு. அதற்குச் சான்றாதாரங்கள் கிடையாது. தமிழில் கிடைத்த இலக்கண நூல்களில் முதலாவதாகக் கொள்ளத்தக்கது தொல்காப்பியமாகும். இந்நூல் கி.பி.3ம் நூற்றாண்டளவில் தோன்றியிருக்கலாம் எனக்கருதஇடமுண்டு. தொல்காப்பியமானது எழுத்தியல், சொல்லியல், பொருளியல், யாப்பியல், அணியியல் எனும் ஐந்து அதிகாரங்களைக் கொண்டன. ஆனால், யாப்பியலும், அணியியலும் இப்போது கிடைத்தில. தொல்காப்பியத்திற்கு சேச்னாவரையார், நச்சினார்க்கினியார், இளம்பூரணர், பேராசிரியர் முதலான பலர் உரை எழுதினர். தொல்காப்பிய இலக்கண அமைதியினை பிறமொழி அறிஞர்களும் அறிந்து வியந்து போற்றினர்.

தொல்காப்பியத்திற்குப் பின் ஏராளமான இலக்கண நூல்கள் எழுந்தன. தண்டியலங்காரம், வீரசோழியம், நேமிநாதம் முதலான பல நூல்கள் இதனுள் அடங்கும். ஆயினும் பின் வந்த நூல்களுள் கி.பி. 13ம் நூற்றாண்டில் எழுந்த நன்னூல் எனும் இலக்கண நூலையே யாவரும் தமது கையேடாகக் கொள்கின்றனர். ஆறுமுக நாவலரும் தமது இலக்கணச் சுருக்கம் நூலுக்கு நன்னூலையே முதனூலாக மொழிந்தார். நன்னூல் பவணந்தி முனிவரால் எழுதப்பட்டது. ஆறுமுக நாவலர் அதற்கு உரையொன்று யாத்திருக்கின்றார்.

நன்னூலை அடியொற்றியே இப்போது சகல இலக்கண வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன. இத் தொடரும் கூட நன்னூலில் இருந்தே ஆரம்பிக்கின்றது. என்றாலும், மொழியின் புது மாற்றம் கருதி, சில செய்திகளையும் அவ்வப்போது சொல்லிச் செல்வோம்.

மொழியென்றால் என்ன? மொழி என்றால், குறிப்பிட்ட ஒரு கூட்டத்தினர் இடையே கருத்துப் பரிமாறுகின்ற ஒரு சாதனம்.ஆரம்பத்தில், சைகைகளால், முகக் குறிப்பினால், உடலசைவுகளால்,கருத்துப் பரிமாறப்பட்டது. காலப்போக்கில் மனிதர் தம் வளர்ச்சிக்கேற்ப மொழியைக் கண்டு பிடித்தனர். மனிதர்களின் கண்டு பிடிப்புகளில், மகத்தான கண்டு பிடிப்பு அதுதான். மொழிக் கண்டு பிடிப்பே மனிதர்களின் சிந்தனை வளர்ச்சிக்கு உதவியது. இன்றைய விஞ்ஞான முன்னேற்றம் யாவற்றிற்கும் சிந்தனை வளர்ச்சியே ஆதாரமாகியது. இது குறித்துச் சொல்லப்போனால், நீட்டிக்கொண்டே போகலாம். மொழி கருத்தை எவ்வாறு பரிமாறுகின்றது? இதுவே முதலில் எழுகின்ற கேள்வி.

(இன்னும் வரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேற்று மொழிகள்; இலக்கண ஆய்வின் அறுவடை

- பிரசாந்தி. சேகர் -

பொன்னும், மணியும், முத்தும் மட்டுமல்ல செல்வங்கள்; தமிழ் மற்றும் வேற்றுமொழி இலக்கியங்கள். சுவடிகளில் புதைந்து கிடக்கும் இலக்கணங்களும் அதன் கருத்துக்களும் கூட நம் செல்வங்களே!

மொழிகளின் வரலாறு இன்னும் ஆராய்ச்சிக் குரியதாகத்தான் இருக்கிறது. உலகளாவிய ரீதியில் மக்கள் தங்கள் மொழிகளின் திறன் அறிந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும், அவர்கள் தங்கள் தங்கள் சொந்த மொழியில் (தாய் மொழியில்) மட்டுமே பாண்டித்தியம் பெற்று வாழ்கின்றார்கள். இதில் ஒருசிலர் அவர்களில் இருந்து வேறுபட்டு வேற்றுமொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளார்கள் என்பதும் மறுக்கமுடியாத உண்மை. அந்த ரீதியில் பார்க்கும் போது, தமிழர்களாகிய நாம் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழ்ந்து அந்நாட்டு மொழியை விட மேலும் இரண்டிற்கு மேற்பட்ட மொழிகளைப் பாடசாலைகளில் கற்றுவருகின்றோம். அந்த வகையில் என்தாய் மொழியாகிய தமிழைத்தவிர டொச், ஆங்கிலம், ஸ்பானிஷ் ஆகிய மூன்று மொழிகளையும் கற்று வந்ததில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

வேற்றுமொழிகளில் இலக்கண ஆய்வைக் கருவாகக் கொண்டு கட்டுரையை எழுதுகிறேன். இலக்கணம் என்றால் என்ன? ஒரு மொழியின் இயல்பு மரபு. அம் மொழி வழங்கும் முறை முதலானவற்றை வரையறுத்துக் கூறுவது இலக்கணமாகும். சுருங்கச் சொன்னால் இலக்கணம் மொழியின் அமைப்பை விளக்குகிறது. பலமொழிகளில் பயன்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியது. அதன் இலக்கணமே. மேற்கண்ட வற்றிலிருந்து நாம் அறிவதென்னவென்றால் ஒரு நாடு தன்மொழியாலேயே (இதில் இலக்கணமும் உள்ளடக்கம்) உலகிற்கு அறிமுகமாகிறது. இலக்கணமோ தான் மலர்ந்துள்ள மணம் வீசும் இலக்கியங்களாலேயே தன்னை அறிமுகம் செய்து கொள்கின்றது. ஒவ்வொரு மொழிக்கும் அதன் தனித்தன்மை வாய்ந்த இலக்கணம் உண்டு.

அந்த ரீதியில் இன்றுவரை - எந்த மொழியிலும் இல்லாத ஒரு சிறப்பான இலக்கண வளர்ச்சியுடையது நம் தமிழ் மொழியே! தமிழ் மொழி மிகவும் இனிமையானது. கவித்திறமை கொண்டது. மிகவும் செழிப்பான அமைப்புடையது. இயல் இலக்கண வரம்பை வரையறுத்துக் கூறும் ஒரு இலக்கண நூலாகும்.
தமிழ் மொழிக்கு முதன்முதலில் இலக்கணம் வகுத்தவர் முதற்சங்கத்து அகத்திய முனிவர். அவரைத் தொடர்ந்து தொல்காப்பியர், நக்கீரர் போன்றனோர் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழ் மொழியின் இனிமையையும், அதன் தொன்மையையும் பிறமொழிகளிலிருந்து வேறுபடுத்தியதோடு மட்டுமல்லாமல் சிறப்புறவும் கூறப்பலநாட்டு மொழி வல்லுனர்கள் தவறவில்லை என்பதை நாம் அனைவரும் அறிந்து கொள்ளவேண்டும்.

16ம் நூற்றாண்டில் பல மேலை நாட்டவர்கள் வியாபாரம், மதப்பிரச்சாரம் எனும் நோக்கங்களுடன் குறிப்பாக இந்திய உபகண்டத்திற்கு வந்து சேர்ந்தனர். இவ்வாறு தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டமேலை நாட்டு அறிஞர்கள் தமிழ் மொழியின் அமைப்பு குறிப்பாக இலக்கண இலக்கண இலக்கிய வளர்ச்சி என்பவற்றையும் பெயர்ந்து வந்து இவர்களின் மொழியிலுள்ள இலக்கண, இலக்கிய வளர்ச்சியைப் பார்த்து வியப்படைகின்றோம். காலம் எப்படி மாறியிருக்கிறது!.

மேல் நாட்டு இலக்கணங்களை அறிவோமென்று யார்தான் எண்ணியிருந்தார்கள்?

அதே சமயத்தில் வேற்றுமொழியை, அதன் இலக்கணத்தை தமிழர்களாகிய நாம்கற்கும் பொழுது, பல சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. இலக்கணங்களில் சாதாரணமாகவுள்ள இடர்ப்பாடுகள் தான் என்ன? இங்கு வாழும் பிள்ளைகளுடன் பேசியறிந்ததில் தெரிந்தவை என்னவென்றால் வேற்றுமொழியை (உ+ம்: டொச் மொழியை) கற்கும் பொழுதும் பின்னர் பாண்டித்தியம் பெற்றபோதிலும், இலக்கணரீதியாக சிக்கல்கள் எழத்தான் செய்கின்றன. அதே சமயத்தில், தாய்மொழியைப் பேசுகையில் சிறிதளவு இலக்கண அறிவுடன் அதே பிள்ளைகள் மற்றவர்கள் பார்த்து ஆச்சரியப்படும் வண்ணம் தமிழைப் பேசுகின்றார்களே! இதைத்தானா 'தாய்மொழிச்சிறப்பு' என்று நம் முன்னோர்கள் முன்கூட்டியே கூறியிருக்கிறார்கள்?

இன்று தான் எம்போன்ற பலருக்கு இதன் உண்மை, மகத்துவம் புரிகின்றது.
நான் கற்ற மொழிகளை 'டொச்', ஆங்கிலம், ஸ்பானிஷ் தமிழுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது, முதழில் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை பன்மடங்காகவும், வேற்றுமைகள் (டொச்:FÄLLE , ஆங்கிலம்:CASE, ஸ்பானிஷ்:CASO) இரண்டு மடங்காகவும் காணப்படு கின்றன. எது எப்படியிருந்த போதிலும், புலம் பெயர்ந்து வந்த பெற்றோர்களின் குழந்தைகள் முக்கியமாக டொச் மொழியை அதாவது இலக்கணத்தைக் கற்கும் பொழுது மிகவும் அவஸ்தைப்படுகின்றனர். கேட்டறிந்ததில் 70 வீதத்திற்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு Artikel (DER, DIE, DAS) என்பது மிகவும் கடினமாகத் தோன்றுகிறது. இதன் காரணமாக வேற்றுமைகளிலும் தேர்ச்சியின்றிக் காணப்படுகின்றனர். இந்தக் குழப்பத்தைத் தீர்க்க தமிழினூடாக எடுத்துக்காட்டும் பொழுது மற்றமொரு தடையைத் தாண்ட வேண்டியுள்ளது. ஏனெனில், தமிழ் இலக்கணத்தில் Artikel என்பது கிடையாது.

இதில் மற்றுமொரு இடையூறையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். முதலில் அறிமுகமான வேற்று மொழியே நம் தமிழ் பேசும் பிள்ளைகளுக்கு தடுமாற்றத்தை உண்டாக்கும் பொழுது அதை அடிப்படையாக வைத்து ஆரம்பிக்கப்படும் இரண்டாவது வேற்றுமொழி எப்படி குழப்பங்களைத் தீர்க்க வழிகாட்டும்? முதலில் கற்கும் வேற்றுமொழியில் வரும் பிரச்சினைகளை, குழப்பங்களை அறிந்து ஒழுங்கு படுத்தினால் புதிய தடைகள் உருவாகுவதற்கு வாய்ப்புகள் மிகவும் குறைவாகக் காணப்படும்.

இதில் நாம் தெரிந்து கொள்வதென்னவென்றால், இலக்கண இடர்ப்பாடுகளின் ஊற்று மொழிபெயர்ப்பில் உருவாகுகின்றது. உதாரணத்திற்கு, வாக்கிய அமைப்பை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்தில் கொண்டால், தமிழ் இலக்கண வாக்கிய அமைப்புக்கு நேர்மாறான வாக்கிய அமைப்பு கருத்தில் கொண்டால், டொச், ஆங்கிலம், ஸ்பானிஷ் ஆகிய மொழிகள். இதை, SPO[Subject(எழுவாய்); Predicate(பயனிலை); Object(செயப்படுபொருள்)] என்று குறிப்பிடுவார்கள். கூர்ந்து கவனிக்க வேண்டியவை பயனிலை. மற்றும் செயப்படுபொருளின் நிலையை டொச், ஆங்கிலம்,ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் பயனிலை முன்னதாகவும், செயப்படுபொருள் முடிவிலும் வருகின்றது.

டொச்: Ich spiele Fussball
ஆங்கிலம்: I am playing football.
ஸ்பானிஷ்: (yo) juego futbol.

தமிழில் மொழிபெயர்க்கையில், மேற்கூறிய வாக்கியங்களின் இறுதியில் இருந்து ஆரம்பித்து தமிழ் வாக்கியத்தை அமைக்க வேண்டும்.

'நான் காற்பந்து விளையாடுகிறேன்.'

இப்படி வாலில் இருந்து தலையை நோக்கிச் செல்வதால் ஏற்படுகின்ற சிக்கல்கள் ஏராளம். இவற்றைச் சமாளித்துப் பொருள் குலையாமல் சிறப்பு மழுங்காமல் மொழி பெயர்ப்பது எளிதான விடயமல்ல.

இப்படிப் பல சிக்கல்களை இடர்ப்பாடுகளை முடிவின்றிச் சித்தரித்துக் கொண்டு போகலாம். இதில் ஒன்றை மட்டும் நாம் மனதில் கொள்ளவேண்டும். சிக்கல்களை எதிர்நோக்கி சமப்படுத்தும் பொழுது சிந்தனா சக்தியும் வளர்ந்து கொண்டே போவதால், உண்மையான அறிவியல் மனப்போக்கு உருவாக வழி பிறக்கின்றது.

ஆகவே, இந்தச் சிக்கல்களிலும், பல நன்மைகள் இருக்கின்றன. அதைப் பயனுள்ளதாக நாம் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். வில்லியம் ஷேக்ஸ்பியர் (William Sakespeare) சொன்ன கருத்தை இந்த சந்தர்ப்பத்தில் சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். " There is nothing either good or bad, thinking makes it!" உலகத்தில் நல்லவை கெட்டவை என்று பிரிக்கப்படுவதில்லை. நம் எண்ணங்களே அதனை உருவாக்குகின்றன. இக் கருத்து இலக்கணத்திற்கும் பொருந்தும். கடினமான இலக்கணம், இலகுவான இலக்கணம் என்று பிரிக்கப்படவில்லை. நம் எண்ணங்களே அவைகளைக் கடினமானதெனக் கருதுகின்றன.

அந்த ரீதியில் பார்க்கும் பொழுது, புலம்பெயர்ந்து வந்த போதிலும், இப்படியான இடர்பாடுகளுக்கிடையிலும், வேற்றுமொழி இலக்கண ஆய்வு, இந்தத் தேடல், இனம் காணல், தெரிந்து கொள்ளுதல் என்பன போன்ற வாய்ப்புகள் கிடைத்ததற்கு நாம் எவ்வளவோ அதிஸ்டம் செய்திருக்க வேண்டும். இதில் கிடைக்கும் "அறுவடையை" எம் போன்ற எல்லோரும் சுவைக்க வேண்டும். சுவைத்து தமிழ் இலக்கணத்தின் சிறப்பை மேலும் மெருகூட்ட எல்லோரும் தங்கள் கரங்களை நீட்டினால் தமிழ் இலக்கண வளர்ச்சிக்கு தடையேயில்லை.

"ஆங்கிலத்தைக் கற்கையிலும் அயல் மொழியைக்
கற்கையிலும் எந்த நாளும்
தீங்கனியைச் செந்தமிழைத் தென்னாட்டின்
பொன்னேட்டை உயிராய்க் கொள்வீர்!"

(பாவேந்தன் பாரதிதாசன்)

- பூரஷாந்தி சேகர் -

விரல்கள்

வயதாவதாலல்ல
பின்னிரவுக் கனவுகளில்
முகம் தெளிவற்றிருப்பது.

அதுவாக
உருவழிந்து போகிறது நிச்சயமாய்
எனச் சொல்ல இயலவில்லை.

கூத்தும் திருவிழாவும்
கொடி பறக்கும் வயல்வெளியும்
என்னுட் சிதைந்து தான் போயின.
ஒரு வேளை உன்முகமும்.

முகத்தாலன்றி, உணர்வுகளாற்தான்
கதைத்துக் கொண்டிருந்தோம்
என்பதாலா
முகம் மறக்கிறது.
வயதல்லவே, பாதி இளமையைக்
கடக்கிற பராயம்
வயதல்லவே.

இன்னமும்
அந்த விரல்களின் இளமை
ஒட்டிக்கொண்டிருக்கிறது
நெஞ்சின் மயிர்க்காட்டில்.

தெளிவற்ற முகமும்
தெளிவான விரல்களுமாய்
எப்போதும் வருகின்றன
பின்னிரவுக் கனவுகள்.

இளவாலை விஜயேந்திரன்

என்றோ ஒருநாள் எழும்.

29 வயதுமுதல் 49 வயதுவரை பெண்களும்,
29 வயதுமுதல் 54 வயதுவரை ஆண்களும்,
பங்குபற்றும் நிகழ்ச்சி.
வாரம்தோறும் வெள்ளிக்கிழமைகளில்
மாலை 6 மணியிலிருந்து 7 மணிவரை

அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்.
0044 171 564 4444

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல் செனிஸ்ரன்

- மு.புஷ்பராஜன்

11—12—1918ல் பிறந்த அலக்ஸ்சாண்டர் சொல்செனிஸ்ரன். தான் பிறப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன் தந்தையை இழந்தார். தாயாரின் பராமரிப்பில் வளர்ந்த இவர் இளவயதில் எழுத்தாளராக வர விரும்பிய போதிலும் வாலிப வயதின் மனோகர எண்ணங்களினால் அதைத் தொடரமுடியவில்லை என்றும். 1930களில் இருந்து எழுதத் தொடங்கியதாகவும். யாரும் அதைப் பிரசுரிக்க முன்வரவில்லை எனவும். தனது சுயசரிதைக் குறிப்பில் குறிப்பிடுகிறார். றொஸ்ரோவ் பல்கலைக் கழகத்தில் கணிதவியல் கற்றுத் தேறிய பின் இராணுவத்தில் பிரங்கிப்படை அதிகாரியாகப் பணியாற்றினார். இக்காலங்களில் தன் பாடசாலை நண்பனுக்கு எழுதிய கடிதத்தில் ஸ்ராலின் பற்றிய அவமரியாதைக் குறிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டதனால். 1945இல் கைது செய்யப்பட்டு எட்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்தார். இவர் சிறையில் இருக்கும் போது இவரது தாயார் இறந்தார். தாயின் கல்லறையைப் பார்க்கக் கூட இவர் அனுமதிக்கப்படவில்லை. மாசி 1953இல் விடுதலை அடைந்த போதும். ஸ்ராலின் மரணமடைந்த அன்றே (05.03.1953) தனது விடுதலையின் முதல் நாள் என்றார்.

இவரது சிறை வாழ்க்கை அனுபவத்தின் வெளிப்பாடுதான் “ஐவன் டெனிசோவிச்சின் வாழ்வில் ஒரு நாள்” என்ற குறுநாவலாகும். இது இவருக்கு உலகப்புகழை ஈட்டிக் கொடுத்தது. இக்குறுநாவலை குருசேவ் தனது ஸ்ராலினிச எதிர்ப்புக்கு ஒரு ஆயுதமாக பயன்படுத்திக் கொண்டார். இதன் பிறகு. வெளியான இவரது “முதல்வட்டம்”. “கான்சர் வாட்” ஆகிய நாவல்கள் சோவியத் ரசியாவினுள் பெரும் புயலையே உருவாக்கி விட்டன. பஸ்ரநாக்கின் “டொக்ரர் சிவாகோ” விற்கு பின் ஒரு பெரிய சர்ச்சையை உள்நாட்டிலும் உலக அளவிலும் தோற்றுவித்தன. விளைவு. எழுத்தாளர் சங்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். 1970இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதன் பின். இவர் வெளியிட்ட “குலாக் தீவுக் கூட்டங்கள்” நாவலுக்குப் பின் சோவியத் ரசியாவின் குடியுரிமை பறிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டார். கொர்பர்ச்சோவின் மறு சீரமைப்புக்குப் பின்னர் நாடு திரும்ப அனுமதிக்கப்பட்டார்.

ஸ்ராலினின் ஆட்சிக்காலத்தில் சோவியத் ரசிய வாழ்வு அச்சத்தினால் உறைந்திருந்தது. அதிகார ஆட்சியில். யார். எங்கு. எப்போது வேண்டுமானாலும் கைது செய்யப்படலாம் அல்லது காணாமல் போகலாம். அதிகாரிகளும் தமது மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்துவதும் தமது உயிரை பதவியை காப்பாற்றிக் கொள்ளவும். எதையும் செய்யத் தயாராய் இருந்தார்கள். ‘சோசலிசத்தின் எதிரி’, ‘மக்கள் எதிரி’ என்ற குற்றச்சாட்டு எல்லாவித தண்டனைகளையும் நியாயப்படுத்தப் போதுமானதாய் இருந்தது.

இந்த அவல வாழ்வில். மனித ஆளுமை. விழுமியங்கள் சிதைந்தும் தொலைந்தும் போயிருந்த இருளினுள் சமுதாய அறநெறிக் கோட்பாடுகளை தக்க வைத்துக் கொள்வதிலும். புதுப்பித்தலிலும் தான் வாழ்விற்கான அர்த்தத்தையும். ஒளியையும் நிலைநிறுத்த முடியும் என தன் படைப்புக்கள் மூலம் வலியுறுத்தினார். ஆனால். புரட்சி தன்னுடன் கூடவே கொண்டுவந்த மனித இருப்பின் அச்சுறுத்தலுக்கான அலகுகளை எதிர்ப்பதற்குப் பதிலாக சமூக மாற்றத்திற்கான புரட்சியையே எதிர்த்தார். அதனால் தான். இவர் போற்றிய மனித விழுமியங்கள் வேறு நாடுகளில் அடக்கி ஒடுக்கப்பட்டபோது. புரட்சி எதிர்ப்பு நிலைப்பாட்டில் நின்று அதை ஆதரித்தார். பிறந்த குழந்தை கழுவிய தண்ணீரை வீசுவதற்குப் பதிலாக தண்ணீருடன் குழந்தையையும் வீசிய நிலைதான் சொல்சொனிஸ்ரனின் நிலைப்பாடு.

நாவல்களுடன் சிறுகதை. நாடகம். வசனக்கதை ஆகியவைகளையும் எழுதியுள்ளார்.

சுவாசிப்பதற்கான சுதந்தரம்

- அலெக்ஸ்சாண்டர் சொல்செனிஸ்ரன்

இரவு மெல்லிய மழை. இப்பொழுது விண்ணில் கரிய மேகங்களின் அசைவு. மழை பற்றிய அழகிய திரைப்படம் போல. இடையிடையே துளித்துளியாய்....

பூத்திருந்த அப்பிள் மரத்தின் கீழ் நின்று சுவாசித்தேன். அப்பிள் மரத்தை மட்டுமல்ல. குழவுள்ள புற்களையும் ஈரம் வழியும் அதன் மினுமினுப்பையும் தான். காற்றில் பரவியுள்ள இனிய சுகந்தத்தை வார்த்தைகளால்விளக்க முடியாது. முடிந்தவரை ஆழமாய் உள்ளிழுத்தேன். என்னுள் முழுவதும் அதன் நறுமணம். கண்களைத் திறந்தும் மூடியும் சுவாசித்தேன். என்னுள் மிகுந்த பரவசம் அளித்தவை எதுவெனக் கூறமுடியவில்லை.

இது தான் நான் நம்புகிறேன் இந்தத் தனித்த. மிகவும் பெறுமதியான சுதந்திரத்தைத்தான். அச்சிறை எம்மிடம் இருந்து எடுத்து விடுகிறது. இப்பொழுது என்னால் முடிவதைப் போன்ற இயல்பான. சுவாசிப்பதற்கான சுதந்திரம். இப் பூமியின் மீதான உணவு. மது. ஒரு பெண்ணின் முத்தம். இவைகளைவிட இக்காற்றில் எழுந்துள்ள ஈரமான. செழுமையான மலர்களின் மணம் இனிமையானது.

மிருகக் காட்சிச் சாலையின் கூடுகள் போன்ற ஐந்து மாடிக் கட்டிடத்தின் ஓரத்திலுள்ள ஒரு சிறிய பூந்தோட்டம் தான் இது என்பது ஒரு பொருட்டல்ல.

மோட்டோ சைக்கிள்களின் படபடப்பு. வானொலியின் இரைச்சல். ஒலிபெருக்கியின் தொண தொணப்பு எதுவும் கேட்கவில்லை. அதே வேளை. ஒரு மெல்லிய மழைக்குப் பின் அப்பிள் மரத்தின் கீழ் புதிய காற்றைச் சுவாசித்தல். இன்னும் சில காலம் நாங்கள் உயிர் வாழலாம்.

— மூலம்: ரஷ்யா - ஆங்கிலம் வழி தமிழ் : மு.புஷ்பராஜன்

வாழ்விடம்

- அலெக்ஸ்சாண்டர் சொல்செனிஸ்ரன்

உக்கிய மரக்குற்றியுள் எறும்புகளின் குடியிருப்பை அறியாது அதை நெருப்பினுள் எறிந்தேன்.

சுவாலையில் குற்றி எரிந்து சடசடத்தது. எறும்புகள் தடுமாற்றத்துடன் வெளிவந்து அங்கும். இங்கும் ஓடின. வெந்த குற்றி நுனியை நோக்கி ஓடிய அவை துடித்துப் புரண்டு நெளிந்தன. குற்றியை எடுத்து அருகில் உருட்டிவிட்டேன். அநேக எறும்புகள் சுதாகரித்து மணலில் தப்பிச் சென்றன.

ஆனால் அதிசயம். அவை நெருப்பை விட்டு ஓடிச்செல்லவில்லை.

மிகவிரைவில். பயத்திலிருந்து மீண்டும். ஒரு வகை வேகத்துடன் திரும்பிவந்து,கைவிடப்பட்ட தமது வாழ்விடத்தைச் சுற்றிச் சுற்றி வந்தன. அவைகளிற் பல எரிந்துகொண்டிருந்த மரக்குற்றியில் மீண்டும் ஏறின. அவற்றின் மேல் ஓடின. எரிந்து இறந்தன.

மூலம்: ரஷ்யா
ஆங்கிலம் வழி தமிழ் : மு.புஷ்பராஜன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு மழை நேரத்துச் சோகம் போல

அகிரா

I

மழை நேரத்துச் சோகம் அறிவாயோ?

மழை நேரத்தைப் பற்றி உனக்குத் தெரியும். அதிகம் தெரியும். (வெள்ளம் அளைந்திருப்பாய், வழுக்கி விழுந்திருப்பாய்) ஆனால் மழை நேரத்தில் வருகிற சோகம் பற்றி உனக்கென்னதெரியும்? அதைப் புரிய வைப்பதென்பது சற்றுச் சிரமம் தான்.

ஒரு மழைக் காலத்து மாலைப்பொழுதில் புல் வெளியில் நடந்திருக்கிறாயா? உயர்ந்த கட்டிடங்களின் அருகே நின்றிருக்கிறாயா? நிறையக் கிளைகள், இலைகள் கொண்ட பெரிய மரங்களின் கீழே இருந்திருக்கிறாயா?

கொஞ்சம் கவனி!

இந்த இடத்தில் ஒரு மெலிதான சோகம் உன் நெஞ்சை உசுப்பவில்லையா? அதிர வைக்க வில்லையா? முகில்களின் கறுப்புத் திரட்சியாவும் உன் நெஞ்சில் கவிவது போன்ற உணர்வு வரவில்லையா?

ஏன் அதிகம் போவான் ? ....

மழை பெய்து ஓய்ந்த ஒரு பின்னேரத்தில் தேநீர் அருந்தி நீ தனித்திருந்தபடி ஏதேனும் ஒரு நாவல் அல்லது சிறுகதையை (அன்ரன் செக்கோவின் 'மாடவீடு' ஞாபகமிருக்கிறதா?) வாசிக்கும் போது அந்தச் சோகம் இன்னும் நன்றாக உணரப்படும்.

இது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நெஞ்சை நிறைக்கிற சோகம். மழைக்காலம் மிகவும் அழகானது என்பது பற்றி நான் விவாதிக்க வரவில்லை. மிக மிக அழகு. தூறலும், சிணுங்கலும், பெருமழையும், வெள்ளமும், ஊரே பச்சையாகப் பூத்துக் குலுங்குகின்ற இரம்மியமும், போர்த்துக் குடங்கிக் கொள்கிற நித்திரையும்.. அழகோ கொள்ளை அழகு! ஆதலினால் மழைக்காலத்தை நான் வெறுக்கவில்லை. அதிலுள்ள சோகத்தைத்தான் நான் குறிப்பிடுகின்றேன். அது கூட நினைத்து நினைத்து சிலிர்க்கக் கூடிய சோகம். மனதின் மெலிதான நரம்புகள் மீது தொடர்ந்து ஒரு அதிர்வு இருக்குமாப்போல......

இந்த அனுபவம் இதுவரை உனக்குக் கிட்ட வில்லையா? பரவாயில்லை இனி வரும் மழைக் காலத்தைக் கொஞ்சம் கவனி.

II

தாடியைப் பற்றியது தான் முக்கிய பிரச்சனை என்றால் அதை என்னால் நம்பமுடிவில்லை. அது கூட சும்மா ஒரு கதைக்குத்தான்.

மீரா நேற்று வந்தாள், இண்டைக்கு வந்தாள், என்பதை விட நாளைக்கு வருவாள், இன்னும் நாலு வருடத்திற்கு வருவாள், என்பது தான் ஆறுதல் தாற விசயம்.

அது ஒரு காலம் !

பல்கலைக்கழகத்தின் முதலாம் வருடம். மூன்று பிரதான பாடங்களும் இருவரிற்கும் ஒன்றாயிருக்கக் கண்டு 'வெரி குட்' என்றாள். எல்லாக்குழுவிலும் என்னோடு இணைந்தாள்.

(உதயன் அப்போது பொறாமைப் பட்டான்) எனது அறிவு அதனைக்கண்டு மயங்கவில்லை. தெய்வீகம் அது இது என்று இதைப்பற்றியெல்லாம் நான் அலட்டிக்கொள்ளவுமில்லை.



ஆனால் இதைப்பற்றியெல்லாம் கொஞ்சம் யோசிக்க வேணும். அந்தந்தக் காலத்திற்குத் துணையைத் தேடுவதுபற்றி, மனதிற்கு ஒத்திருந்தால், கல்யாணம் வரைக்கும் போகலாம் என்பது பற்றி, இடையில் வெறும் பேத்தல் இல்லாமல் நல்ல நண்பர்களாக இருப்பது பற்றி, இதையெல்லாம் யோசிக்க வேணும்தான்.

ஒன்றாக 'லெக்சரி'ற்குப் போவது, வருவது நிறைய நேரங்களில் மரங்களுக்கு கீழேயும், 'கன்ரீ'னிற் குள்ளேயும் இருந்து கதைப்பது, காலையில் நான் 'கம்பஸ்' போகும் வரை அவள் என்னைக் காணாமல் தேடுவது... (அவள் கண்களில் அதனை நான் கண்டேன்) பலர் காதலர் என்று நினைக்குமாப் போல் இதன் உச்சம் கேட்கலாம் போல் தோன்றியது.

"மீரா உங்களோடை கொஞ்சம் கதைக்க வேணும்."

"என்ன விசயம்"?

"இது அந்தரங்கமானது பிறகு கதைப்பம்"

"பிற கெண்டால்......?" "பிறகு பிறகுதான்..."

ஐந்து மணிக்கு லெக்சர் முடிந்த போது தாவி வந்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லெக்சரில் நான் என்ன கதைப்பது, எப்படி கதைப்பது என்று ஒத்திகை பார்த்தேன்.

"ரவி என்ன விசயம்? பிறகு கதைப்பமெண்டியள், இப்ப கட்டாயம் கதைக்க வேணும். எனக்கு 'லெக்சர்' ஒண்டும் உள்ளடேல்லை. இப்ப கதைக்காட்டி பிறகு இரவைக்கு நித்திரையும் இல்லை..."

என் வாயால் அதைக்கேட்க ஆவல் படுகிறாள். மூன்று மாதமாக இதுவரை பொத்தி வைத்ததை உடைத்து விடுவோம். திறந்து காட்டுவோம்.

"வாங்கோ அந்த மரத்துக்குக் கீழை இருப்போம்..."

புத்தகக்கட்டை நெஞ்சில் அணைத்து அயலில் வந்தாள். சுருண்ட முன் மயிர்கள் அவள் நெற்றியை அளைந்தன. கறுப்பு பொட்டு நெற்றியில் இட்டிருந்தாள். ஓம் என்றால், அதை சிவப்பாக்குவேன். முகத்தை இப்போது சிவப்பாக் குவேன்!

கல்லாசனத்தில் என் முன் அமர்ந்தாள். நேரே கண்களைப்பார்த்தாள். நான் முகத்தைத் திருப்பினேன். அது மஞ்சள் நேரம்! மாலைப் பொழுதின் மஞ்சள் பின்னணியில் நூல் நிலையக்கட்டிடம் முகில்கள் கூராக இருந்தன. சற்று எட்டிப்பார்த்தால் சூரியன் வட்டவடிவமாகத் தகதகத்துக்கொண்டிருந்தான். சூரியனின் மஞ்சள் கதிர்கள் முகில்களுக்குள் ஊடுருவியது. எதிரே வெறிச்சிட்ட நீலவானம். மகிழ்ச்சி ஆட்கொண்டது மெதுவா விசயத்தைத் தொடங்கினேன்.

"மீரா இதைப்பற்றி நீங்கள் என்ன நினைப்பிங்களோ எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு இதை டக் கெண்டு கேக்க வேணும் போலை. இடையிலை நீங்கள் ஒண்டும் கதைக்க வேண்டாம். நான் கதைச்சு முடிச்சாப்பிறகு நீங்கள் சொல்லுறதைச் சொல்லுங்கோ. எனக்கு உங்களிலை விருப்பம். இது மற்ற நான் கதைக்கிற கேள்சிலை இருந்து விலகி பிரத்தியேகமான விருப்பம். எனக்கு உங்கன்ரை போக்கு பிடிச்சுது. கதைகள் பிடிச்சுது. நீங்கள் என்னுடையவள் எண்டதிலை எனக்குச் சந்தோசம் இருக்கு. உங்கன்ரை ஒவ்வொரு அசைவும் என்னை நல்லாப் பாதிக்குது. நீங்கள் எனக்குப் பக்கத்திலை இருக்கிறதெண்டால் எந்த நேரமும் சோளகம் வீசுற மாதிரித்தான். நீங்கள் என்னோடை இருப்பியள் எண்டால் வாழ்க்கை சந்தோசமாய் இருக்கும் எண்டு நினைக்கிறன்.

இதிலை உங்கன்ரை விருப்பமும் இருக்கு. என்னை வாழ்க்கைத் துணையாக்க உங்களுக்கு விருப்பம் இல்லாமல் இருக்கலாம் இதிலை நீங்கள் எந்த முடிவை எடுத்தாலும் எனக்குப்பிரச்சனை இல்லை உங்களுக்கு என்னைப் பிடிக்காமல் போனாலும் பரவாயில்லை. நாங்கள் இந்த மாதிரியே நல்ல நண்பர்களாக இருக்கலாம். நீங்கள் இதைப்புரிஞ்சு கொள்ளுவியள் எண்டுதான் இவ்வளவும் நான் சொன்னனான். நீங்கள் இண்டைக்கு முடிவு சொல்ல வேணுமெண்டில்லை.. பிறகும் சொல்லலாம். ஆனால் எங்கன்ரை நட்பு முறியப்பிடாது......"

பிறகு சிரித்துக்கொண்டு கூறினேன். "இரவைக்கு நித்திரை இல்லாமல் பண்ணினதுக்கு மன்னிச்சுக் கொள்ளுங்கோ."

இவ்வளவும் மீராவின் முகத்தைப் பார்க்காமலே தான் சொன்னேன். அவளும் குனிந்துகொண்டுதான் இருந்தாள்.

அவள் பிறகு நிமிர்ந்து சொன்னாள். "ரவி உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா? ஏற்கனவே எனக்கு ஒருத்தர் இருக்கிறார். இவ்வளவு காலமும் உங்களுக்கு இதைப்பற்றி நான் சொல்லாதது எண்டது மனவருத்தமாக இருக்குது. நான் பெரிய பிழை விட்டிட்டன் போலை. உங்களுக்கு நிறையக் கனவுகளை வளர்த்திட்டன். உங்களுக்கு முதலே நான் விசயத்தைச் சொல்லியிருக்கவேணும். அது என்ரை பிழைதான். எனக்கு என்ன சொல்லுறதெண்டே தெரியேல்லை. மன்னிச்சுக் கொள்ளுங்கோ...."

அவள் கண்ணில் கண்ணீர் கோடாக இறங்கியது. அதைத் துடைத்துவிட என் கைக்கு இப்போது உரிமை இல்லை.

"சீச்சீ.... அப்படியெல்லாம் சொல்லாதையுங்கோ. இதைப் பெரிசா எடுக்க வேண்டாம். இதுக்குப் போய் அழுது கொண்டு ......"

பின் சிறிதுநேரம் என்னவோ நினைத்தாள். தன் புத்தகங்களைத் தூக்கிப் போனாள். சூரியன் மறைகிறபோது நான் தனிய அந்த மரத்தின் கீழ் இருந்தேன். வெறிச்சிட்ட நீலவானம் என் எதிரே நின்றது.

பிறகு, அடுத்த நாள், எல்லாம் ஒழுங்காக இருந்தது. நீல வானத்தில் சூரியன் இரண்டு பனை ஏறியிருந்தான். மீரா வந்தாள். சிரித்தாள். "குட்மோனிங்....." ஒரு காலைப்பூ மலர்ந்தது. கதைத்தாள். நேற்று ஒண்டும் நடவாதது மாதிரி இருந்தாள். பால் சாலைக்கு என்னுடன் வந்து பால் குடித்தாள். நான் அவளுடன் கதைக்கும் போதெல்லாம் ஒரு திரை விலகியது போல அல்லாது மனம் சுத்தமாக்கப்பட்டது போல உணர்ந்தேன்.

பிறகு பிறகெல்லாம் அவளுடன் நிறையக் கதை இன்னும் நெருக்கமானேன்.

எப்பிடி ஆளெண்டன். வெள்ளைப்பெடியன் என்று சொல்லி, சின்னி விரலையும் காட்டினாள். (ஒல்லியானவன்) அவள் காதலைப் பற்றிக்கதை போனது: ஏ.எல் படிக்கிறபோது காதல். பின்னேர ரியூசன் முடிய பின்னால் துரத்தினான். வழிந்து கொண்டு திரிந்தான். வெறுப்புக்காட்டினேன். பிறகு பாவமாக இருந்து. கதைத்தேன். பழகினேன். காதலைப்பற்றிக் கதைக்க வேண்டாம். என்றுதான் சொன்னேன். ஆனால் அவன் நல்லவன். நானே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆச்சி துணை

ஐ. நடராசா
"புங்கவி"
அனலைதீவு

ஆசிய ஜவுளித்தினுசுகள், பரிசுப்பொருட்கள்,
எவர்சில்வர் பொருட்கள், தங்க நகைகள், உணவுப் பொருட்கள்
ஆகியவற்றின் மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்
Groß und Einzelhandel mit Asiatischen Textilien Geschenk Artikeln
Schmuck und Lebensmittel

I. Nadarasa
"Aachchithunai"
Salinenstr. 1/1
74177 Bad Friedrichs
Telephone :- 07136/3
Fax :- 07136 / 3921

* புத்தம் புதுப் பொலிவுடன் ஆச்சிதுணை ஸ்தாபனம் .
* 1979 ம் ஆண்டிலிருந்து முதல் தமிழர் கடை - (ஜெர்மனியில்)
* வாகனங்கள் தரிக்க வசதியான வீதியோரம்.
* சொந்தக் கட்டிடம், சம்பளத்திற்கு நபரின்மை,
பெருந்தொகையான கொள்முதல்கள்
* சனி ஞாயிறு விடுமுறை நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

மணவறை, மணிச்சோடணை, அதிநுட்பமடங்கிய வீடியோக் கமரா, போட்டோக் கமரா, மாலைகள், குருக்கள் அனைத்துக்கும்

பிரபல எழுத்தாளர்களின் கதைப்புத்தகங்கள், ஈழநாடு, ஈழமுரசு, தினமுரசு, புலம் , ஞாயிறுதோறும் மரக்கறி வகைகள், எண்சாஸ்திரம், குறிப்பெழுதல், திருமணப் பொருத்தம், மணமகன் மணமகள்கள் தேவை, கடலுணவுப் பொருட்கள், எவர்சில்வர் பொருட்கள், அலங்கார அன்பளிப்புப் பொருட்கள், காஞ்சிபுரம், பனாரிஸ், மைசூர் சில்க், பட்டவிளை, லவ் இந்தியா, ஆச்சிதுணை ஆபூர்பா, போன்ற அனைத்துச் சாறிகள் பெற்றுக் கொள்ள

"AACHCHITHUNAI"

Salinenstr.1/1, 74177 Bad Friedrichshall, Germany.
Tel:07136/ 3921, Fax: 07136 / 3921

www.tamilarangam.net

உங்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் ஜவுளி சமுத்திரம்

6 Kumars Silk House

எங்களிடம் நீங்கள் விரும்பும் நவீன டிசைன்களில் மணமகளுக்கு வேண்டிய கூறைப்புடவைகள், கூறைகள், பனாரஸ், காஞ்சிபுரம், மணிப்புரி, கோலம், றங்கோலி, காயத்திரி, மைசூர், காஸ்மீர், சில்க் மற்றும் பிளவுஸ் துணிகள், றெடிமேட் பிளவுசுகள், பாவாடைத் துணிகள், பஞ்சாபி வகைகள், மணப்பெண்ணுக்குத் தேவையான அலங்காரப் பொருட்கள், மெட்டி முதல் உச்சிப்பட்டம் வரை,

மணமகனுக்குத் தேவையான சர்வாணி, குர்த்தாஸ், பட்டுவேட்டி, நூல்வேட்டி, சாரம், சிறுவர் சிறுமியர்களுக்கான அமெரிக்க சிங்கப்பூர் உடைகள், மணப்பெண்ணுக்கு அலங்காரப் பொருட்கள், பிளவுஸ் தையல் இலவசம், மணமகனுக்கு சர்வாணி இலவசம்.

பல வகை டிசைன்களில் பிளவுஸ் உடனுக்குடன் தைத்துத்தரப்படும். 100 பவுணுக்கு மேல் சாறி வாங்கினால் பிளவுஸ் தையல் இலவசம்.

The most exclusive Sarees (Banaras, Kanchipuram, Mysoore silk, Kashmir silk, Japan Nylex and Cotton sarees) Gents wear, Children wear and costume Jewellery in the UK. If you are in London, do visit us for artistic collection in pure silk fabrics and sarees

285, High Street North,
Manor Park, London E12 6SL.
Tel: 0181 471 5742 Fax: 0181 471 5742

www.tamilarangam.net

ஆச்சி துணை

1 ஆவது பரிசு:- 500 டொச் மார்க் பெறுமதியான பொருட்கள்
2 ஆவது பரிசு:- 250 டொச் மார்க் பெறுமதியான பொருட்கள்
3 ஆவது பரிசு:- 100 டொச் மார்க் பெறுமதியான பொருட்கள்

இங்கு வெட்டி அனுப்பவும்

சொற்சிலம்பம்

1	2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31	32
33	34	35	36	37	38	39	40
41	42	43	44	45	46	47	48
49	50	51	52	53	54	55	56
57	58	59	60	61	62	63	64

சொற்சிலம்பம் - 1

பெயர்: ....

முகவரி: ....

....

....

கையொப்பம்: ....

அனுப்பவேண்டிய முகவரி:
சொற்சிலம்பம் 1
Aachchthunai
Salinenstr.1/1,
74177 Bad Friedrichshall.

இங்கு வெட்டி அனுப்பவும்

இடமிருந்து வலம்:

(1) கண்ணில்லாதவனைக் குறிக்கும் (5)
(6) இருபொருள் படப்பேசுவது (3)
(17) ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று (8)
(25) காமன் மனைவி (2)
(44) இது கவரும் தன்மை கொண்டது (4)
(50) பரதனின் தந்தை இவன் (5)
(57) காடும் காடு சார்ந்த இடமும் (3)

வலமிருந்து - இடம்

(15) இலச்சனை என்பதன் ஒத்தசொல் (4)
(29) சிறிய நீர் ஓட்டம். (3)
(37) மாதம் என்பதன் ஒத்த கருத்துள்ள சொல் (4)
(64) நிர்மூலம் (5)

மேலிருந்து கீழ்:

(1) சிங்கம் (2)
(4) காகத்தின் ஒலி ஏவல் சொல்லாக உள்ளது (2)
(6) புத்தரின் இயற்பெயர் (7)
(10) இளம் பெண் (3)
(5) வயிற்றுக் கோளாறுகளைச் சீராக்குவதால் வந்த காரணப்பெயர்(4)
(19) பாடல் புனைபவன் (2)
(20) நவரசங்களில் ஒன்று(6)
(43) இராமனைப் பெற்றவள் (3)
(48) தயிர் கடைய உதவும் (3)

கீழிருந்து மேல்:

(29) சூரியன் மறையும் நேரம் (3)
(40) திருமணமாகாத இளம் பெண்கள் இதை அணிவார்கள் (3)

போட்டி விதிகள்: 1. அமைப்பாளரின் முடிவு இறுதியானது.
2. ஆச்சி துணை நிறுவகத்தைச் சார்ந்தோரும், IBC நிறுவனத்தைச் சார்ந்தோரும் இப்போட்டியில் பங்கு பெற்ற முடியாது.
குறிப்புகளின் பின்னால் அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கம் அந்தச் சொல்லில் உள்ள மொத்த எழுத்துக்களை குறிக்கும்.

* பெப்ரவரி 15ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

RASAM SILKS

ராசம் சில்க்ஸ்

பரதநாட்டிய உடைகள் முதல், பஞ்சாபி, சிறுவர்களுக்கான அமெரிக்க
சிங்கப்பூர் உடைகள், எழுச்சி மிகு டிசைன்களில்
மங்களப் பட்டுக் கூறைகள், சுமங்கலிக் கூறைகள், காஞ்சிபுரம்
முதல் ஸ்ரெயின் காட் கௌரி - காயத்திரி சில்க், அபூர்வ றங்கோலி,
கோலம், றோஜா சாறிகள், மெட்டி, கொலுசு, பூமாலைகள், பட்டு
வேட்டிகள், அலங்கார நகைகள், மணப்பெண்ணை அலங்கரித்தல்,
வீடியோ, போட்டோ சகல தேவைகளுக்கும்

ராசம் சில்க்ஸ்

சாரீரம் இல்லாமல் சங்கீதமா?
ராசம் சில்க்ஸ் காணாமல் சம்சாரமா?

Rasam Silks

115, Altmore Avenue, Eastham, London E6.

Tel: 0181 552 6060

தரமான
கடலுணவுப்
பொருட்களுக்கு
என்றும் நினைவில்
வைத்திருங்கள்

KASTURI

கணவாய்,
நண்டு, இறால், கடல்
உணவுகள்
அனைத்தையும் இறக்குமதி
செய்து
விநியோகிக்கிறார்கள்

Import & Export
Fresh & Frozen Seafood Specialists

இல்லத்தரசிகள் நாடவேண்டிய இடம்

கஸ்தூரி நிறுவனம்

மளிகைப் பொருட்களின் ஏக விநியோகஸ்தர்கள்

290B, Ealing Road, Middlesex HA0 4LL. U.K

Tel: 0181 903 0827, Fax: 0181 900 1085

www.tamilarangam.net

காதலிக்கத் தொடங்கினேன். "வீட்டிலை பெரிய எதிர்ப்பு அவர் வேறை சாதி நான் வீட்டாரோடை பிரச்சனை-தான்" என்றாள்.

ஒரு நாளைக்கு அறிமுகப்படுத்தி விடுங்கோ என்றேன். அது செய்யாமலா? என்றாள். பகிடி பகிடியாக இதையும் சொன்னாள். "உங்களுக்கு அவசரமாக ஒரு பெட்டை பிடிச்சுத்தாறன்......" "வனஜா எப்பிடி? அவளுக்கு உங்களில் நல்ல விருப்பம் போல......"

நான் சிரித்துக் கொண்டு காதைப் பொத்தி இருந்தேன். எங்கள் நட்பு மேலும் இறுகியது என்றே சொல்ல வேண்டும்.

அனேகமாக நான் கூப்பிட்ட இடத்திற்கெல்லாம் வந்தாள். கம்பசிலிருந்து நாங்கள் ஊர் ஊராக வீடு வீடாகச் செய்த பிரச்சாரத்துக்கெல்லாம் என்னோடு துணையாக இருந்தாள். நாய்களுக்கு மிகப் பயந்தாள். கனவாகப் பூக்கள் (முக்கியமாக ரோஜாப்பூ) கொய்தாள். "ஐஸ்கிறீம் வாங்கித் தாங்கோ" என்று நச்சரித்தாள்.

"காலுழையுது தூக்கிக்கொண்டு போங்கோ ...." என்றாள்.

"நான் துக்கிக் கொண்டு போவேன் நீங்கள் வருவீங்களோ?"

"ஓம்" என்று கிட்ட வந்தாள். சின்னி விரலைக் காட்டி "இவனுக்கு என்ன பதில் சொல்லுகிறது?" என்றேன் சிரித்தாள்.

"அவர் தூக்கினால் முறிஞ்சு விழுந்து விடுவார்" என்றாள்.

எல்லாம் நன்றாக ஞாபகம் இருக்கிறது. மனதின் மெல்லிய இழைகள் மீது தொடர்ந்து அதிர்வு இருக்கிற நினைவுகள். மழை பெய்த போது ஒன்றாகக் குடைக்குள் போனதெல்லாம் ஒழுங்கையில் இருந்த வெள்ளம் போல மனதில் தேங்கி நின்றது.

மீரா எனக்கு நிறைய நோட்ஸ் கொப்பி பண்ணித் தருவாள். ரியூற்ஸ் எழுதித் தருவாள் என்பதைவிட, ஒரு நாள் ஏதோ ஒரு கதையில் எனக்கு வடை பிடிக்கும் என்பதை வைத்து அடுத்த நாள் வடைப்பார்சல் கொண்டு வந்து தந்தாள். (இந்த வடை தந்ததிலும் பார்க்க மேல் மாடியின் தனது அறையிலிருந்து கூப்பிட்டு ஓடி வந்து மூச்சு வாங்க "இந்தாங்கோ" என்று தந்தது எவ்வளவு பசுமையான நினைவு!)

காலப் போக்கில் எனது தாடியின் சிறுஅரும்பல் கண்டு முகம் சுளித்தாள். வெய்யில் காலமென்று அப்போது நான் வேர்த்திருந்தேன்.

"என்ன தாடிக்கோலம்? எனக்கு தாடிக்காரரைக் கண்டால் பிடிக்காது." என்று மீரா சொன்னாள்.

"ராகிங்காலை இவ்வளவு காலமும் தாடி வளர்க்கேல்லை. இந்த முறை தாடி வளர்க்க வேணும் போலை" என்றேன்.

"வேண்டாம் வேண்டாம் வெட்டுங்கோ......."

எனக்கு வெட்ட மனம் ஒப்பவில்லை. கிடக்கட்டும். அடிக்கடி தாடியைப் பற்றிப் பிரஸ்தாபித்தாள்.

"சிச் சீ.... அரியண்டம் ....."

"அது இயற்கையானது", என்றேன் நான்.

ஒரு முறை கொஞ்சம் ஆச்சரியம் தரத்தக்கதாகக் கதைத்தாள்.

"வெட்டுங்கோ அரியண்டமாயிருக்கு ஏன் முகத்தைக் கெடுக்கவேணும்?. நான் உங்களுக்குப் பக்கத்திலை. படுக்கிறவளாயிருந்தால், நீங்கள் நித்திரை யாயிருக்கேக்கை வெட்டிடுவன்...."

"அதுக்கு நான் குடுத்து வைக்கேல்லை...." என்று முணுமுணுத்தேன்.

சிரித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.

"சோஷல்" அன்றுதான் கொஞ்சம் வித்தியாசமாகக் கதைத்தாள். "இண்டைக்கு சோஷலுக்கு வாறீங்களா?.. வருவீங்கள் தானே? வரேக்கை தாடியை வெட்டிக் கொண்டு வரவேணும். தாடியை வெட்டாட்டில் உங்களோடை நான் கதைக்கமாட்டேன் ...."

நான் அப்போது புன்னகை சிந்தி அதைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

"இஞ்சை வாங்கோ உங்களோட ஒரு கதை. என்ன நான் கிடைக்கேல்லையெண்டா தாடி வளர்க்கிறியள்..?"

அப்போது எனக்குச் சரியான ஆத்திரம் வந்தது. கவலையுமாகிப் போய்ச்சு!

"இவ்வளவு காலமும் என்னோடை திரிஞ்சு இதா புரிஞ்சு கொண்டியள்?"

"சரி, சரி அதை விடுங்கோ. இண்டைக்கு சோஷலிற்கு வரேக்கை தாடி வெட்டிக்கொண்டு வரவேணும். சரியா?" போனாள்.

போனேன்.

இரவு சோஷலிற்குப் போன போது நீலச் சேலை கட்டி கூந்தலைக்குதிரைவால் முடிச்சுப்போட்டு, மீரா மிக அழகாக இருந்தாள். ஒரு முறை அதிகமாக வயிறெரிந்தது பற்றிச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. வாசல் வரை தன் பார்வையால் காத்திருந்தாள். நான் கிட்டபோய் "நல்ல வடிவா இருக்கிறியள்" என்றேன். நான் கொஞ்சம் வழிந்தேனோ தெரியவில்லை. அவள் சின்னச் செம்மையான சிரிப்பு. பிறகு தாடியைப் பார்த்தாள்.

"மீரா மன்னிச்சுக் கொள்ளுங்கோ" என்றேன். பிறகு சிரித்துக் கொண்டு, "மீரா வானத்தை வில்லா வளைக்க வேணுமென்டால் வளைக்கிறேன். சந்திர மண்டலத்திலை இருந்து அரிசிகொண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரவேணுமெண்டால், அதுவும் செய்யிறன். தாடியைப் பற்றிக் கதைக்காதையுங்கோ". அவள் சிரித்துக் கொண்டு காதைப் பொத்தினாள்.

குதூகலமாக இருப்பதற்காகக் குடிக்கிறது எனக்கு அவ்வளவு பெரிதாகத் தெரியவில்லை. வாயை நனைத்த போதே வெறி வந்தது. வயிற்றுக்குள்ளும் கொஞ்சம் போய்விட்டால் எப்படி இருக்கும்? இது பெண்களெல்லோரும் போன பிறகு, சாமம் போல நடந்த நிகழ்ச்சி.

ஆனால், அடுத்த நாள் எந்தப் படுபாவியோ மீராவுக்குப் போய் அண்டியிருக்கிறான்.

அடுத்த நாள் மீரா கம்பஸிலை என்னக்கண்டவுடன் மூஞ்சியை நீட்டினாள். விரிவுரைகளுக்கும் சமூக மளிக்க வில்லை தன் அறைக்கு போய் விட்டாள்.

நான் ஒன்றும் புரிபடாதவனாக இருந்தேன்.

நான் அவள் அறையின் பக்கத்தில் சைக்கிளில் சென்றபோது, மேலேயிருந்து கூப்பிட்டாள். காத்திருந்தாள் போலும்.... கீழே ஓடி வந்தாள்.

அந்தக் கடுங்கோடை காலத்து வெயிலுக்கு காற்று சிறிதும் அசைவற்று எந்த இலையும் அலுங்காமல் மரங்கள் உறைந்த போய் இருக்க,

"ரவி உங்களோடை கொஞ்சம் கதை இருக்கு" என்றாள்.

இரசிக்கக்கூடிய கதை இல்லை என்பது எனக்குப் புரிந்தது.

பிறகு, "ராத்திரி நாங்கள் போன பிறகு என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

நான் "ஒண்டுமில்லை" என்றேன் சாதாரணமாக.

"ஒண்டுமில்லையோ?" தலையை ஆட்டினாள் ஆட்டலில் பூகம்பம் ஒன்று வெடிக்க இருப்பது எனக்குத் தெரிந்தது. இண்டைக்கு நான் கம்பஸிற்குப் போக ஒருத்தன் என்னட்டை வந்து, "ரவி நல்ல பிள்ளை நல்ல பிள்ளை.. எண்டு பின்னாலை வழிஞ்சியளே, ரவியை ராத்திரிப் பார்த்தால் சீவியத்திலை கதைச்சிருக்க மாட்டியள்" எண்டான். நான் "சீ ரவி அப்படியெல்லாம் செய்யமாட்டார்" எண்டன். "ரவி குடிச்சதை என்னால் நிருபிக்க ஏலும்" எண்டான் எனக்குச் சரியான ஆத்திரமாயும் அழுகையாயும் போச்சு. "ஏன் ரவி இப்பிடி? இப்பிடியெண்டால் உங்களோடை நான் பழகியே இருக்க மாட்டன் நான் இந்தக் கம்பஸிலை ஆரோடை கூடப்பழகிறன்? உங்களோட மாத்திரம் தானே? நீங்கள் இப்படியெண்டால்...? சீ.. சரியான வெக்கமாயிருக்கு..." முகமெல்லாம் சிவந்தது கண்ணீர் தளும்பியது.

"குட்பை" என்று கொண்டு மாடிப்படியேறிப் பாய்ந்தாள்.

அந்த 'ஒருத்தன்' விக்கி என்பது எனக்குத் தெரியும். மீராவுக்கு வழிந்து பார்த்தவன்.

அடுத்த நாள், கம்பஸிலை மீரா என்னைக் கண்ட போது மூஞ்சியைத் திருப்பினாள். நான் ஒன்றும் பேசவில்லை. பிறகு வலிய வந்து கதைத்தாள். "ஏன் ரவி இப்படியெல்லாம் நடக்கிறியள்?. பிளீஸ், இனி நீங்கள் உந்த வேலையொண்டும் செய்யாதைங்கோ. தாடியையும் வெட்டுங்கோ. எனக்காகத் தாடியை வெட்டமாட்டீங்களா?" என்று கேட்டாள்.

பிறகு நூல் நிலையத்திலிருந்து நான் புறப்படுகிற போது, அதற்காக் காத்திருந்தவள் போல, என்னுடன் சேர்ந்து நடந்து "நீங்கள் அண்டைக்குக்குடிச்சதுக்கும், இந்தத் தாடிக்கும் நான் தான் காரணமோ?" என்று இரக்கமாகக் கேட்டாள்.

இம்முறை நான் கோபப் படவில்லை. இவளால் என்னைப் புரிய முடியாது, என்று எனக்குப் புரிந்தது. "சீச்சீ..... அப்படியில்லை...." என்றேன். சொன்ன போது பரமேஸ்வரன் கோயில் வாசலுக்கு வந்திருந்தோம். அவள் அரைநிமிஷம் நின்று கண்ணை மூடி முணுமுணுத்து விட்டு வந்தாள். "ரவிக்கு நல்ல புத்தியைக் குடு" என்று அவள் பரமேஸ்வரனை வேண்டினாளோ என்னவோ? பரமேஸ்வரன் தான் ஏதும் சொன்னாரோ? பிறகு பிறகெல்லாம் அவள் என்னுடன் கதையைக் குறைத்துக் கொண்டாள் போலத்தான் எனக்குத் தோன்றியது. எதையோ இழந்து கொண்டிருக்கின்றேனோ, எனும் உணர்வு அப்போது எனக்கு வந்தது. இராமநாதன் மண்டபத்தில் நடக்கின்ற விரிவுரைகளில் எனக்கு அருகில் இருக்காமல் தூரப்போய் இருந்து கொண்டாள். சில சமயங்களில், எதிர்ப்படுகிறபோது கண்ணில் எந்த உயிரும் அற்று சும்மா பார்த்து ஒரு மென்முறுவலுடன். சரி.

அவ்வாறான சந்தர்ப்பங்களில், எனக்கு நெஞ்சில் வலித்தது. குளம் கட்டி நிற்கிற கண்களும், அதன் பார்வை வசீகரமும், கண்கள் விரிய நேரே கண் பார்த்து கதைக்கிற அழகும், என்னவோ எனக்கு இனிக்கிடையாதா? என்று தோன்றியது.

பின்னும் பொழுதுகள் போக, ஒரு மாலை நேரத்தில், மரத்தின் கீழ், கல்லாசனத்தில் அமர்ந்து நான் கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன்.

மீரா பக்கத்தில் வந்து அமர்ந்தாள். "என்ன கண்கள் கலங்கியிருக்குமாப் போல...." என்று கேட்டாள்.

"சீச்சீ..., அப்பிடியில்லை....."

சிறிது நேரம் போசாது இருந்தாள். "நீங்கள் ஏன் என்னோடை அவ்வளவு கதைக்கிறேல்லை" என்று பிறகு கேட்டாள்.

நான் துக்கத்துடன் புன்னகையை வீசினேன். அது அவளைத் தொட்டிருக்க வேண்டும். "நீங்கள் தான் கதையைக் குறைச்சுக் கொண்டியள். எனக்குத்தான் காரணம் தெரியேல்லை" என்றேன்.

இன்னும் தலையைக் குனிந்து தரையைப் பார்த்து மௌனமாக இருந்தாள். "சனிக்கிழமை என்ரை பேர்த்டே. கட்டாயம் ரூமுக்கு வாங்கோ" என்றாள்.

"எனக்கு நேரமில்லை" என்றேன்.

"பொய் சொல்லுறியள்"

"சத்தியமா எனக்கு நேரம் இல்லை. சனிக்கிழமை தான் நான் வீட்டை போற நாள். அதை நிற்பாட்ட ஏலாது. மன்னிச்சுக் கொள்ளுங்கோ" என்றேன்.

"எனக்கு அந்த இந்தக் கதை வேண்டாம். சனிக்கிழமை வரவேணும். நான் காத்துக் கொண்டிருப்பேன்."

போய் விட்டாள்.

சனிக்கிழமை நான் அம்மாவிடம் சோறு வாங்கிச் சாப்பிட்டேன்.

திங்கள் கம்பஸ் இற்கு வந்த போது, அவள் முகம் சிவந்திருந்தாள். நான் எதிர் கொள்ள ஆயத்தமானேன்.

"ஏன் வரவில்லை?" மீரா குரலை அழுத்திக்கேட்டாள்.

"நேரமில்லை எண்டு சொன்னனான் தானே?" நான் மென்மையாக, அவள் முதுகைத் தடவுவது போலக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறினேன். அவள் குரல் உடையத் தொடங்கியது. "உங்களுக்காக நான் எவ்வளவு நேரம் காத்துக்கொண்டு இருந்தனான். எனக்குத் தேவையில்லாத ஆக்களெல்லாம் வரீனம். தேவையான ஆக்கள் வராயினம் சாமம் பன்னிரண்டு மணி மட்டும் பார்த்துக்கொண்டு இருந்தனான். பன்ரண்டு மணியோடை என்ரை 'பேர்த்டே' முடியுது எண்டு போட்டு பிறகுதான் படுத்தனான். ஏன் ரவி வரேல்லை? நீங்கள் இப்பிடியேல்லாம் மாறுவியள் எண்டு நான் ஒரு சொட்டும் எதிர்பாக்கேல்லை". என்று அழுது கொண்டு சொன்னாள். அல்லது சொல்லிக் கொண்டு அழுதாள். நான் அப்போது என்ன செய்வேன்? அவள் அழுவதை மௌனத்துடன் பார்த்தேன். எனக்குக் கதைப்பதற்கு ஒன்றும் இருக்கவில்லை.

பின்னரெல்லாம் மீரா அவ்வளவாக என்னுடன் கதையில்லை, என்றே சொல்ல வேண்டும். நூர்ந்து கொண்டிருக்கின்ற விளக்கைப்போன்று ஒரு உயிரற்ற சிரிப்புடன் சரி.

பின்னைக் காலத்தில், ஒரு நாள் தாடியில் கடிக்கிறது என்று உணர்ந்து தாடி மழிக்கப்பட்டு, தலை மயிர் காற்றுக்குக் குழம்பாமல் ஒழுங்காக இருந்த பொழுதில் அவள், "இப்பதான் குழந்தைப்பிள்ளை மாதிரி வடிவாக இருக்கியள்......" என்று ஒப்புக்குச் சொன்னாள்.

"நக்கல் அடிக்காதையுங்கோ" என்றேன்.

என் தலையில் தன் அழகான கைகளை வைத்துச் சத்தியம் செய்தாள்.

இப்போது நான் சலனப்படவில்லை. இருவரின் உறவும் உடைந்தது என்று எனக்குத் திடமாகத் தெரிந்தது.

இன்னமும் தான் அந்தப் பிரிவின் காரணம் எனக்குச் சரியாகப் புரியவில்லை.

அவள் சொன்ன போது தாடி வெட்டாததா?

சோஷலிற்குக் குடித்ததா?

அல்லது அவளது பிறந்த நாளிற்கு நான் வராததா?

இம்மூன்றில் எதிலோ ஒன்றில்தான் பிரிவின் முளை விட்டிருக்கலாம். பின் ஆழப்பதிந்திருக்கலாம்.

இப்போதெல்லாம் பழையவற்றை யோசிக்கிற போது, மனதின் இழைகள் மீது மெல்லிய அதிர்வு கொண்டு தான் இருக்கிறது.

III

போதும். இனி, வரும் மழைக் காலத்தைக் கொஞ்சம் கவனி!.

....

ஐ.பி.சி. தமிழ்

நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவது எவ்வாறு?

புதியதோர் உலகம் செய்வோம்.

13 வயது - 28வயது வரையான
ஆண்களும், பெண்களும்
வாரம்தோறும், திங்கள், வியாழன்
மாலை 6.00மணி தொடக்கம் 7.00மணி வரை

அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்:
0044 - 171 - 564 - 4444

காணாது போன சிறுவர்கள்

ஆலமரமிருக்கும்
கீழோ. ஊஞ்சல்
ஆடிக் களிக்கவென
நீள விழுதிருக்கும்.

சற்று அப்பால்
பொன்னொச்சி பூத்துச்
சிரித்திருக்கும்.
கிழக்காய்
மாரி மழை நடுவில்
ஊற்றெடுத்துப் பரந்துபடும்
குளமிருக்கும்.

கட்டைப் பனைமரத்தைக்
கப்பலாக்கிக்
கால்த்துடுப்பில்
நீர்கடக்கும்
சிறுவர்களை மட்டும்
காணேன்.

பலகாலம் குண்டெறிந்தும்
தலைகுனியாப்
பனைமரத்தின் மீதேறிப்
"பால் "கறக்கும்
முதியவரைக் கேட்டேன்.

"காசுவயல்க் கதிரறுக்கக்
கனடா போய்ச்
சேர்ந்தார்கள்"
என்றார் கவலையுடன்.

- இளவாலை விஜயேந்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாரதிராஜா பாலுமகேந்திரா மணிரத்தினம்.

— யமுனா ராஜேந்திரன்

பம்பாய் தொடர்பான சுபமங்களா விவாதங்கள், தியோடர் பாஸ்கரனின் தமிழ் சினிமா பற்றிய ஆங்கிலப்புத்தகம் (The Eye of the Serpent) சு. சண்முகசுந்தரத்தின் பாரதிராஜா பற்றிய நூல் போன்றவை எனக்குள் சில அவதானங்களை ஏற்படுத்தியது. பாலுமகேந்திரா சிறுபத்திரிகை வாசர்களிடமும், ஐரோப்பிய வகை / சத்யஜித்ரே வகை சினிமாவை விழைபவர்களிடமும் ,பாலுமகேந்திரா பாலான விமர்சனமற்ற சார்புத் தன்மை இருக்கிறது. மணிரத்னத்தின் பம்பாய் படம் பற்றிய விவாதங்களில் கோமலின் குறிப்பில் இயக்குனரும் ஒளிப்பதிவாளருமானவரின் அபிப்ராயத்தின் அடிப்படையில் அவரது விமர்சனங்கள் வைக்கப் பட்டிருந்தன. இருவர் பற்றிய விவாதங்களில் மணிரத்னத்தின் 'தமிழினம் அல்லாத 'அடிப்படை-களை விமர்சிக்கும் போது 'பாரதிராஜா, இளையராஜா'போன்ற தமிழர்களின் இன அடையாளம் அவர்களது சினிமா பங்களிப்பில் சேர்க்கப்பட்டிருந்தது. பாலுமகேந்திரா தமிழின் இடதுசாரி எழுத்தாளர்களோடு உறவு கொண்டிருப்பது அனைவருக்கும் தெரிந்த செய்தி. மணிரத்னம் -சுஜாதா- பாலகுமாரன் போன்றவர்களோடு தொடர்பு கொண்டவர். வைரமுத்துவை ஆஸ்தான கவியாகக் கொண்டவர். தமிழ் இலக்கியம் பற்றி வெளிப்படையாகப் பேசியவர் அல்லர். அவரது நேர்முகங்கள் உரையாடல்களை அவதானித்து வருவோர் அவரது சினிமா தொழில்நுட்பம் சம்பந்தமான அறிவையும், சினிமா கோட்பாடு, சினிமா இலக்கியம்சம்பந்தமான அறிவையும் அவதானிக்க முடியும். வாசுதேவன் நாயரோடு இலக்கியம் பேசவும் அவரால் முடிகிறது.

இந்த மூவருமே உருப்படியான படங்களையும் கொடுத்திருக்கிறார்கள். மோசமானபடங்களையும் கொடுத்திருக்கிறார்கள். பாரதிராஜா மணிரத்னம் படங்களின் அழகியல் தன்மை பற்றி பிரஸ்தாபிக்கிறார்கள். பாலுமகேந்திரா, மணிரத்னத்தின் 'மௌனராகத்தை' தனது 'மறுபடியும்' படத்தோடு வைத்து தமிழின் மிடில் சினிமா பற்றி பேசுகிறார்.

மணிரத்னத்தின் படங்களில் எவரேனும் ஆக்கபூர்வமான அம்சங்களைப் பார்த்தால் உடனே அவரை பாலுமகேந்திரா / பாரதிராஜா பற்றி எதிர்மறையாகப் பார்க்கிறவர் என தமக்குள் முடிவுகட்டுகிற அரசியல் அணுகுமுறை தமிழில் இருக்கிறது.

எந்தக் கலைவடிவானாலும். எந்த கண்டு பிடிப்புக்களானாலும் அரசியலுக்கு அப்பாற்பட்டதல்ல. ஆனால் அரசியல் சார்புத் தன்மையை வைத்துக் கொண்டு மட்டும் குறிப்பிட்ட கலை, மற்றும் 'குறிப்பிட்ட கண்டுபிடிப்புக்களின்' தர்க்கம் வளர்ச்சி போன்றவற்றைப் புரிந்து கொள்ள முடியாது.

தொகுப்புக்கு முதலில் பகுப்பாய்வு மிகமிக முக்கியம். பகுப்பாய்வு என்பது நுண் தளத்தில் 'ஒரு கலையில்' 'ஒரு பிரச்சினையின்' தர்க்கம் வளர்ச்சி போன்றவற்றை ஆய்வு செய்வது இதற்கு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட சார்பு நிலை போதாது. ஆய்வு வேண்டும். நிதானமான அணுகுமுறை வேண்டும். இத்தகைய சார்பு நிலைகளையெல்லாம் கடந்து தூரநோக்கிலான விடுதலை அரசியலுக்கான கலை அணுகுமுறையை சுயதீனமாக மேற்கொள்ள வேண்டும்.

உதாரணம் சொல்கிறேன்:

1. அபத்தங்களும், அசிங்கங்களும் பாரதிராஜா, மணிரத்னம், பாலுமகேந்திரா போன்றோரின் /மூவரின் படங்களிலும் உண்டு.

பாரதிராஜா: வாலிபமே வா வா

பாலுமகேந்திரா: சுமன், அர்ச்சனா நடித்த தெலுங்குப் படம்

மணிரத்னம் : அக்னி நட்சத்திரம்

2 . சுமாரான மிகச் சாதாரணமான படங்களும் உண்டு.

பாரதிராஜா: சிவப்பு ரோஜாக்கள்

பாலுமகேந்திரா: ரெட்டை வால்குருவி

மணிரத்னம்: இதயத்தைத் திருடாதே

3. மூவரிலும் ஆண் பெண் உறவு தொடர்பான ஆரோக்யமான படங்களும் உண்டு.

பாரதிராஜா: முதல் மரியாதை

பாலுமகேந்திரா: யாத்ரா

மணிரத்னம்: மௌனராகம்

4.சமூகப் பிரக்ஞை கொண்ட படங்களும் உண்டு.

பாரதிராஜா: புதிய வார்ப்புக்கள்

பாலுமகேந்திரா: வீடு

மணிரத்னம்: அஞ்சலி

5 . அரசியல் படங்களும் உண்டு .

பாரதிராஜா: என்னுயிர்த் தோழன்

பாலுமகேந்திரா: வீடு

மணிரத்னம்: பம்பாய் அல்லது இருவர்

மூவரிடமும் அவரவர்க்கென்று தனித்தன்மை உண்டு.

1. பாலுமகேந்திரா காட்சிரூபான சினிமாவைப் படைப்பவர். ஐரோப்பிய / எளிமையான / மனோவியல் ரீதியிலான படங்களைத் தருபவர் .

2. பாரதிராஜா தமிழ்ப் பண்பாட்டின் அம்சங்களை - தமிழ் குடும்ப உறவுகளில் உள்ள பிரத்யேகமான அம்சங்களைப் படைப்பவர். காட்சி ரூபம் / வட்டார வழக்கு இரண்டிலும் ஈடுபாடு கொண்டவர். சினிமாவின் உச்சபட்ச சாத்தியமான காட்சிரூப சினிமா அல்ல இருவருடையது.

3. மணிரத்னம் காட்சி ரூபமான சினிமாவைப் படைப்பவர் ஐரோப்பிய / அமெரிக்க / நவீன இந்திய தமிழ் / தொழில்நுட்ப ரீதியிலான படங்களைத் தருபவர்.

பாலுமகேந்திராவின் நிறங்கள் மங்கலானவை, அதிகமும் இயற்கையானவை. மணிரத்னத்தின் நிறங்கள் அழுத்தமானவை. அதீதமான ஆழம் கொண்டவை.. பாரதிராஜாவின் நிறங்களும் பாலுமகேந்திதிரா போன்றதல்ல. ஒப்பீட்டளவில் மணிரத்னத்தின் படநிறங்கள் போன்றதுதான் பாரதிராஜாவுடையதும். அழுத்தமான நிறங்கள்.

i) பாரதிராஜாவின் படங்களின் தனித்துவம் அவரது கிராமியம் சார்ந்த சித்தரிப்பில் உள்ளது.

ii) பாலுமகேந்திராவின் தனித்துவம் மத்தியதரவர்க் கத்தவரின் அன்றாட வாழ்வுச் சிக்கல்கள். அபிலாஷைகளைச் சித்தரிப்பதில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளது.

iii) மணிரத்னத்தின் தனித்துவம் வளர்ச்சியடைந்த நகர மனிதர் - மத்யதரவர்க்க நகர மனிதர்கள் - அவர்களது கற்பனைகள் வாழ்வு நெருக்கடிகள் போன்றவற்றைச் சித்தரிப்பதில் உள்ளது.

மூவருமே சமகால அரசியல் பிரச்சினைகளைக் கையாண்டு இருக்கிறார்கள். பாரதிராஜாவின் படங்களில் உடனடியான நிகழும் அரசியலின் 'சாயல்களைக்' காண முடியாது ஸ்தூலமான சித்தரிப்புக்களை நாம் இவர் படங்களில் காணமுடியாது.

உதாரணம்:

i) திராவிட அரசியல், மயங்கும் சொற்செட்டு, தீக்குளிப்பு அரசியல் பற்றி படம் பேசினாலும் அது திராவிட இயக்கத்தவர் பற்றிய நேரடியான விசாரணையாக அமையவில்லை.

தமிழ்ச் செல்வன் படமும் ஊழல் லஞ்சம் பற்றிப் பேசினால் கூட 'ஸ்தூலமான' சித்தரிப்பு என்பது அப்படத்தில் இல்லை.

அதாவது ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் குறிப்பிட்ட அரசியல் இவர் படங்களில் இடம் பெறுவதில்லை.

எம் ஜி. ஆர் கருணாநிதி, கோபால்சாமி, எல்லோர்க்கும் சினிமாவுக்கு அப்பாலும் நண்பராக இருக்கிறார். தி.மு.க. பிளவின் போது வைரமுத்துவும் இவரும் வை.கோ., மு.க.வுக்கிடையில் சமரசமேற்படுத்த முயன்றனர். ஸ்தூலமான விமர்சனமற்ற தன்மைக்கும், அவரது சினிமாவுக்கு அப்பாலான அரசியலுக்கும் உள்ள உறவை அவதானிக்கிற ஒருவர், அவர் சினிமாவில் சொல்கிற அரசியலின் நீர்த்த தன்மைக்கான காரணத்தை உணரமுடியும்.

பாலுமகேந்திராவின் படங்களில் அநேகமாக அரசியல் மாந்தர்கள் இடம் பெறுவதேயில்லை. நேரடியான அரசியலில் அவர் பாத்திரங்கள் ஈடுபடாமல் இருக்க அவரது இலங்கையைச் சேர்ந்தவர் என்கிற தன்மையும் காரணமாக இருக்கக்கூடும்.

ஆயினும், அவரது 'யாத்ரா' படத்தில் தீவிரவாதியென தவறாகக் கைதுசெய்யப்பட்டவர் போலீஸ் நிலையத்தில் விசாரணை எனும் பெயரில் சித்திரவதைசெய்யப்படும் காட்சி, எந்த நேரடியான அரசியல் சினிமா பேசும் விசயத்தை விடவும் அதிகமாகப் பேசும் தன்மை கொண்டது.

அரசு, அரசு எந்திரம், போலீஸ்துறை. விசாரனை என்பது பற்றிய அதன் கொடூரங்கள் பற்றிய அற்புதமான விமர்சனம் அக்காட்சிகள்.

மணிரத்னத்தின் அரசியல் படங்கள் 'உடனடி' நிகழ்வுகளையும் நேரடி அரசியலையும் 'குறிப்பிட்ட' பிரச்சினைகளையும் எடுத்துக் கொள்கிறது. எரியும் பிரச்சினைக்குள் புகுந்து தேசீய ஒருமைப்பாட்டு அபிப்ராயங்களை முன்வைக்கிறது. இந்தியாவில்/ தமிழகத்தில் இன்று இருக்கிற நிலமைகளில் அது அரசியல் விளைவுகளையும் உருவாக்குகிறது.

இச்சூழலில் மணிரத்னத்தின் மீதான விமர்சனம் இருவகைகளில் முன் வைக்கப்படுகிறது.

i) முழுக்கவும் அரசியல் நோக்கம் கொண்டவர்களின் விமர்சனம்.

ii)1.பாரதிராஜா = தமிழ்பண்பாடு எனக் கருதிக் கொள்பவர்கள்.

2.பாலுமகேந்திரா = ஐரோப்பிய / எளிமை / சத்யஜித்ரே வகை சினிமா எனக் கருதிக் கொள்பவர்கள்.

3.மணிரத்னம் = ஹாலிவுட் / இந்துத்துவம் / சுதேசீயம் எனக் கருதிக் கொள்பவர்கள்.

என மூன்று தரப்பு அறிவு ஜீவிகள், சினிமா ஆர்வமுள்ள வர்கள் மேற்கொள்ளும் அணுகுமுறை.

உண்மையில் 'மாற்றுச் சினிமா' என்பது இவர்கள் மூவருடனும் தனித்தனியே முழுக்க உடன்பாடு கொள்வதனால் உருவாவதும் அல்ல.

i) சினிமா ஒரு கலைவடிவம் எனும் அளவில் இவர்களது 'பங்களிப்பை' அவதானித்து அங்கீகரிப்பது.

இவர்களது சித்தரிப்பில் உள்ள 'கோணல்களை' சொல்லத் தவறிய விஷயங்கள் தொடர்பான விமர்சனப் பிரக்ஞையை உருவாக்கிக்கொள்வது.

ii) இவற்றிலிருந்து இன்று மூன்றாம் உலக நாடுகளின் இடதுசாரிப் படைப்பாளிகளின் - மூன்றாம் சினிமாக் கோட்பாட்டை தமிழில் அதன் தர்க்க வளர்ச்சிக்கு ஒப்ப படைப்புக் காரியத்தில் முன்வைப்பபது.

பாரதிராஜா முன் வைக்கிற 'தமிழ்ப்பண்பாட்டு' வகையிலான கிராமங்கள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதல்ல. நரசிங்கராவ், நிஹ்லானி பெனிகல் போன்றோர் படங்களை வைத்துப் பார்த்தாலே இது விளங்கிவிடும். மேலும் ஆப்ரிக்க சினிமாவில் இடம்பெறும் கிராமங்கள் பற்றிய வழிபாடுகளை விடவும் நாம் இதைத்தான் செய்ய வேண்டும்.

பாலுமகேந்திராவின் அரசியல் பிரக்ஞையற்ற மத்யதர வர்க்க மனிதர்களுக்கு மாற்றாக அதே ஐரோப்பிய சினிமாவில் செயல்பட்ட கீஸ்லோவெஸ்கி,. ஜானுஸ்ஸி, கோடார்ட், ரோஸலினி, பெர்ட்டுலூஸி, போன்ற இயக்குனர்களின் அரசியல் பிரக்ஞையுள்ள மனிதர்களைப் படைக்க முடியும். இதற்கு நாம் வழிபாடுகளைத் தாண்டிவர வேண்டும்.

மணிரத்னம் பற்றியும் இப்படித்தான். வழிபாடுகள் போன்று அதே அளவு ஆபத்தானதுதான் வெறுமனே அரசியல் ரீதியிலான தாக்குதல்களும். அவருடைய அரசியல் படங்களை விமர்சிப்பதன் மூலம் அவரது காட்சிரூப சினிமாவை அவதானிப்பதன் மூலம் புதிய அரசியல் சினிமாவை உருவாக்க முடியும்.

சினிமாவை எப்படி வெறுமனே அரசியலாகப் பார்க்கக் கூடாதோ, அதே மாதிரி அரசியலுக்கு, அரசியல் நிறுவனங்கள், பொருளியல் நிறுவனங்கள் போன்றவற்றுக்கு முற்றிலும் வெளியிலும் சினிமாவைப் பார்க்க முடியாது.

சினிமாவைக் கட்டுபடுத்தும் அரசியல் / பொருளியல் சக்திகள், சினிமாவின் சுதந்திர வெளிப்பாட்டை மறுக்கும் தணிக்கை அதிகார அமைப்புக்கள் போன்றவை பற்றியும் நாம் கவனம் கொள்ள வேண்டும்.

நான் இங்கு பேசியிருக்கும் மூன்று தமிழ் இயக்குனர்கள் தான் சமகால தமிழ் சினிமாவின் முக்கியமான இயக்குனர்கள். ஷங்கரை இவர்களோடு எந்த வகையிலும் வைத்துப் பார்க்க முடியாது. குஞ்சுமோன்களையும் இதில் சேர்க்க முடியாது. நாம் கும்பல் சேருவது, டைரக்டர்களின் ரசிகர்கள் ஆவது போன்றவற்றினின்று நம்மை விலக்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப. வி. சிறீரங்கன்

திரு. கி.செ.துரை அவர்களின் கூற்றுப்படி,"துரும்புகள் சேர்ந்து கயிறாகல்". இந்தக் கிழக்கும் மேற்கும் தொகுப்பில் நிகழ்தல், ஒரு தசாப்த நிகழ்வுப் போக்கின் கனதியோடு - ஒப்பிட்டுப் பேசக் கூடிய கனதியான உள்ளடக்கத்தோடு உருப்பெறுதலை நாம் உணரும் போது அதன் ஆக்கங்கள் குறித்து, ஒரு அபிப்பிராயம் உதிர்ப்பதை விடுத்து - அதில் இடம் பெறும் ஆக்கங்களுக்கூடாக ஒரு நீண்ட பயணத்துடன், சில தேடல்களை- அவை மனித இருத்தலுக்கான; நேசிப்புக்கான விழுமியங்களாக் கொண்டிருப்பின் அதன் எதிர்வினை எம்முன் நிகழ்த்தும் தன்மைகளை பகிர்வதிலேயே என் நோக்கம் உண்டு.

இந்த நோக்கோடு "கிழக்கும் மேற்கும்" தொகுப்புக்கூடாக ஒரு சிறுதேடல் முதலில் கி.செ. துரையின் கட்டுரை யைப் பார்ப்போம்.

உலக அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒருவிஷயம் தாய் மொழியில் தேர்ச்சியற்றவர்கள் ஒரு போதும் பிற மொழியைச் சிறப்பாகக் கற்க முடியாது என்பதாகும் !

இ்.்து மீளவும் திரு. கி.செ துரையால் சுட்டிக்காட்டப்படுவதும், இணைவுக்குப் பின்னான ஐரோப்பிய ஒன்றியத்துள் நம் ஸ்தாபனம் குறித்த நோக்கும் தேவையொடு கூடிய உள்ளடக்கத்தைக் கொண்டி ருப்பினும் அதில் சில குறைபாடுகள் தென்படுவதை நாம் உணர்கிறோம்.

அகதிய வாழ்வில் நாம் இன்னும் உதிரிச் சமூகமாகவே உள்ளோம். ஒரு புலம்பெயர்வுத் தமிழ்ச் சமூக உருவாக்கம் நிகழும் போது திரு.கி.செ துரை குறித்த விடயங்கள் முக்கியம் பெறும். இப்போது, டென்மார்க்கின் சில தாராளக் கொள்கைகள் மற்றைய ஐரோப்பிய நாடுகளில் வாழும் "புலம்பெயர்" தமிழ் பேசும் மக்க ளுக்குப் பொருத்தமாக வில்லை.

தாய் மொழிக் கல்வியானது தமிழ் பேசும் சிறுவர்களுக்கு புதிய உலகை எதிர்கொள்ள எவ்வளவு அவசியமான தென்பதும், ஆங்கில மொழிக் கல்வியில் தேர்ச்சி பெற்ற புத்திஜீவிகள் இன்று எவ்வளவு தூரம் தமிழ் மொழிக்குச் சிறப்புச் செய்கிறார்கள் என்பது குறித்தும் நோக்க வேண்டியுள்ளது. இதன் விடைகளில் இருந்துதான் நாம் புதிய உலகுக்குப் பொருள்படும் மனிதர்கள்!
சுய பொருளாதாரம், சொந்த நிலப்பரப்பு, சுய மொழி, இவைகளின் தட்டு இயக்க விளைவாற்றாம் ஒரு உறுதிமிக்க- தேர்ச்சியுடைய, ஆரோக்கியமான இன உருவாக்கம் நிகழமுடியும். அதுவரையும் இனக் குழுக்களாகவே இருக்கும் மக்கள் கூட்டத்தை நாம் வரலாற்றில் சந்திக்கின்றோம். இவ்வகையில், "புலம்பெயர்" தமிழ் பேசும் மக்கள் ஒரு உதிரிவர்க்க வகை மாதிரி நிலைக்குள் இருந்து கொண்டு, ஐரோப்பிய ஒன்றியத்துள் ஆளுமைமிக்கவர்களாக உருப் பெறுதல் சாத்தியப்பாட்டிற்கு அப்பால் - முடமாகும் நிலையில் இருப்பதை நாம் மறக்காமல் நினைவுபடுத்தல் மிக மிக முக்கியமாகும்.

ஜப்பானும், ஜேர்மனியும் உலக மகா யுத்தத்திற்கு முன்பே மிகப் பெரும் வளர்ச்சியுடைய சமூகக்கட்டமைப்பையும், தொழில் நுட்பத்தையும் கொண்டி ருகின்றன. இதன் பொருட்டே யுத்தத்தில் மூழ்கி, அழிந்து - புதிதாயும் கட்டியெழுப்பினார்கள். இவர்களின் வளர்ச்சி, வெறுமனவே இவர்கள் தம் நாடுகளின் தேசிய எல்லைக்குள் நிகழ்ந்த விஷயமல்லாத வளர்ச்சியல்ல! மாறாக, மற்றய பலவீனமான நாடுகளாகச் சுரண்டி தம் இருப்பைக் காத்துவரும் இவ்வகை நாடுகளைப் பார்த்து, வளரும் மூன்றாம் உலகத்தையும், மனிதர்களையும் எடைபோடுதல் ஆபத்தானது. அத்துடன் ஐரோப்பாவெங்கும் வாழும் புலம் பெயர்ந்த தமிழ் பேசும் மக்களை வெறும் பொருளியல் சார்ந்த உற்பத்தி உறவுகளாகப் பார்க்க முடியாது. மாறாக, தன் சுயஇருப்பை தொலைத்து - புதிதாய் மண் கிழித்து முளைவிடும் ஒரு "விசும்பு" நிலையிலுள்ள தமிழ் பேசும் "புலம் பெயர் தமிழ் மக்கள்" முன் அவர் தம் அடையாளமே முதன்மைப்பட்ட புள்ளியாகியுள்ளது!

இது குறித்த தேடலுடைய ஒரு உதிரிச் சமூகம் தன் வளர்ச்சி குறித்து தனக்குள் இருக்கும் முரண் நிலையிலிருந்தே வளர்வுறும்.

இந்த முரண் நிலையை கூர்மைப் படுத்தும் எழுத்துக்களாக கி.செ துரையின் கட்டுரையைக் குறிக்கும் போது - காலத்திற்கு முந்திய அவசரங்களை அவர்தம் கட்டுரையில் காணலாம். இ்.்து ஜெர்மனிய அகதியச் சூழலுக்குச் சற்றும் பொருந்தவேயில்லை. எனினும், தமிழர்கள் ஜேர்மனியில் மட்டுமா அகதியாகி வாழ்கிறார்கள்?

கரம் பொன் சண்முகநாத வித்தியாலத்தின் அதிபர் சபாரெட்னம் அவர்களின் புதல்வி மைத்ரேயி ரொம்பவும் மனிதநேயம் குறித்து எழுதுகின்றார். கிராமத்தைப்புடுங்கி நகரத்தை நட்டுவிடும் முதலாளியம் சூழல் மாசு படுவதைப் பற்றியும், மனிதநேயமும் மனித இருப்பும் விஞ்ஞானத்தால் கேள்விக்குள்ளாக்கப் படுவது குறித்தும் புலமை சார்ந்த பார்வையாளர் போல், பார்ப்பதில் நாம் திருப்தியடைய முடியாதல்லவா?

அதிகாரவர்க்கமனிதஇருப்பு + அதிகாரவர்க்க மனிதநேயம் = ஜனநாயம்.
இது காலத்தால் அழியாதிருக்க நாம் பாடுபடமுடியாது.

"எஞ்சுமா
மனிநேயமும்
மனித இருப்பும்?"
யாரை யார் கேட்பது?

கந்தனும் சொக்கனும், பிள்ளை யம்மாவும், சின்னாச்சியும் "என்னடா

இருபதாம் நூற்றாண்டுத் தமிழன்
கிழக்கும் மேற்கும்
- ஒரு குறிப்பு
அனைத்துலகத் தமிழ்ப் படைப்புகளின் தொகுப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மோனை?,. இதென்ன ஒண்டும் விளங்குதில்லை" என்றபடி......

புத்திசாலியாய் சிந்தித்து, பாமரனாய் எழுதுவது அவ்வளவு இலகுவானது இல்லை, என்பது மீளவும், மைத்ரேயியால் உறுதிப்படுத்தப் படுகிறது. என்ற போதும், முக்கியமான கேள்விகள் அவர் நறுக்குகளில் விரவிக்கிடக்கிறது.

தாய் மொழி குறித்த அவசியம் கி.செ. துரையிலிருந்து சிவரஞ்சித் வரை இடித்துரைக்கப்படுகிறது. ஒரு மொழியின் பங்கு மக்கள் சமூகத்தில் எந்த ஸ்தானத்தில் இருக்கிறது?

மொழியைப் பேசத் தெரியாத மிருகங்கள் ஒழுங்கீனமாக வாழ்வது கண்கூடு எனினும், அவை உணர்வு வழிப்பட்ட கூட்டு வாழ்வை மறுக்கவில்லை. இஃது அவைகளின் இயல்புநிலை சார்பு வாழ்வின் வீரியத்தோடு தொடர்புடையது.
ஆனால் மனிதர்கள் நாம்?

இயல்பான - இயற்கை சார்பு வாழ்வு மறக்கபப்பட்டாச்சு.
எங்கும், எதிலும் செயற்கைத்தனங்கள். இயற்கை மீது கொடுமையான இடைச்செயல்கள்; இயற்கை சமநிலை இழந்து பண்புமாற்றத்தில் கால் வைத்தாடி...

இது முதலாளியச்சமூகத்தின் "குறிப்பு" உணர்வின் உபயம்!

மொழி வளர்ச்சியடைதலும், அதைச் சிந்திப்பதற்கு ஊடகமாகக் கொள்வதும் மனித வரலாற்றில் வளரும் நிலையிலேயே இருக்கிறது. உலக மொழிகளில் ஆங்கிலம், ஜேர்மன், பிரஞ்சு, ஸ்பெயின் போன்ற மொழிகள் இன்னும் தமக்குள் சீர்திருத்தம் கோரியபடி. ஜேர்மன், வரும் ஆண்டுகளில் பல மாற்றங்களைக் காண்கிறது. இலக்கண - சொற்கட்டு மாற்றங்கள் இதற்குள் முக்கிய மாற்றத்தை வேண்டி மாறுகிறது!

இந் நிலையில், தமிழ் மொழி தனக்கான வளர்ச்சி நிலையை ஐரோப்பாவில் ஒரு போதும் எட்டமுடியாது. தனக்கான சூழலை வரையறுத்து சுய பொருளாதார வளர்ச்சியோடுதாம் தமிழ் வளர்வுற முடியும். உ+ம்: இலங்கையில் தேசிய விடுதலைப் போராட்ட விளைவால் தமிழ்மொழி பற்பல மாற்றங்களோடு வளர்வுறுகிறது வெள்ளிடைமலை.

புகைவண்டி போய், புகையிரதம் வந்தது! பின்பு, தொடரூந்தாய் மாறி அர்த்தமிக்க வீரியத்தைச் சுட்டுவதுபோல், தமிழ் மொழி தன் ஆளுமையை முழுமையோடு கட்டியமைக்க அதற்கானகாலம் தேவையோடு நிற்கிறது.

இதன் சாத்தியமின்றி மொழி வளர்ச்சிக்கிடமில்லை. மேற்கில் புலம்பெயர்ந்த மக்களினங்கள் தத்தமது மொழியில் சிந்திக்கும் ஆற்றலைப் பெறுதல் அவசியமே! எனினும், அதுவே உயர்கல்வி பயிற்று மொழியாக இருக்குமென்பது கேள்விக்குரிய விடயமே.

திரு.சிவரஞ்சித் கூறுவது போல்: "எங்கள் குழந்தைகள் கற்பதற்குரிய சிறந்த ஊடகமாக தமிழ் மொழியினை விருத்திசெய்து கொள்வது... "ஐரோப்பிய நாடுகளில் வாழும் ஒரு சில புத்திஜீவிகளால் (தமிழ்) நடக்கக் கூடியகாரியமாக இருக்காது. மாறாக, அஃது தன் சொந்த நிலப்பரப்பில் தாம் நடக்ககூடிய காரியமாகவிருக்கும். நான் தமிழக தாயகத்தை இதற்குள் சேர்க்க முடியாதுள்ளது. தமிழகத்தில் இன்னும் பயிற்று மொழி ஆங்கிலமே! இலங்கையில் பட்டப்படிப்புகளையும் தமிழ்மொழி மூலம் சாதிக்கிறோம். இஃது ஒரு இமாலயச் சாதனைதான், தமிழ் மொழியைப் பொறுத்தவரை....
திரு.கி.செ.துரை, சி.சிவரஞ்சித் போன்றவர்களின் கருத்துகளில் பயன் மிக்கவை பலவுள்ளன. சிந்திக்க வேண்டிய விடயங்களில் பலவீனமான வாழ்சூழல், பாதிப்பிட்டு செயலிழக்கச் செய்யும் ஆபத்தை புலம் பெயர்வு வாழ்வு கொண்டிருக்கும் நிலையை- உண்மையை நாம் மறுத்தலாகாது.

யூத மக்களும், சிக்கோயின மக்களும் (ஜிப்சிகள்) வரலாற்றில் வகிக்கும் பாத்திரம் அவர் தம் ஆளுமைக்குள் அடங்கிய விஷயமில்லை. அஃது அவர்தம் சமூக நிகழ்வுக்கப்பாற்பட்ட தென்று நாம் வரலாற்று உண்மைக் கூடாக அறிய முடியும். அமெரிக்க வல்லாதிக்கமின்றி யூதநாடு உருவாகியிருக்க முடியாது. அறுபது இலட்சத்திற்கு மேல், ஜேர்மனிய நாசிகளால் கொல்லப்பட்ட யூதர்களில் எத்தனைபேர்கள் தம் விடுதலைக்காகப் போராடினார்கள்? போராடியதால் நாடு கிடைக்கப்பெற்றதா?

சிக்கோயின (ஜிப்சிகள்) மக்களை சிதைத்து வரும் ஏகாதிபத்திய நாடுகள் தம் இலாபத்திற்காக இந்நூற்றாண்டில் பயன்படுத்த முனைந்தால், அவர்களுக்கும் ஒரு நாடு ஆசியாவிலோ அல்லது ஆபிரிக்காவிலோ பிறக்கலாம்.

ஆனால் தமிழர்களுக்கு தமிழகம் / ஈழம் தாம் நாடுகளாக இருக்கமுடியும்! புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தின் குடிகள் தமக்கான நாட்டைக் கட்டி யெழுப்புதல் காலத்தின் கட்டாயம். நாட்டினது வரலாறும் இன அடையாளமும் இங்குதான் முக்கியம் பெறுகிறது. இவை, என்றும் தெரியாது மங்கலாக மறைந்து விடுமானால் நாம் ஜிப்சிகளை விட மோசமான இழி நிலைக்கு தள்ளப்படுவோம். யூத/ ஜிப்சிகள் கற்றுத்தரும் பாடம்: "தாயகத்தை இழந்து விடாதே" என்பதாகும். இதை அர்சுனா, சொல்லாமல் சொல்லுகிறார், அவரின் கேள்விகளில் சொக்கி நிற்கும் உண்மைகளை நாம் பகுத்தறிந்து - நம் கருதுகோள்களை வலுவான தேச நிர்மாணத்திற்கு திசை திருப்பி விடவேணும்.

அழகுக்கோனிடம் இருக்கும் சிறப்பு வார்த்தைச் சிக்கனம், அறிவுமாட்சியுடைய வீச்சு நிறைந்து காணும், பாடுபொருள் சிலவற்றைச் சொல்லி முறித்து விட்டுச் சிந்திக்க வைக்கின்றான்!
இவன் தானே கவிஞன்?

" கோவில் மணியும், இசையும் இழவு வீட்டில் இசைக்கின்றன".

கோவில் மணி அதியுன்னதமான குறியீடு, மதங்கங்களின் குறியீடு. மதங்களால் மனிதர்கள் கூறு போடபட்டு தினமும் - தமக்குள் முட்டுப்பட்டு சாவு கொள்ளப்படுவதை எப்படியுணர்த்துகின்றது மேலேயுள்ள பாடல் வரிகள்!
கோவில் மணி/ அது எழுப்பும் இசை...
இழவு வீட்டில் இசைத்தல்.....
வெறும் பேத்தல்களின் வெளிப்பாடல்ல இவை. மாறக, மாறத்துடிக்கும் சமூக இயக்கத்தின் வீச்சுகளோடு சங்கமிக்கும் அழகுக்கோனிடம் செழுமையான நுணுக்கமான சோகம் கக்கிய துன்பியல் இழையோடுகின்றது.

"மொழியும் சமயமும் கூட எம்மை மிகமிகத் தாழ்த்தி விட்டன"

துன்பியல் இங்கு வெறும் வார்த்தைக் கட்டாகிறது. இஃது அக்கவிதையின் உயிர்ப்பைக் கட்டிக் காப்பதற்கான கருவைக் கொண்டே இயங்குகிறது.

பேராசிரியர் சி.சிவசேகரம் அவர்கள் மரபுக்கவிதையின் விருத்தியோடு தொடரும் நவீனக் கவிதையின் முக்கியமானவொரு கவிஞர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நிகழ்ச்சிகள்							
நேரம்	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு
காலை 5.00–5.30	கீதாஞ்சலி	கீதாஞ்சலி	கீதாஞ்சலி	கீதாஞ்சலி	கீதாஞ்சலி	கீதாஞ்சலி	கீதாஞ்சலி
காலை 5.30–5.40	நற்சிந்தனை	நற்சிந்தனை	நற்சிந்தனை	நற்சிந்தனை	நற்சிந்தனை	நற்சிந்தனை	நற்சிந்தனை
காலை 5.40–6.00	காலத்தால் அழியாத கானங்கள்	காலத்தால் அழியாத கானங்கள்	காலத்தால் அழியாத கானங்கள்	காலத்தால் அழியாத கானங்கள்	காலத்தால் அழியாத கானங்கள்	காலத்தால் அழியாத கானங்கள்	காலத்தால் அழியாத கானங்கள்
காலை 6.00–6.10	நாளும் கோளும்	நாளும் கோளும்	நாளும் கோளும்	நாளும் கோளும்	நாளும் கோளும்	நாளும் கோளும்	நாளும் கோளும்
காலை 6.10–6.30	பாரதி பாக்கள்	பாரதி பாக்கள்	பாரதி பாக்கள்	பாரதி பாக்கள்	பாரதி பாக்கள்	பாரதி பாக்கள்	பாரதி பாக்கள்
காலை 6.30–7.00	பொழுது புலர்ந்தது	பொழுது புலர்ந்தது	பொழுது புலர்ந்தது	பொழுது புலர்ந்தது	பொழுது புலர்ந்தது	பொழுது புலர்ந்தது	மரட்பின் தொனி
காலை 7.00–7.15	நிகழ்ச்சி முன்னோட்டம்	நிகழ்ச்சி முன்னோட்டம்	நிகழ்ச்சி முன்னோட்டம்	நிகழ்ச்சி முன்னோட்டம்	நிகழ்ச்சி முன்னோட்டம்	நிகழ்ச்சி முன்னோட்டம்	நிகழ்ச்சி முன்னோட்டம்
காலை 7.15–7.30	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து
காலை 7.30–8.00	ஆனந்த கீதம்	ஆனந்த கீதம்	ஆனந்த கீதம்	ஆனந்த கீதம்	ஆனந்த கீதம்	ஆனந்த கீதம்	ஆனந்த கீதம்
காலை 8.00–8.15	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்
காலை 8.15–8.30	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்
காலை 8.30–9.00	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்
காலை 9.00–9.05	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
காலை 9.05–9.30	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்	தேடிவரும் தென்றல்
காலை 9.30–10.00	எம்மவர் முற்றத்து மல்லிகை	எம்மவர் முற்றத்து மல்லிகை	எம்மவர் முற்றத்து மல்லிகை	எம்மவர் முற்றத்து மல்லிகை	எம்மவர் முற்றத்து மல்லிகை	எம்மவர் முற்றத்து மல்லிகை	எம்மவர் முற்றத்து மல்லிகை
காலை 10.00–10.05	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
காலை 10.05–10.30	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்	தேவர் தேஞ்சம்	கத்தோலிக்க நிகழ்ச்சி
காலை 10.30–10.45	விவேகச்சித்திரம்	சிறுகதை (மறு ஒலி)	சிந்தனைச் சாரல்கள்	கவிதை சிந்தும் நேரம்	பன்னலக்களை...(மறு ஒலி)		ஈழத்துப் பாடல்கள்
காலை 10.45–11.00	விவேகச்சித்திரம்	சிறுகதை (மறு ஒலி)	சிந்தனைச் சாரல்கள்	கவிதை சிந்தும் நேரம்	பன்னலக்களை...(மறு ஒலி)	நாடகம்	அந்தநாள் ஞாபகம்
காலை 11.00–11.05	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
காலை 11.05–12.00	நெஞ்சில் நிறைந்தவை	நெஞ்சில் நிறைந்தவை	நெஞ்சில் நிறைந்தவை	நெஞ்சில் நிறைந்தவை	நெஞ்சில் நிறைந்தவை	நெஞ்சில் நிறைந்தவை	நெஞ்சில் நிறைந்தவை
பகல் 12.00–12.02	பிரார்த்தனை வேளை	பிரார்த்தனை வேளை	பிரார்த்தனை வேளை	பிரார்த்தனை வேளை	பிரார்த்தனை வேளை	பிரார்த்தனை வேளை	பிரார்த்தனை வேளை
பகல் 12.02–12.15	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்
பகல் 12.15–12.30	மகளிர் விருப்பம்	மகளிர் விருப்பம்	மகளிர் விருப்பம்	மகளிர் விருப்பம்	மகளிர் விருப்பம்	மண்வாசனை	பாடல்கள்
பகல் 12.30–1.00	சிறுகதை	மண்வாசனை	நலமாய் வாழ நமது கேள்விகள்	கலையரங்கம்	மருத்துவ நிகழ்ச்சி	தேவர் மன்றம்	கவியரங்கம்
பகல் 1.00–1.05	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
பகல் 1.05–1.30	வாத்திய விருந்து	வாத்திய விருந்து	வாத்திய விருந்து	வாத்திய விருந்து	வாத்திய விருந்து	தமிழ்–இனி	மருத்துவ நிகழ்ச்சி
பகல் 1.30–1.45	பூவையர் பூங்குரல்	பூவையர் பூங்குரல்	பூவையர் பூங்குரல்	பூவையர் பூங்குரல்	பூவையர் பூங்குரல்	இசையும் கதையும்	வாத்தியார் வீட்டில் – நாடகம்
பகல் 1.45–2.00	பூவையர் பூங்குரல்	பூவையர் பூங்குரல்	பூவையர் பூங்குரல்	பூவையர் பூங்குரல்	பூவையர் பூங்குரல்	இசையும் கதையும்	கேள்வி நேரம்
பகல் 2.00–2.05	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
பகல் 2.05–3.00	உங்கள் விருப்பம்	உங்கள் விருப்பம்	உங்கள் விருப்பம்	உங்கள் விருப்பம்	உங்கள் விருப்பம்	உங்கள் விருப்பம்	உங்கள் விருப்பம்
பகல் 3.00–3.30	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்
பகல் 3.30–3.45	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்
பகல் 3.45–4.00	ஈழத்துப் பாடல்கள்	ஈழத்துப் பாடல்கள்	ஈழத்துப் பாடல்கள்	ஈழத்துப் பாடல்கள்	ஈழத்துப் பாடல்கள்	கிராமத்துக்கனவுகள் – நாடகம்	புதிரோ புதிர்
மாலை 4.00–4.05	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
மாலை 4.05–4.30	கதம்பமாலை	இசையால் வசமாக (மறு ஒலி)	கதம்பமாலை	தமிழ்–இனி (மறு ஒலி)	கதம்பமாலை	குறுக்கெழுத்துப் போட்டி	கலையரங்கம்
மாலை 4.30–5.00	இன்றைய தேயர்	இன்றைய தேயர்	இன்றைய தேயர்	இன்றைய தேயர்	இன்றைய தேயர்	குறுக்கெழுத்துப் போட்டி	இசையால் வசமாக
மாலை 5.00–5.05	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
மாலை 5.05–6.00	அந்திவரும் நேரம்	அந்திவரும் நேரம்	அந்திவரும் நேரம்	அந்திவரும் நேரம்	அந்திவரும் நேரம்	அந்திவரும் நேரம்	அந்திவரும் நேரம்

www.tamilarangam.net

மாலை 6.00–6.05	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
மாலை 6.05–7.00	புதியதோர் உலகம் செய்வோம்	முதியோர் வழங்கும்....	வணக்கம் ஐபிசி மாமா	புதியதோர் உலகம் செய்வோம்	என்றோ ஒருநாள் எழும்	வணக்கம் ஐபிசி மாமா	வணக்கம் ஐபிசி மாமா
மாலை 7.00–7.15	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்	ஆங்கிலச் செய்திகள்
மாலை 7.15–7.30	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து	பிறந்தநாள் வாழ்த்து
மாலை 7.30–8.00	சமய சஞ்சீவி	சமய சஞ்சீவி	சமய சஞ்சீவி	சமய சஞ்சீவி	சமய சஞ்சீவி	தேனிசைத் தென்றல்	இசைத்தென்றல்
மாலை 8.00–8.30	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்
மாலை 8.30–8.45	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்	அறிவிப்புகள்
மாலை 8.45–9.00	மெல்லிசை	சிவயோகம்	மெல்லிசை	கானமழை	மெல்லிசை	விகடதடாகம்	நோயற்ற வாழ்வே......
இரவு 9.00–9.05	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
இரவு 9.05–9.30	கவிதை சிந்தும் நேரம்	யன்னல்களை திறவுங்கள்	கவிதை சிந்தும் நேரம்	யன்னல்களைத் திறவுங்கள்	கவிதை சிந்தும் நேரம்	உங்கள் குரல்	வாரம் ஒரு வலம்
இரவு 9.30–10.00	ஊர்வலம்	ஊர்வலம்	ஊர்வலம்	ஊர்வலம்	ஊர்வலம்	உங்கள் குரல்	கேள்வி ஞானம்
இரவு 10.00–10.05	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
இரவு 10.05–10.30	இரவுப் பாடகன்	இரவுப் பாடகன்	இரவுப் பாடகன்	இரவுப் பாடகன்	இரவுப் பாடகன்	முத்தாரம்	இசையும் கதையும் (மறு ஒலி)
இரவு 10.30–11.00	இரவுப் பாடகன்	இரவுப் பாடகன்	இரவுப் பாடகன்	இரவுப் பாடகன்	இரவுப் பாடகன்	கவியரங்கம் (மறு ஒலி)	மண்வாசனை (மறு ஒலி)
இரவு 11.00–11.05	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்	செய்திச் சுருக்கம்
இரவு 11.05–12.00	இசைக்கச்சேரி	திரை ஒலி	திரை ஒலி	திரை ஒலி	இசைக்கச்சேரி	நெடும் புனல்	இரவும் மலரும்
இரவு 12.00–12.30	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்
இரவு 12.30–01.00	புதியதோர் உல.. (மறு ஒலி)	முதியோர் வழங்கும்..(மறு ஒலி)	தேயா நெஞ்சம் (மறு ஒலி)	நலமாய் வாழ நமது கேள்விகள்	வணக்கம் ஐபிசி..(மறு ஒலி)	நீங்களும் பாடலாம்	பூவையர் பூங்குரல் (மறு ஒலி)
இரவு 01.00–02.00	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்	சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள்
இரவு 02.00–03.00	பாடல்கள்	பாடல்கள்	பாடல்கள்	பாடல்கள்	பாடல்கள்	பாடல்கள்	பாடல்கள்
காலை 03.00–03.30	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்	இசையமுதம்
காலை 03.30–04.00	வாத்திய விருந்து	வாத்திய விருந்து	வாத்திய விருந்து	வாத்திய விருந்து	வாத்திய விருந்து	வாத்திய விருந்து	வாத்திய விருந்து
காலை 04.30–05.00	தேவாரம்	தேவாரம்	தேவாரம்	தேவாரம்	தேவாரம்	தேவாரம்	தேவாரம்

Astra Satellite - Movie Channel
Transponder - 18
Audio - 7.56
Video - 11.479

இலங்கை - இந்திய - தென்னாபிரிக்கா - கிழக்கு நாடுகளுக்கான விஷேட ஒலிபரப்பு தினமும் இடம்பெறுகிறது.
லண்டன் நேரம் அதிகாலை ஒருமணிக்கும் ஏணைய ஐரோப்பிய நகர நேரம் அதிகாலை இரண்டு மணிக்கும்
SW 41 - 7475 KHZல்

இலங்கையில் காலை ஏழு மணிக்கும், இந்தியாவில் காலை 6.30 மணிக்கும் சிற்றலையில் ஐ.பி.சி தமிழ் ஒலிபரப்பைக் கேட்கலாம்.

முகவரி:
IBC Tamil
P.O.BoX 1505,
London SW8 2ZH,
U.K.

ஆக்கங்களை அந்தந்த நிகழ்ச்சித் தலைப்புகளை குறித்து அனுப்பி வையுங்கள்.

தொலைபேசி இலக்கம்: 00441 71 787 8000
தொலை மடல் இலக்கம்: 00441 71 787 8010
தொலைபேசி நிகழ்ச்சிகளில் நேரடியாகப் பங்கு பற்ற அழைக்கவேண்டிய இலக்கம்:
0044 171 564 4444

நண்பர்களே,

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிலிந்து
பவளக் கூர்வாய் செங்கால் நாராய்.."**

எவ்வளவு அருமையான ஒப்புவமை! நாரையின் சொண்டைப் பார்த்த அன்றைய கவிஞனுக்கு உடனடியாய் பனங்கிழங்குடன் ஒப்பிட்டு ஒப்புவமைக் குற்படுத்தல் சாத்தியமாகிக் கொள்கிறது. ஆனால், அதிலிருந்து இன்று, புதியன பெறப்படுவதற்கு/ பழையவற்றிலிருந்து புதிய விருத்தி ஒன்று இயல்பாகத் தோன்றுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழும் கவிஞன் பழையவற்றிலிருந்து, புதியவற்றிற்கு நகர்த்திச் செல்கிறான். ஒரு ஒப்புவமையே! இஃது, ஒரு குறிப்பிட்ட சூழலில் பேசப்படும் போது தனக்கான முழு ஆளுமையையும் வெளிப்படுத்துகின்றது.
பாருங்கள் அக்கவிதையை:

**"நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்து
பயன் மிக அறிந்த பனை செறி நட்டார்
வழி பல சென்றே பலதிசை பரந்தார் "**

நாராய்! உன்னைக் கண்டு உன் அலகை/சொண்டை பனங்கிழங்குக்கு ஒப்பிட்ட என் இனம்-பனை செறிநாட்டார்(தமிழர்கள்) பற்பல அரசியல் கொள்கைகளுடன் திக்குத்திக்காய் செல்கின்றனர். அவர்கள் ஒருவழிப் பாதையில் வருவதும் காரியமாற்றுவதும் எந்நாள் நாராய்?

"வருகுவ தெந் நாள் அறிவாயோ நாராய்?"
இப்படிச் சுட்டுகிறான், விழிக்கிறான் கவிஞன். இஃது, நேரடியாய் மின்னும் கருத்தை மறைமுகமாகவேண்டுமெனும் தொனியில் தாமே தவிர, நாராயை மண்டியிட்டு கேட்கிற நோக்கிலல்ல.

**"திரைகடல் ஓடித் தம்முயர் பேணத்
திரிந்தவர் தமக்கோ எங்கணும் அவலம்
கரியவர் அயலாம் எனவசைகேட்போர்
கவலைகள் நீயும் உணர்வாயோ நாராய்?"**

தாயகத்தைத் தொலைத்து உயிர்த் திருப்பதின் இருத்தலுக்காக ஐரோப்பிய வெள்ளைத்தேசத்தில் அகதியாகிவிட்ட தமிழ் பேசும் மனிதர்களின் வாழ் நிலையை - அவர்தம் சமூக மெய்ப்பாட்டை (எங்கள் சமூக வாழ்வை) ரொம்ப கவலையோடு பேசும் வரிகள் நிறவேற்றுமையின் கொடூர முகத்தை வெளிக்கொணர்ந்து உரைத்துப் பார்க்கும் இவ்வரிகள் எம்முள் ஒரு கிளர்ச்சியை உக்கிரத்தை உண்டு பண்ணத்தவறவில்லை. எம் சமூக வாழ்வின் சிதறல்களை நியாயமாக உணரும் எம் மரக்கட்டை உணர்வுக்கு அறிவுக்கு இஃது சாட்டை கொண்டு சொடுக்குகிறது. அன்னிய தேசத்தின் அவல அகதிவாழ்வை ஏற்கமுடியவில்லை. இழி நிலை செய்யும் சமூக வரையறைகளை எதிர் கொள்ளும் சக்தியும் புலம்பெயர் வாழ்வில் அமையவில்லை. எனவே துக்கத்தோடு கவிதை நாராயிடம் சென்று சோகத்தை வெளிச்சத்திற்குக் கொணர்கிறது.

நாம் எமது இருப்பின் பலவீனத்தை புரிகிற அதே மொழியில், உயிர்ப்பலி கொடுத்து நாட்டினைப் பேண முயன்றவர் தலித்துக்கோ எங்கணும் அவலம் பறையர் - நளவர் - கரையார், அயலார் என வசைகேட்போர் கவலைகள் நீயும் உணர்வாயோ நாராய்!,, என்றும் கவலையின் மறுபக்கம் விரிய இன்னும் ...
இன்னும் ஆழ்ந்த துக்கத்தோடு எம்முள் கொதிக்கின்றோம்.

**"தன்வினை தன்னைச் சுடும்"
என்பது இதுதானோ?**

**"நாராய் நினக்கோ யாதும் ஊரே
நாராய் நின் இனம் யாவரும் கேளீர்
பாராய் எங்கள் மனிதனின் நிலையை
நாராய் நமக்கோர் நல் வழி கூறாய்"**

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே.."**

-புறநானூறு: பாடல் 192

இவ்வாறு பாடிய கணியன் பூங்குன்றனார் மனதைப் பண்பாட்டின் கோபுரம் என்போம்.

வேறுபட்ட பொருள்களுக்குள்ளே பொதிந்துள்ள ஒப்புவமையை விளங்கிக் கொள்ளும் நாம், ஓரினத்தின் பண்பாட்டின் உயர்வைக் குறித்து துக்கத்துடன் பேசுகிறோம்.

ஆம்!

இங்கு ஓரினம் என்பதின் அர்த்தம்: பொதுவான மனித இனத்தையே!
"பாராய் எங்கள் மனிதரின் நிலையை"
இங்கு - இனங்களாக / குழுக்களாக பிளவுபட்ட மனிதர்களையெல்லாம் பொதுவாக்கி, தன்னோடு சேர்க்கும் சிவசேகரம் - கணியன் பூங்குன்றனாரின் **"யாதும் ஊரே யாவரும் கேளீர்"** என்பதை சொல்லாமல் சொல்லுவது போன்று, சொல்லுகின்றார்.

இந்த தோறணையில் புரிந்து கொண்டால் சிவசேகரம் என்ற கவிஞன் காலத்தால் அழியாது நின்று வாழும் கவிகளோடு கை கோர்க்கின்றான்.

சங்ககாலத்தின் கவிஞர்களில் சிலர் போருக்கும் அழிவுக்கும் எதிராய் கலகக்காரர்களாய் இருந்துள்ளார்கள். ஔவை முதல் கோவூர் கிழார் வரையும் எமக்கு இவ்வுண்மையைச் சுட்டுகின்றனர்.

இன்றைய கவிஞன் சிவசேகரமோ:

**"அகதியின் வாழ்வின் இழிநிலை தாங்கி
அன்னிய மண்ணில் அண்டிக்கிடந்து
மிக நலி மாந்தர் தம் நகர் மீளும்
வகையென ஒன்றேன்
மொழிவாயோ நாராய்?"**

என்று, நாராயிடம் விடிவு கேட்பது போன்று - நாராயைக் குறியீடாக்கி, தன்னைத் தானே கேட்கிறார்!.
இஃது, ஒருவகையில் புதுமையான வடிவம்; பொலிவு நிறைந்தது.

ஒவ்வொரு கவிஞனதும் "கவி உள்ளம்" கண்டு கற்பதும் செரிப்பதும் மிக,மிக முக்கியம். அதை, நான் சிவசேகரத்தின் கவிதைக்குள் பரிசோதித்துப் பார்த்து உள்ளேன்.
திரு.சி.சிவசேகரம் அவர்களை பண்டையப் புலவர்களுடன் வைத்து ஒப்பீடு செய்யமுடியும். எனினும் இப்போது என்வேலை அதுவல்ல; மாறாக, அவர்படைப்பிலுள்ள நாம் காணும் பெறும் உணர்வுகள் குறித்தே பேசுகின்றேன்.

இன்றைய சமூகத்தில் இன்றைய காதலுக்காக கம்பன் பாடிய வரிகள் பதிலாக வரும். சிலவேளை ஔடதமாகவும் இருக்கும்:

**"ஆக்கினேன் மனத்து ஆசை;
அவ் ஆசை என்
மூக்கினோடு முடிய, முடிந்திலேன்;
வாக்கினால் உங்கள் வாழ்வையும்,
நாளையும்
போக்கினேன்; கொடியேன்!"**

(- கம்பன்- 3065)

கம்பனின் கவித்துவம் மிக மிக நேர்த்தியானது. சிலவேளைகளில், கவிதையுள் நிலவும் உயிர் வீச்சு முழுமையாக அனுபவமாவது கம்பனிடம் மட்டுமோ என்று நான் நினைப்பதுண்டு.

ஆதவனிடம் கவிதைக்கான பாடு பொருள் நல்ல அனுபவமாக முகிழ்க்கிறது. ஆனால் கவிதை பூப்பது மிக மிக அரிது. தேவைக்கு அதிகமான சொல்வீச்சுக்கள் கவிதையாகுவதில் சிரமங்கள் அதிகம். ஆனால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வகைச் சொல் வீச்சுக்களை அதிகமாக நீட்டி முடிக்கும் ஜெயபாலன் கவிதையை அதன் கருத்துகளுடன் படைத்துவிடுகிறாரே!
ஆதவனிடம் நல்ல பாடுபொருளிருந்தும் கவிதை, கவிதைக்குரிய பண்பைப் பெறாது போகிறது!. ஆதவன் முயற்சித்தால் வருங்காலங்களில் நல்ல ஆளுமையான கவிதைகள் தருவார். இவரிடம் சிறுகதைகள் சிறப்பாக உருப்பெறுகிறது. கவிதைகள் தோல்வி அடைகிறது.

மு.பொ. அவர்கள், அண்ணன் அமரர் மு.தளையசிங்கம் அவர்களின் வழியில் சிந்தித்தாலும், மு.த.வின் மெய்யுளுக்கு நிகராக முடியவில்லை.

அது சரி கவிதையென்றால் என்ன?
வெறும் சொற்களைக் கோர்வையாக்கி அடுக்கி விட்டால் கவிதையாகி விடுமா?
படிமங்களில் புதுமை;
எளிமை;
பட்டறிவுக் கலப்பு;
உணர்வுச் செறிவு வேண்டாமா?
உவமை, உருவகம், படிமம், குறியீடு, ஓசைநயம், உள்ளுறை இறைச்சி இவைகளெல்லாம் வெறும் பேத்தல்களாகிப் போய்விட்டதா?

இப்படி என்னுணர்வு மு.பொ.வின் கவிதைக்குள் பயணித்தபோது ஏற்பட்டது. யாப்பைக் கழற்றிவிட்டு நவீன கவிதை இன்னும் மேற்கூறிய கவிதை விதிகளை தள்ளிவிட முடியவில்லை. இதை சிறப்பாக பயன்படுத்துபவர்கள் மகாகவியாய் நு்ஃமானாய் மலர்கிற போது சிலர் கோட்டை விடுகிறார்கள்.

"வாழ்தலும் இருத்தலு" மில் மு.பொ. நம்முள் எதுவுமே செய்யத்தூண்டாத சொற்கோர்வையாளராக வலம் வருகிறார்.

ஒரு மூத்த கவிஞர்; எழுத்தாளர்; பத்திரிகையாளர்; திரு.மு.பொன்னம் பலம் அவர்கள்.
இவரது உவமைகள் வீச்சோடில்லை!
கவிதை மனக்கிளர்ச்சியைத் தூண்ட வில்லை.

கவிதைக்குரிய எதிர் வினையை உண்டு பண்ண முடியாது போய்விட்ட நிலையில் இவர் படைப்பு.
எனினும்,

"என் இருப்பு எதிலும் இல்லாமல்
காலம் கொறித்துப் பறக்கவிடும்
இலவம் பஞ்சு."

என்ற உவமை, உருவகங்களில் மு.பொ.உயர்கிறார்.

உவமையும், பொருளும் தம்முள் ஒத்தன என்று உலகம் அறிந்து ஒப்பு மாறு உவமை அமைய வேண்டும்.

"உவமையும் பொருளும்
வேற்றுமை ஒழிவித்து
ஒன்றென் மாட்டினஃதுருவக மாகும்"
-தண்டியலங்காரம்/ பொருளணியியல்:36

இப்படி உவமைகள் பிறப்பெய்தினால் நல்ல பாடுபொருளற்ற ஒப்பாரிகள் கூட கவிதைக் கோட்டைக்குள் இலகுவாக வந்துவிடும்.

மு.பொன்னம்பலம் அவர்களுக்கு எதுவுமே கை கொடுக்கவில்லை. கடந்த கால வாழ்வும், இருப்புக் குறித்த தேடலுங்கூட அவர் கவிதையை அம்போ என்று விட்ட படி......
என்ன செய்யலாம்.?

கண்முன்னே கிடக்கும் சமூக அவலங்கள் நம் கண்முன் தெரியவில்லை. ஒடுக்கு முறைகள் சராசரி வாழ்வாய் போய்விட்ட பிரமை. முல்லை அமுதனின் பெயரிடப்படாத கவிதையைப் பார்ப்போம்.

"நடந்து பார்த்தேன்
உட்கார் என்றன கால்கள்
உட்கார்ந்தேன்.
எழுந்து நட என்றன காலங்கள்!!
யாருக்கு யார் இங்கு ஆணையிடுவது
இன்னும் இரவு அகலாத நிலையில்..
பகல் வருவதாய் நினைப்பு! "

முல்லை அமுதனின் அகத்துள்/ கவியுள்ளத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணி நம்மெல்லோரிடமும் செல்வாக்குச் செலுத்தும் அந் நியமாதலே!; உறவுகள் சிதற, நாலா பக்கமும் சிதறியோடும் அவலம் திரு.சிவசேகரம் அவர்களிடமும், முல்லை அமுதனிடமும் வலுவான பாதிப்பைச் செய்கிறது. இருவரும் வெவ்வேறு கோணத்தில் கவி புனைகிறார்கள்.

ஆனால், மு. அமுதனிடம் படிமங்கள் மட்டுமே கவிதையென்ற நிலையாய் போக, கவிதை ஸ்தம்பிக்கிறது.
வெறும் படிமங்கள் மட்டுமே கவிதையாகி விடுமா?

"குருவி இறந்து நாளாயிற்று
இருப்பது நிழல் மட்டும் தாம்"
நிழல்=படிமம்.

எப்போதோ உயிருற்றிருந்த குருவி-கவிஞன் முன் காணும் பொருளாக உயிருற்றிருந்து சாகிறது. கண்ணுற்ற குருவி காலத்தாலோ-அன்றி விபத்தாலோ அழிய, அதன் நிழல் படிமம் ஆகிறது! குருவியென்பது வெறும் குருவியா? அல்லது குறியீடா? உறவுகளின் அழிவுக்குப் பின் எஞ்சும் அவலம் படிமமா?
உறவுகளின் அழிவோடு நினைவோடு நீந்தும் உணர்வுகள் படிமமாகி இஃது குறியீடாக கவிதையுள் மலர்கிறது.

"கிணற்றில் நீர் அள்ளும்
சத்தம் நிரந்தரமானது......
உயிர் விலகும் சத்தம் போல்.....
பிரமைதாம்."

அன்றாட வாழ்க்கையில் நீர் அள்ளும் நிலை இயல்பான படிமம் ஆகும்.
தினமும்/ஒவ்வொரு கணப்பொழுதும் இஃது நிகழும்.
ஆனால் மரணம்?
இந்தக் கவிஞன் எதனுடன் ஒப்பிடுகிறான்?
"உயிர் விலகும் சத்தம் போல்...."
நீர் அள்ளும் சத்தத்தை விளக்க உயிர் விலகும் சத்தத்தை படிமமமாக்கி ஒப்புவமை செய்கிறான். இஃது, வன்மைமிக்க துன்பியலை விளக்கும் ஒரு உன்னத சிந்தனைதாம்!
"நீர் அள்ளும் சத்தம் நிரந்தரமானது"
ஆனால் உயிர் விலகும் சத்தம்?;
இப்போது நிரந்தரமாக/ஒவ்வொரு நிமிஷமும் நிகழ்வதால், இஃது படிமமமாகி ஒன்றை விலக்கிட முயற்சிக்கிறது.

படிமத்தைப் படிமம் அள்ளிக் கொள்கிறது. ஒன்று மற்றொன்றைக் காட்சிப்படுத்துகிறது. கூடவே மரணத்தின் மலிவை உக்கிரமாக வெளிக்கொணர்கிறது. இஃது இலங்கையின் இன்றைய நிலை. இஃது இவனுக்கு பிரமையாகி விடுகிறது.
எல்லாமே வழமையாகி இயல்பாகி விடுகிறது; வாழ்வு அந்நியமாகி, வெறும் படிமங்களாக வாழ்வும்/உணர்வும் செயல்பட கவிஞன் பிரமை கொள்கிறான்.

"நீ என்பது மருவி
அவள் என்பதாகி விட்டது"

எவ்வளவு உணர்வு பூர்வமான பிரக்ஞை!; அந்நியமான யாவையும் இவ்வொரு வார்த்தைக்குள் தேக்கிவைத்துச் சொல்லும் மு.அமுதன் சிலவரிகளில் உச்சங்களைத் தொடுகிறார். எனினும், அவருக்கு மூச்சு திணறுகிறது.

யாருக்கு யாரிங்கு ஆணையிடுவது?
சமூகக் காரணிகள் யாவும் நிறுவனமாகி விட்டன. மனிதர்களை, அவர்கள் சுயத்துடன் வாழ விடாத நிலை. பின்னாலிருந்து ஏதோ இயக்குகிறது.
இது பாரம்!
விலங்கிட்ட வாழ்வு,
தன் தேவைக்காக எங்கெங்கோ மனிதர்களைத் துரத்தி அலைய விடுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவை விடியாத "இரவு அகலாத நிலை"; பகல் வருவதாய் நினைப்பதைத் தவிர வேறேதும் முடியாது போகிறது.

சமூகத்தின் மிக இழிவான நிலை மனிதரை, அவர்கள் உயிர் வாழ்தலைக் கேள்விக்காக்கும் அடக்குமுறையாகும். இ∴து, குதிலனின் "முள்" கவிதையில் வெளிப்படுகிறது.

இன்று மக்களின் நிலை இலங்கையில் இதுதானே? நாலாபக்கமும் சிங்கள பாசிச இராணுவம் துப்பாக்கியுடன் துப்பாக்கி தாங்கி இனவாதப் படைகள் தாம் இன்று, தமிழ் பேசும் மக்களை நாளை உயிர் வாழவிடுவதா? இல்லையா? எனத் தீர்மானிக்கிறது.

தமிழ் பேசும் மக்களின் நிலையை குதிலன் அழகாக வெளிப்படுத்துகிறார். சூழ்நிலையின் கைதிகளாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களினது வாழ் சூழலைப் பாருங்கள்.

"சிறுநீர் கழிக்க
முன்தயாரிப்புகள் செய்தாலும்
முடியாத தவிப்புக்களாய் நீண்டும்
முக்கல் முனகல் தான் அதிகம்
அதிகம் என்பேன்."

இன்று இராணுவ வலயத்துள் சிக்குண்ட தமிழ் மக்களின் அவலத்தைக் கண்டு ஆவேஷப்படும் குதிலன் சிறப்பான முறையில் வெளிப்பாட்டில் வெற்றி எய்திவிடுகிறார்.
தமிழ் மக்களுக்கு இயலாமையை உருவாக்கும் சிங்கள பாசிச இராணுவத்தால் மக்களிடம், "எல்லாமே எல்லாமாகும் போது" குதிலன் சொல்லுகிறார்:

"....எவ்வாறாயினும்
எல்லாமே பழகிப்போய்
விடுகிறது என்பேன்."

இந்தக் "கிழக்கும் மேற்கும்" தொகுப்பில் எனக்கு வேண்டிய கவிதை "திரும்புதல்" ஆகும்.

மனிஷ்ய புத்திரனின் கவியுள்ளம் பிரக்ஞையுடன் பிணைந்து காலத்தால் சாகாத படைப்பைத் தருகிறது!; சமூக நெருக்கடியின் கூர்மைப்பாட்டை உணர்வு பூர்வமாக உள்வாங்கிய விளைவாக, மனுஷ்ய புத்திரன் தன் அகவியலில் இருந்து தயாரித்துக் கொள்ளும் "திரும்புதல்" கவிதை எமக்குள் நுழைந்து-எமைத் தாக்கிக் கொதிப்படைய வைக்கிறது. உடம்பு நெருப்பாய் கொதிக்க மூளையில் ஏதோ பொறி தட்டி மனவெளியெங்கும் தனிமைப்பட்ட/குடும்ப உறவுகளை அறுத்த ஒன்றைப் பரிணாம மனிதர்களாய் நாமிருப்பதை சுட்டிக்கொள்கிறது.

"நீண்ட நாளைக்குப் பின்
என் வீட்டுக்குப் போகிறேன்
நண்பா,
இன்று நீ என்னோடு வரவேண்டாம்"

இது பற்றி எதை எழுத?; நான் தானே இப்படிச் சொல்லுகிறேன்! இ∴து, என்குரல்; என் வாழ்சூழல், பின்பு எனக்கு நானே உரையாசிரியனாவதா?

எத்தனையோ ஆசைகள், கனவுகள், நான் பார்த்த உறவுகள், கண்டு கழித்த இடங்கள், இவற்றைப் பார்க்கணும், உறவுற வேண்டும். நீ கூடவே வந்தால் உன்னைக் கவனிப்பதில் என் சந்தோஷம் தொலைந்து விடும். ஆதலால் புரிந்து கொள் நண்பனே!

"திசைமாறி விடும்
உறவுகளின் வழித்தடங்கள் மேல்
நிட்சயமற்று நுளைகின்றேன்....."

"என் வீட்டின் குழந்தைகளை
வழியெல்லாம் நினைத்துக் கொண்டே வந்தேன்.
வீடு வந்த பிறகு,
அவர்களைப் போச்சேர எவ்வளவோ தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது."

"கிழக்கும் மேற்கும்" தொகுப்பிலுள்ள மற்றைய கவிதைகளும்/ படைப்பாளிகளும் மேற்கூறியவர்களைப் போலவே சமூகத்தில் கால் பதித்து பிரக்ஞை பூர்வமாய் எழுதுகிறார்கள். இது சோதியா, மு.புஷ்பராஜன் இருவரும் உயிர்த்து நிற்கிறார்கள். மற்றவர்களும் அவ்வண்ணம் உயர்வார்கள்! இ∴து, காலத்தால் நிகழவேண்டும்; நிகழும்.

.... - தொடரும்

இன்னும்

ஆற்றம் கரையில்
இன்னும் தோற்றுப் போகாத மரம் நான்

இன்று தெளிந்துபோய்
புல்லும் சிலும்பாமல் நடக்கிறது காட்டாறு.
விடியலில் இருந்தே ஒளியைக் கசக்கி
கோலிப்பண்டிகைக் குறும்போடு
வண்ணங்கள் வீசி
தொட்டுத் தொட்டுச் செல்கிறது அது.
நேற்று வெறிகொண்டாடியது தானல்ல என்பது
போல

எனது கன்றுகள்
முளைத்தெழுகிற நாள் வரையேனும்
கைவிட்டகலும் வேர்மண் பற்றி
பிழைத்திருக்கிற போராட்டத்தில்
நேற்று அடைந்த விரக்தியை மறந்தேன்
அது நானல்ல என்பது போல.

நேற்றைய துன்பமும் உண்மை
நாளைய பயமோ அதனிலும் உண்மை
எனினும் இன்றில் மொட்டவிழ்கிறதே வாழ்வு
சிறகசைக்கிறதே வண்ணத்துப் பூச்சிகள்
துள்ளி மகிழுதே பொன்மீன்கள்...

நமது அன்றாட மறதிக்கு பரிசுதானே
இந்த நட்பும் வாழ்வும்.

வ.ஐ.ச. ஜெயபாலன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலம் ஆகிவந்த கதை

பஞ்சம் பாடாய்ப் படுத்திக் கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது. துரைராசண்ணை கடைக்கு ஓடுவோம். விடிய ஆறு மணிக்குப் போனால் ஏழு மணிக்கிடையில் பாண் வரும். சில வேளை, கிடைக்கும்; கிடையாமலும் போகும். கிடையாமல் போனால் பொன்னாரண்ணையின் தோட்ட த்திற்குப் போகவேணும். மரவள்ளிக்கிழங்கு புடுங்கித் தருவார். செம்பாட்டுச் சேறுகாலில் அப்ப, காத்து நின்று மரவள்ளிக் கிழங்கு வாங்கிச் செல்வோம்.

கால் கழுவிக் கிழங்கு அவித்து பள்ளிக்கூடம் போக நேரம் போய்விடும்.

ஓட்டம்!

அம்மா அரிசிமா தேடித் திரிந்து விட்டு இருந்திருந்து புட்டு அவிப்பா. அம்மா செய்கிற பிழை இதுதான். ருசியாகக் கறிகளை வைத்து விடுவா. சொல்லப்போனால் மீன் குழம்பு, ராசலிங்கத்திடம் வாங்கிய மீனில் குழம்பு. புட்டுக்கு விட்டுச்சாப்பிட்டால் சோக்காய் இருக்கும். கோப்பையில் அள்ளி அள்ளிப் புட்டுப் போட்டுச் சாப்பிட ஆசை. ஆனால், மற்றவர்களும் சாப்பிட வேண்டும். அம்மா ருசியா குழம்பு வைக்காமல் விட்டிருக்கலாம்.

ஒரு சனிக்கிழமைத்தினம்.

நன்கு முதிர்ந்து, கனிந்த கப்பல் வாழைப்பழங்கள் கிடைத்தன. அம்மா அரிசிப்புட்டு அவிச்சா. அம்மம்மா புட்டுடன் வாழைப்பழத்தை பினைஞ்சு சாப்பிட்டா. பல்லில்லாத பொக்கை வாய்க்கு அது பதமாக இருந்தது. அம்மம்மா "பிள்ளை, இன்னும் கொஞ்சம் புட்டுத் தருவியே" என்று இரங்கி அம்மாவிடம் கேட்டா. இப்படிக் கேட்டபோது அம்மம்மாவின் முகத்தைப் பார்க்க எனக்கு முடியவில்லை. அம்மாவின் முகத்தைப் பார்க்கவும் முடியவில்லை. இப்போ நினைக்கிற போது கண் கலங்கு கின்றேன். அவை பஞ்சப்பட்ட தினங்கள்.

* ———— * ———— *

1974 ஆம் ஆண்டில் , விடியலில் பனி பெய்து குளிரெடுத்து, மத்தியானம் வெய்யில் காங்கைகளை வீசிக் கொண்டிருந்த முற்பகுதிக் காலம். இந்த நாட்களில் சங்கக் கடையின் வாசலில் பாணுக்கு நீண்டகியூ நின்றது . நீண்ட கியூ என்றால் சங்கக் கடையில் இருந்து அம்மாள் கோயில் வரை நீண்டிருக்கும். கிழமையில் இரண்டு தரம் இப்படி நிற்போம்.

எனக்கு முன்னால் ஒருவர் நிற்பார். அல்லது எனக்குப் பின்னால் அவர் நிற்பார். அவரது கொட்டிலும் சங்கக்கடைக்கும், அம்மாள் கோயிலுக்கும் இடையில் இருந்தது. அவரும் அவரது அம்மாவும் அதில் இருந்தனர்.. அது எனக்குத் தெரியும். அவர் ஒற்றை வேட்டியுடன் நிற்பார். ஒழுங்கான வேட்டி அல்ல. அளவெட்டிக்குரிய செம்பாட்டு ஊத்தை வேட்டி. சேட் இல்லை. ஊரும், வயிறும். வெக்கையில் எரிகிறபோது சேட் எதற்கு? சாடையாகக் கூனிய படி நிற்பார். வயிறு எக்கி இருக்கும். என் பிடரியில் அவர் மூச்சுப்படுகின்ற போது, அவர் வாயிலிருந்து மெல்லிய மணம் வீசும் . எனக்குப் பிடித்த மணம். வெத்திலை பாக்குச் சப்பிய வாயிலிருந்து வீசுகிற மணம் அது. ஒடிப்போய் வீட்டில் ஒரு வாய் வெத்திலை போடவேண்டும் என்று ஆசை எழும். வெத்திலை பாக்கும், மரக்கறிகளும் மாத்திரம் தான் கூப்பணில்லாமல் எடுக்கலாம். எங்கள் தோட்டங்களில் விளைஞ்ச செத்தல் மிளகாய்க்கும் கூப்பன் இருந்தது.

கூப்பணில்லாம் இருந்த இனனொன்று பசி ! பசி! வயிற்றில் நெருப் பாக எரிந்தது .

அப்படித்தான், ஒற்றை வேட்டி கட்டி, ஒல்லியான அவரும் நின்றார். என்னுடனும், அவருடனும் நீண்ட கியூவில் கொஞ்சம் முந்தியே வந்த படியால், முன்னால் நின்று பாண் வாங்கிப் போன ராசம்மாக்காவின் பாணை சைக்கிளில் சென்ற ஒருவன் பறித்துக் கொண்டோடினான். ராசம்மாக்கா றோட்டின் கரையிலிருந்த மண் அள்ளித்திட்டினார். பிறகு பசித்ததோ?, இரவைக்கு என்ன சாப்பாடு என்று யோசித்தாரோ?, அல்லது மத்தியானமும் சாப்பிட வில்லைத்தானோ? என்னமோ றோட்டின் கரையில் குந்தியிருந்து ராசம்மாக்கா அழுதார். நான் அறிய பின்னேரத்துப் புழுதி கலந்த வெயிலுக்கு அவா இருந்து அழுதது சோகத்தைச் சொன்ன ஓவியமாக இருந்தது.

யாவற்றையும் குறிக்க வேண்டிய காலம் வந்து விட்டது. இதை இப்போது நான் குறிக்கின்றேன். ஆனால், எனக்கு முன்னால் நின்றவர், (அல்லது பின்னுக்கு நின்றவர்) இதை எழுதக் கூடிய வல்லமை பெற்றிருந்தார். அது அப்போது எனக்குத் தெரியாது. ஆனால், இப்போ தெரியும். அவரால் எழுதியிருக்க முடியும். 'காளிமுத்துவின் பிரஜா உரிமை', அல்லது 'புகையில் தெரிந்த முகம்' எழுதத் தெரிந்த அவரால் இதனை எழுத முடிந்திருக்கும். ஆனால், எழுத வில்லை. அதனை அவர் எங்கும் எழுதினதாகவும் ஞாபகமில்லை .

* ———— * ———— *

அந்த ஒற்றை வேட்டி கட்டிய, ஒல்லியான வயிறு, எக்கிய சாடையான கூனல் விழுந்த அந்த ஆள் ஆரென்று எனக்குப் பிறகு தெரிந்தது .

அது தெரிய ஐந்து வருடங்கள் ஆயிற்று. எங்களது மகாஜனாக் கல்லூரியில் நடை பெற்ற சிறுகதைப் போட்டியில் எனது "அபத்தம்" சிறுகதை முதலிடம் பெற்றது. நடராஜா மாஸ்ரர் (மயிலங் கூடலூர் பி. நடராசன்) "உங்கன்ரை கதையைச் செலக்ற் பண்ணினவர். உங்களைச் சந்திக்க வேணுமெண்டு விரும்பிறார்" என்றார். நான் போய்ச் சந்தித்தேன். அவர் பாணுக்குக் கியூவில், என் பிடரியில் மூச்சுப்பட நின்றவர். அடக் கடவுளே!, அவரா இவர்? வெத்திலை பாக்குச் சப்பிய வாயுடன் , மணத்துடன் நின்ற அவரா இவர்? என்னால் அப்போது அதனை நம்பமுடியவில்லை. அளவெட்டி அப்போது இந்தக் கலைஞனை மதிக்காமலிருந்தது. அதுதான் எனக்கும் அவரைத் தெரியாமலிருந்தது.

* ———— * ———— *

அவர் எனது கதையைப் பற்றிச் சொன்னார். "நல்ல கதை. இந்த நடைதான்..... ஒரு 'விறிஸ்ஸா' நடை உமக்கு வருது" என்றார். எனக்குப் 'விறிஸ்ஸா' எழுத்து நடை எப்படி இருக்கும், என்று தெரியவில்லை . " எனக்கு விளங்கேல்லை என்றேன்"

"ஒழுங்கான நடை இல்லை. விசயத்தைச் சொல்ல வந்து அங்கை இங்கை யெண்டு நடைவாறது" என்றார் எனக்குப் 'விறிஸ்ஸா' என்ற சொல்லுப் பிடித்துப் போயிற்று.

ஆனால், வாழ்க்கை அப்படி ஆகிப்போவது யாருக்குத்தான் பிடிக்கும்? அவரது வாழ்க்கை அப்படித்தான். ஆனது 'விறிஸ்ஸா' வாகிப் போனது.

அவர் 'ஈழநாடு' பத்திரிகையில் வேலை செய்திருந்தார். நான் சந்தித்த போதில், வேலையை விட்டு விட்டார். விட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்தித்த போதில், வேலையை விட்டு விட்டார். விட்டு விட்டதற்கான காரணத்தைச் சொன்னார். இழுப்பு நோய் அவரை வீட்டில் இருக்க வைத்து விட்டது. ஓடிப்போய் பஸ் ஏற ஊர்ப்புழுதி விடுவதில்லை. இழுப்பு இன்னும் அதிகமாகும்.
பகல் பதினொரு மணிக்கு வீட்டின் முன்னால் இருந்த வாசிகசாலையில் அவர் பத்திரிகை வாசிக்கக் காணலாம்.
அவரை 'அவா் தான்' என்று தெரித்த காலத்தில் பாணுக்குக் கியூ இல்லாமல் போய்விட்டது. ஆயினும் அவரை மூன்று இடத்தில் நான் கண்டேன். வாசிகசாலையில் கண்டேன்; முன்னா லிருந்த மணியண்ணை கடையில் கண்டேன்; அவரின் கொட்டிலில் நான் அவரைக் கண்டேன்.
ஏதோ விருப்பம் உந்தி, அவரது கொட்டிலுக்குப் போகும் சந்தர்ப்பங்களில் அவரது வாழ்வை நான் கண்டேன். அது எளிமையானதாகவும், இனிமையானதாகவும் இருந்தது. அப்படித்தான் நான் நினைத்தேன். சின்னச் சின்னக் கிண்ணங்களில் கறிகள் இருந்தன. கிண்ணங்கள் ஒன்றிரண்டு தான் இருக்கும். சில வேளை, அக்கிண்ண மொன்றில் சம்பல் இருந்தது. அக் கொட்டிலில் மச்சம் மணத்ததாக நான் அறியேன். சிறு பானையில் வெள்ளைப்பச்சை அல்லது குத்துப் பச்சை அரிசியில் சோறு. அது புக்கைவடிவில் இருந்த ஞாபகம். இருவருக்கான உணவு. இவை எனக்கு எளிமையாகவும், இனிமையானதாகவும் இருந்தன. ஆனால் அதற்குள் ஏதும் வாழ்வின் குரூரம் இருந்ததோ அதுவும் அப்போது எனக்குத் தெரியாது.
ஆனால், அவரது 'மனித மாடு' சிறு கதைத் தொகுப்பு வெளி வந்த போது இந்த வாழ்வின் குரூரங்கள் அவர் எழுத்தில் தென் படவில்லை. அது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அழகை யாசிக்கின்ற கலை ஞனாகத்தான் அக்கதைகளில் அவரை நான் தரிசித்ததாக இப்போது எனக்கு ஞாபகம். அத்தொகுப்பு இப்போது என்கையில் இல்லாததால் இதனை நான் உறுதியாகக் கூற முடியவில்லை.

* ———— * ———— *

'விறிஸ்ஸா'வாகிப் போனது அவரது படைப்புகளும் தான். அவரது கதைகளை வாசிக்க நான் ஆவல் பட்டேன். கேட்டேன். அவர் 'ட்ரங்குப் பெட்டி' யைத் திறந்து காட்டினார். 'புகையில் தெரிந்த முகம்' தொடர் கதையின் சில துண்டுகள் மாத்திரம் தான் இருந்தன. (இதனை எழுதுகின்ற போது என்னையிட்டு நான் என்னுள் சிரிக்கின்றேன்) பல கதைகள் தொலைந்து போய் விட்டன. என்று கவலையோடுஅவர் சொல்லவில்லை. அது அப்படித்தான் நடக்கும் என்ற தொனி தான் அவர் குரலில் இருந்தது. அவர் ட்ரங்குப்பெட்டிக்குள் இருந்தனவெல்லாம் முற்றுப் பெறாத காகிதங்களே. எனக்கு அது அவரது முழுமை பெறாத வாழ்வைக் குறித்தது. அவரது வாழ்வு ஒழுங்காக இல்லை. 'விறிஸ்ஸா' வாகித்தான் இருந்தது.
நாங்கள் நால்வர். 'புதுசு' தொடங்கிய போது, அவரிடம் எழுதப் பட்டிருந்த ஒரு கதை கேட்டோம். "ஒன்று மேயில்லை" என்று சாதரணக் குரலில் கூறினார். எப்போதோ "ஈழநாடு" பத்திரிகையில் தொடராக எழுதியிருந்த "பசுந்தளிர்" எனும் தொடர் வெளியீட்டிலிருந்து, இது வரை தொலைக்கப்படாதிருந்து, தப்பிப் பிழைத்த ஒரு துண்டை எடுத்துத்தந்தார். 'புதுசு' முதலாவது இதழில் "முதன்மைச் சங்குமுழக்கி வெளிவரும் அரிதான தொரு சிறுகதையாக நன்றியுடன் அதனைப் பிரசுரித்திருந்தோம்" இறுதியாக 'இன்றைக்கெல்லாம் அவர் பேனாவக்கு ஒய்வு' என்று அதில் எழுதியிருந்த வரிகளை, கும்பழாளைப் பிள்ளையார் கோயில் காலை பத்துமணிப் பூசையின் மணி ஒலி கேட்கிற போது அளவெட்டி ஜெயா அச்சகத்தில் புருப் பார்த்த நினைவு எல்லிப்போலை வளவின் அணிஞ்சில் பழம் போல இனித்து நெஞ்சில் எழுகின்றது.

* ———— * ———— *

அப்பாவுடன் கதைக்கின்ற பொழுது இவர் பற்றிய என் ஆச்சரியங்களை ஒரு நாள் கூறினேன். அப்பா இனனொரு கதை கூறி என்னை மேலும் ஆச்சரியத்திற்குட்படுத்தினார். அவரது முதலெழுத்துக்களின் பெயர்களை விரித்துக் கூறச் சொன்னார்.
முருகானந்தம் என்ற பெயர் மட்டும் தான் எனக்குத் தெரிந்தது 'அளவெட்டி செல்லக்கண்ணு முருகானந்தம்' என்றார் இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கின்றது? அப்போது சொன்னார். "செல்லக்கண்ணு எண்டது முருகானந்தனின்ரை அம்மாவின் பெயர்".
எனக்கு இப்போது தான் ஆச்சரியம் தொற்றிக் கொண்டது. தாயருடைய பெயரை தன் முதல் எழுத்தாகக் கொள்ள வேண்டிய அக்காலத்தைய ஒரு சமூக யதார்த்தத்தை அப்பா சொன்னார். நான் ஆச்சரியப்பட்டேன். நான் கண்டு கேட்டிராத உண்மை அப்போது எனக்கு உறைத்தது.

* ———— * ———— *

இப்போது அவரின் படைப்புக்களை முழுமையாக பார்த்துக் கொள்ள எனக்கு ஆசை. அவர் இந்த உலகிற்கும், தனது பெயரிற்கும் விட்டுச் சென்றுள்ள சொத்துக்கள் அவை தாம். அவற்றில் தான் அவர் வாழ்வு குறிக்கப்பட்டிருக்கின்றது.
மகாஜனகல்லூரி பழைய மாணவர் சங்கத்தினது பாரிஸ் கிளையினர் அவரது தொகுப்பொன்றை வெளியிடுவற்காக கொழும்பிலுள்ள பத்திரிகையாளரும், நாடகக் காரருமான ஒருவரிடம் காசு அனுப்பியிருந்தார்கள், என்று கேள்விப்படுகின்றேன். அவரது படைப்புகள் தொகுப்பாக வெளிவரும் தானோ? அக்காசிற்கு என்ன நடந்ததோ? ஒன்றுமே தெரியாது. வந்தால் துயரிலும் ஒரு மகிழ்வு.

* ———— * ———— *

இன்றைக்கல்ல; இறந்த போதல்ல; அன்றைக்கே, 1980 களிலேயே அவர் பேனாவுக்கு ஒய்வு. கவலை இவை தாம். தொய்வு நோயால் வருந்தி, வறுமையால் நலிந்து, இலங்கையின் தமிழ் மக்கள் அல்லாடிய நேரத்தில் அல்லல் பட்டு, கைதடி வயோதிபர் மடத்தில், தன் இறுதிக் காலத்தைக் கழித்து, அங்கேயே அவர் காலமாகிப்போன சேதி, நெஞ்சையும், நம் வாழ்வையும் துயரால் கசியச் செய்கின்றது. இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் மறு மலர்ச்சிக் காலத்தை உருவாக்கியவர்; புதுமைப்பித்தர்கள் சங்கத்தைத் தோற்றியவர்; அந்தக் காலத்தில் தமிழிலக்கியத்தில் பெருஞ்சக்தியாக உருவெடுத்தவர் வரலாற்றில் இன்னொருவராகிக் கரைந்துபோனார் இறப்பிலும் பார்க்க அவர் வாழ்வில் பட்ட இன்னல்கள்தாம் இனனும் இன்னுமென்று கவலையைத் தருகின்றது.
மகாஜானாவின் மும்மணிகள் என விதந்துரைக்க ப்பட்டவர்களில் (மகாகவி அ.ந.கந்தசாமி அ.செ.முருகானந்தம்) மூன்றாவது மணியும் கழன்று வீழ்ந்து விட்ட கவலையையே நான் சொன்னேன்.

இராகி அருணாசலம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகக் கிண்ணம் 98; யாருக்கு?

- சண் ஜோண்சன் -

"உலகக்கிண்ணம் பிரான்ஸ் 98" ஐரோப்பிய உதைபந்தாட்ட ரசிகர்களை மட்டுமல்ல உலக மக்கள் அனைவரையுமே ஒரு முறை திரும்பிப் பார்க்க வைக்கும் சொற்தொடர்.

போட்டிகள் நடப்பு வருடம் அதாவது, 98 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகிறது .

1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி இந்த போட்டிகளில் கலந்து கொள்ளும் நாடுகளைத் தெரிவு செய்யும் போட்டிகள் ஆரம்பமாகின.

உலகக்கிண்ண போட்டிகள் நடைபெறும் இடமான பிரான்ஸ் உலகக்கிண்ணத்தை தக்க வைத்திருக்கும் பிரேசில் ஆகிய இரு நாட்டு அனிகளும் போட்டியின்றியே தெரிவாகின.

ஏனைய 30 இடங்களுக்கும் ஐரோப்பா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, வடக்கு மற்றும் மத்திய அமெரிக்கா, ஆசியா மற்றும் ஓசானா ஆகிய பிரிவுகளில் உள்ள நாடுகளுக்கிடையே தெரிவுப் போட்டிகள் நடைபெற்றன.

ஐரோப்பிய பிரிவில் இருந்து றுமேனியா, பல்கேரியா, நோர்வே, ஸ்பெயின், டென்மார்க், இங்கிலாந்து, ஒஸ்ரியா, ஸ்கொட்லாந்து, ஹொலண்ட, ஜேர்மனி, யூகோஸ்லாவியா, குறோவேசியா, பெல்ஜியம், இத்தாலி ஆகிய நாடுகளும், ஆபிரிக்க பிரிவில் இருந்து துனீசியா, மொருக்கோ, கமறூன் நைஜீரியா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளும், தென் அமெரிக்கா பிரிவில் இருந்து ஆர்ஜன்ரீனா, கொலம்பியா, பெரகுவே, சிசிலி ஆகிய நாடுகளும், வடக்கு மற்றும் மத்திய அமெரிக்கப் பிரிவில் இருந்து மெக்சிக்கோ, ஐக்கிய அமெரிக்கா, ஜமேய்க்கா, ஆகிய நாடுகளும், ஆசிய மற்றும் ஓசானா பிரிவில் இருந்து தென் கொரியா, சவுதிஅரேபியா, ஜப்பான், ஈரான் ஆகிய நாடுகளும் தெரிவு செய்யப்பட்டன.

கடந்த வருடம் டிசம்பர் மாதம், 4 ஆம் திகதி குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட 32 நாடுகளும் 8 குழுக்களாக பிரிக்கப்பட்டன.

குழு "A" 1பிரேசில்	குழு "B" 1 இத்தாலி
2 ஸ்கொட்லாந்து	2 சிசிலி
3 மொருக்கோ	3 கமரூன்
4 நோர்வே	4 ஒஸ்றியா
குழு "C" 1 பிரான்ஸ்	குழு "C" 1 ஸ்பெயின்
2 தென் ஆபிக்கா	2 நைஜீரியா
3 சவுதி அரேபியா	3 பெரகுவே
4 டென்மார்க்	4 பல்கேரியா
குழு "E"1 ஹொலன்ட்	குழு "F" 1 ஜேர்மனி
2 பெல்ஜியம்	2 ஐக்கிய அமெரிக்கா
3 தென் கொரியா	3 யூகோஸ்லாவியா
4 மெக்ஸிக்கோ	4 ஈரான்
குழு "G" 1 றுமேனியா	குழு "H" 1 ஆர்ஜன்ரீனா
2 கொலம்பியா	2 ஜப்பான்
3 இங்கிலாந்து	3 ஜமேய்க்கா
4 துனீசியா	4 குறோவேசியா.

ஒவ்வொரு அணியிலுள்ள நாலு அணிகளும் தமக்கிடையே போட்டியிடும்.

புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களையும் பெறும் அணிகள் அடுத்த கட்டப்போட்டிகளுக்கும் தகுதிபெறும்.

குழு நிலையில் லீக் முறையில் நடைபெறும் ஆட்டங்கள் கடைசி 16 அணிகள் தெரிவான கட்டத்தில் இருந்து "நொக் அவுட்" முறையிலான போட்டிகளில் ஒதுக்கப்பட்ட 90 நிமிட நேரத்தில் முடிவு கிடைக்காவிடின் அடுத்த 30 நிமிடங்கள் அனுமதிக்கப்படும். அந்த 30 நிமிடங்களில் முதலில் "தங்கக்கோல்" போடும் அணி வெற்றி பெறும், அல்லது தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி முடிவு செய்யப்படும்.

இம் முறை உலகக்கிண்ண போட்டிகளில் பங்கு கொள்ளும் 32 அணிகளில் எந்த அணி கிண்ணத்தை தமதாக்கப் போகிறது?

தற்போதைய சாம்பியன்களாக பிரேசில் அணிக்கு 3 இற்கு 1 என்ற விகிதத்தில் சாத்தியங்கள் இருப்பதாகவும் போட்டி நடைபெறும் நாடான பிரான்ஸ் அணிக்கு 5 இக்கு 1 என்ற விகிதத்தில் சாத்தியங்கள் உள்ளதாகவும் இங்கிலாந்து அணிக்கு 7 இற்கு 1 இத்தாலி மற்றும் ஹொலண்ட் அணிகளுக்கு 8 இற்கு 1 என்ற ரீதியில் சாத்தியம் இருப்பதாகவும் அறிவித்துள்ளது.

அணிகளின் நிலைகளை பார்க்கும் போது பிரேசில் அணி பலம் வாய்ந்த அணியாக உள்ள போதிலும், கடந்த தடவை உலகக்கிண்ணத்தைப் பெறும் போது இருந்தது போல் இல்லை யென்றே கூற வேண்டும் .

பிரான்ஸ் அணியும் குறிப்பிடத்தக்க பலம் வாய்ந்த அணி. அதனுடன் அவர்களின் மைதானங்களிலே போட்டிகள் நடைபெறுவது இந்த அணிக்கு கூடுதல் பலம்.

இங்கிலாந்து அணி கடந்த வருடம் முதல் தனது திறமைகளை நிருபித்து வரும் அணி. அனைவரது கவனத்தையும் கவர்ந்துள்ள அணி. இங்கிலாந்து அணியினர் எதிர்பார்த்தது போலவே இவர்களது குழுவின் அனிகள் அமைந்துள்ளதால் மிகவும் எதிர்பார்ப்புடன் உள்ள அணி.

இவற்றுடன் நோர்வே, இத்தாலி, தென் ஆபிரிக்கா ஆகிய அணிகளும் அனைவராலும் எதிர்பார்க்கப்படும் அணிகள்.

இவற்றைவிட ஆசியாவில் இருந்து 4 நாடுகள் இம்முறை தெரிவாகியுள்ளது.

இவற்றில் ஜப்பான் , ஈரான் ஆகிய இரண்டு அணிகளும் மிகவும் பலம் வாய்ந்த அணிகள் .

இந்த இரண்டு அணிகளும் ஆசியா பிரிவில் இறுதிப் போட்டியில் ஆடிய போது மிகவும் சிறப்பாக ஆடியிருந்தன.

இந்த ஆட்டத்தை ரசித்த ஒரு விமர்சகர் கூறியது இது .

இப்படித் துடிப்புடன் இவ்வளவு திறமையாக இரு அணிகளும் பிரான்ஸ் போட்டிகளில் ஆடுமானால் உலகக்கிண்ணம் ஆசிய நாட்டுக்கே வந்து சேரும்.

அவ்வளவு சிறப்பாக இருந்தது இந்த போட்டி.

இறுதியாக நடைபெற்ற அவுஸ்ரேலியா அணியுடனான போட்டியிலும் ஈரான் அணி மிகவும் சிறப்பாக ஆடியது.

ஆனால், பாவம் அவுஸ்ரேலியா அணி விளையாடிய எந்தத் தெரிவுப் போட்டிகளிலுமே தோல்வியடையாமலேயே தெரிவாகாமல் பின்தள்ளப்பட்டது.

பங்கு கொள்ளும் 32 அணிகளுக்கும் உலகக் கிண்ண கனவு இருந்தாலும் சில அணிகளே மிகவும் பலம் வாய்ந்த அணிகளாக கருதப்பட்டு இறுதிப் போட்டிக்கு எதிர் பார்க்கப்படுகின்றன.

ஆனால், பலம் வாய்ந்த ஆர்ஜன்ரீனா அணியை கமறூன் அணி முன்னர் ஒரு முறை தோற்கடித்தது போல திறமையுடன் அதிஸ்ரமும் சேரும் அணி கிண்ணத்தை தனதாக்கும். ஜூலை மாதம் 12 திகதி முடிவு தேரிந்து விடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்றல்ல; இரண்டல்ல; பதினேழு கோல்கள்;

\- சண்.ஜோண்சன்

இவ்வருடம் உலகக் கிண்ணப் போட்டிகளைப் பார்வையிடுவதற்கு 2.5 மில்லியனுக்கும் மேற்பட்ட நுழைவுச்சீட்டுகள் மூன்று வகைகளாக உள்ளன.
ஆகக்குறைந்த நுழைவுச்சீட்டு 14 பவுன்ஸ்ரேர்லிங் 90 பென்ஸ்சுக்கும், ஆகக்கூடுதலான நுழைவுச்சீட்டு 304 பவுண் ஸ்ரேலிங்காகவும் உள்ளது.
ஜுலை மாதம் 12 ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் சிறந்த இடத்தில் உள்ள இருக்கையே 304 பவுண்டுகள் விலைக்கு விற்கப்படுகிறது.
1996 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி ஆரம்பமாகி 1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் திகதி வரைநடை - பெற்ற 643 தெரிவுப்போட்டிகளில் 1916 கோல்கள் போடப்பட்டன.
169 நாடுகள் இந்தத் தெரிவுப் போட்டியில் கலந்து கொண்டன. இதில் ஆகக் கூடுதலாக 20ம் ஆட்டங்களில் ஜமேய்க்கா அணி ஆடியுள்ளது.
மொத்தமாக கூடுதலான கோல்களைப் பேட்ட ஈரான் அணி 17 போட்டிகளில் 57 கோல்களைப் போட்டுள்ளது.
அத்துடன் உலலக சாதனையொன்றும் ஈரான் அணியினால் முறியடிக்கபட்டது. ஒரு போட்டியில் ஆகக்கூடுதலான கோல்களைப் போட்டதே அந்த சாதனை.
ஈரான் அணி, மாலதீவு அணிக்கெதிரான போட்டியில் 17- 0 என்ற கோல்வித்தியாசத்தில் வென்றது.
இதில் ஈரானிய வீரரான காரிம் பக்கேரி (karim baheri) 7 கோல்களை இந்த ஒரு போட்டியில் போட்டு ஏற்கனவே இருந்த உலக சாதனையை சமமாக்கியுள்ளார்.
ஆகக்கூடுதலான கோல்களைப் போட்ட வீரரும் இந்த ஈரானிய வீரராகும். இவர் மொத்தமாக 17 கோல்களை இந்தத் தெரிவு போட்டிகளில் அடித்துள்ளார்.
பிரான்ஸில் நடைபெறும் இந்த 16ஆவது உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு தகுதிபெற்றுள்ள 32 நாடுகளுக்கும் பிரான்சில் நடக்கும் ஒவ்வொரு போட்டிக்கும் 416 ஆயிரம் பவுண் ஸ்ரேர்லிங்களும் நாள் ஒன்றுக்கு அதன் செலவுகளுக்காக வழங்கப்படும்.
1930 ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகின. அதற்கு பின் ஒவ்வொரு நாலு ஆண்டுகளுக்கு ஒரு முறை போட்டிகள் நடைபெற்று வந்தாலும் 1938 ஆம் ஆண்டு நடை- பெற்ற உலகக் கிண்ணத்தை தொடர்ந்து நடைபெற்ற உலகப்போரினால் அடுத்த இரண்டு போட்டிகள் அதாவது 1942, 1946 ஆண்டுகளில் போட்டிகள் நடைபெறவில்லை.
அதன் பின் 1950 ஆம் ஆண்டு முதல் 4 வருடங்களுக்கு ஒரு முறை இப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.
இது வரை நடைபெற்ற உலகக்கிண்ண போட்டிகளில் ஒரு சுற்றுப் போட்டியில் ஆகக்கூடுதலாக 13 கோல்களைப் போட்டவர் பிரான்ஸ் வீரர் ஜஸ்ற் பொன்ரேய்ன் (Just Fontaine). இவர் 58 ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் இந்த சாதனை ஏற்படுத்தினார்.

உலகக்கிண்ண வரலாற்றில் ஆகக்கூடுதலாக கோல்களைப் போட்ட வீரர் மேற்கு ஜேர்மனியின் ஹேட் முல்லர். (GERD MULLER)இவர் 14 கோல்களைப் போட்டுள்ளார். ஒரு போட்டியில் ஒரு வீரரினால் போடப்பட்ட கோல்கள் 5. கடந்த (U.S.A) உலகக்கிண்ணப் போட்டிகளில் கமறூன் அணிக்கெதிராக ரஸ்ய வீரர் ஓலக் சலன்கோ (OLEG SALENGO) 5 கோல்களைப் போட்டார். உலகக்கிண்ணப் போட்டிகளில் கூடுதலன ஆட்டங்களில் கலந்து கொண்டவர்கள் நால்வர். இவர்கள் 21 போட்டிகளில் ஆடியிருக்கிறார்கள்.
ஆர்ஜன்ரீனிய வீரர் டிக்கோ மரடோனா (DIEGO MARADONA) மேற்கு ஜேர்மனி வீரர் சீலர் (UWE SEELER) போலந்து வீரர் .
சமுடா (WLADYSLAW ZMUDA) ஜேர்மனி வீரர் லாத்தர் மத்தியூஸ் (LOTHAR MATTNAUS) ஆகியோரோ இந்த நால்வர்.
இளம் வயதில் உலகக்கிண்ணப் போட்டிகளில் கலந்து கொண்டவர் வட அயர்லாந்து வீரர் நோர்மன் வைற்சைற் (NORMAN WHITE- SIDE) இவர் முதாவது உலகக்கிண்ணப் போட்டியில் ஆடும் போது இவருக்கு வயது 17 ஆண்டுகளும் 41 தினங்களுமாகும்.
ஐக்கிய அமெரிக்காவில் 94இல் நடைபெற்ற உலகக்கிண்ண போட்டிகள் பிரேசில் அனி வெற்றி பெற்றது அனைவருக்கும் தெரியும்.
இத்தாலி அணிக்கும் பிரேசில் அணிக்கும் இடையில் நடைபெற்ற இந்த 15 ஆவது உலகக்கிண்ணப் உதைப்பந்தாட்டத்தின் இறுதிப்போட்டி உலகக்கிண்ண வரலாற்றில் முதல் முறையாக தண்ட உதை மூலம் (PENAITY SHOOT OUT) முடிவு செய்யப்பட்ட இறுதியாட்டம்.
இத்தாலி வீரர் றொபோட்டோ பாஜியோ, (ROBERTO BAGGIO) தண்ட உதையைத் தவறவிட, பிரேசில் அணி வரலாறு படைக்கும் வகையில் நாலாவது முறையாக உலகக்கிண்ணத்தை தனதாக்கியது.

வணக்கம் ஐ.பி.சி மாமா!
தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளும் சிறுவர் நிகழ்ச்சி
வாரம் தோறும் புதன், சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 6 மணியிலிருந்து 7 மணிவரை

முதியோர் வழங்கும் முந்தைய நினைவுகள்
50 வயது முதல் பெண்களும்
55 வயது முதல் ஆண்களும்
தங்கள் கடந்த கால நிகழ்வுகளை
நினைவு கூரும்நிகழ்ச்சி.
செவ்வாய் மாலை 6மணியில் இருந்து 7 மணிவரை

அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்.
0044 171 564 4444

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிராங்பேர்ட் மாநகரில் ஓர் தமிழர் களஞ்சியம்

உங்கள் கண்ணுக்குபசுமையும் நாவுக்கு சுவையூட்டும் பசுமைமிக்க, இலங்கை இந்தியா, தாய்லாந்து, கென்யா, டொமினிக் ஆகிய நாடுகளில் இருந்து எம்மால் நேரடியாக இறக்குமதி செய்யப்படும் மரக்கறி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் மளிகைப் பொருட்கள், நாவுக்கு சுவையூட்டும் உடன் ஆட்டிறைச்சி, கடல் உணவு வகைகள், எவர்சில்வர் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள் அனைத்துக்கும்

S&S ASIAN SHOP

Tailoring

மங்கையர்க்கு அழகூட்டும் சாறிபிளவுஸ், பஞ்சாபி, ஸ்கேட், மங்கயரின் விருப்பத்திற்குகேற்ப விரும்பிய டிசைனில் யாவும் கைதேந்தவர்கனினால் குறுகிய நேத்தில் தைத்துக்கொடுக்கப்படும்

S&S Printers

உங்கள் உபயோகத்திற்கு தேவைப்படும் அனைத்து ஆவணங்களையும் தரமான முறையில் குறுகிய நேரத்தில் சட்ட அங்கீகாரம் பெற்றவர்களினால் மொழிபெயர்ப்பு செய்து தரப்படும்.

அத்துடன் பிறந்தநாள், திருமண, பூப்புனித நீராட்டு விழாக்களுக்கான அனைத்து அச்சுப்பதிப்பு தேவைகளும் பூர்த்தி செய்து தரப்படும்

Travel Agent

நீங்கள் உலகில் எந்தப்பாகத்திற்குப் பயணம் செய்ய வேண்டுமானாலும் உடனுக்கு உடன் குறைந்த கட்டணத்திற்கு பயணச்சீட்டுக்களைப் பெற்றிட நீங்கள் நாட வேண்டிய இடம்

Snack Bar

வாய்க்கு ருசியான நம்நாட்டு உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திட நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

Recording Bar

- CD
- Audio
- Video
- வார சஞ்சிகைகள்

தொடர்புகளுக்கு

Tel: 069236610,
0172 6122304

Taunus Str-52-60.
60329 Frankfurt,
Germany.

www.tamilarangam.net

அம்மான் கணணி ஸ்தாபனம்
Ammaan Computer Information

(Kurszentrum)

Mob: 079/218 39 58 Tel: 031/992 20 83

உலகின் முதாலாவது தமிழ் கணணிக்காக சீடியினையும், தமிழ் ஆங்கிலம், ஜேர்மன் மொழிகளின் கணணி அகராதியினையும் வெளியிட்ட அம்மான் கணணி நிறுவனத்தின் வெளியீடுகளும் அவற்றின் விபரங்களும்:

1. அம்மான் தொகுப்பு:

5 தமிழ் புறோகிறாம்கள், 2500 தமிழ் கலாசாரத்துடன் தொடர்பு பட்ட படங்கள், 5 எழுத்து வடிவங்கள், பிரசித்தி பெற்ற முகங்களும் அவர்களின் விபரங்கள் தமிழ், ஆங்கிலம், ஜேர்மன், பிரஞ்சு மொழிகளில் புறோகிறாம்கள்.

1. அம்மான் தொகுப்பு 2. கணணி செயற்பாட்டு ஒருங்கு, 3. நாடுகளைப் பற்றிய விபரங்கள், 4. சீடி ஒருங்கு 5. கணணி ஸ்பீக்கருக்கான ஒருங்கு.

2. தமிழ் தொலைபேசி விபரக்கொத்து:

நபர் சேமிப்பகம் எனப்படும் சகல விபரங்களையும் சேமிக்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட நபர் குறிப்பு. சேமிப்பகம் குறித்த நபரின் பெயர், தொலைபேசி எண், விலாசம், நகரம், நாடு போன்றவற்றின் வரிசையில், தேடிப் பெறக்கூடிய ஒருங்காகும்.

3. அம்மான் விபூஷர்:

100 WMF படங்களுடன் கிளிப்பாட் ஒருங்குடன் தமிழ், ஆங்கிலம், ஜேர்மன், பிரஞ்சு மொழிகளில் செயற்பாட்டு மொழியினை மாற்றக்கூடியவகையில் தயாரிக்கப்பட்ட ஒருங்கு.

4. அம்மான் கணணி அகராதி:

அம்மான் கணணி ஸ்தாபனத்தின் பல கணணிக்கான தமிழ் வெளியீடுகள் வெளிவந்துள்ளபோதிலும் இந்த கணணிக்கான அகராதி மிகவும் முக்கிய ஒரு வெளியீடாக நாம் கருதுகின்றோம். இதன் ஆரம்ப வெளியீடு 1995 இல் வெளிவந்த போது, சகல பத்திரிகைகளும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன. இதன் போது 7000 சொற்களை மட்டுமே கொண்டிருந்த இந்த மின்னணுவியல் அகராதியான அம்மான் கணணி அகராதி இம்முறை கிட்டத்தட்ட 50000 சொற்களைக் கொண்ட மற்றும் பல்வேறு சிறந்த வேகமான செயற்பாடுகளை கொண்டும் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர இவ் மின்னணுவியல் அகராதியில் இருந்து உச்சரிப்பு வெளிவருவது மிகவும் சிறந்த எமது அடுத்த படியாகும். இங்கு நாம் தெரிவு செய்யும் தலைமை மொழிகளின் முக்கிய 50 வீதமான சொற்களுக்கு உச்சரிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் உச்சரிப்பு உள்ள சொற்களுக்கு அருகில் தன்னிச்சையாகவே உச்சரிப்புக்கான செயற்பாட்டு பட்டன்கள் தோன்றும்.

இதைவிட, எல்லோராலும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அம்மான் வின்தமிழ் ரைட்டர் மற்றும் இவற்றில் அடங்கியுள்ள தமிழ் மொழிக்கான சொற்திருத்தம் என்பனவும், எமது அம்மான் அகராதித் தொகுப்பில் அடங்கியுள்ளது. இங்கு நாம் குறிப்பிட எழுத்து வகையை தெரிவுசெய்யவும், மற்றும் தமிழ் மொழிச் சொற்திருத்தத்தை செய்யவும் முடியும். குறிப்பிட்ட தமிழ்ச் சொல் கணணி அகராதியில் காணப்படாவிட்டால் அதனுடன் தொடர்புபட்ட சொற்களை ஒரு யன்னலில் காட்டுவதுடன் வேறு சொல்லால் அச் சொல்லை மாற்றவோ, அல்லது அச் சொல்லை தவிர்த்து ஏனையவற்றை சொற்திருத்தம் செய்யக்கூடிய வகையில் இவ் சொற்திருத்த முறை அமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, அம்மான் கணணி அகராதித் தொகுப்பில் கணணியில் பாவிக்கும் கணணித்தட்டச்சில் இல்லாத மொழிக்கான எழுத்துக்கள் தட்டச்சில் எங்குள்ளது என்பதை அறிவதற்கான கரக்டர் மப் எனப்படும் சிறிய ஒருங்கும், மற்றும் கணணி அகராதித் தொகுப்பிற்கான உதவிகள் அடங்கிய சிறிய ஒருங்கும் அடங்கியுள்ளது.

5. சிறுவர்கள் தொகுப்பு 1:

சிறுவர்களுக்கான தமிழ்க் கணணிப்புறோகிறாம்கள் 15 வெளிவரவுள்ளது. இதன் முதலாவது தொகுப்பு வெளிவந்துள்ளது. இங்கு தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்பு, தமிழ் எழுத்துக்களை எப்படி எழுதுவது என்று காட்டுவது, தமிழ் எழுத்துக்களை வரிசைப்படுத்தும் பயிற்சி போன்ற விபரங்களை கொண்டு வெளிவந்துள்ளது.

www.tamilarangam.net

மக்கள் மனங்கவர் ஜவுளியகம் நகையகம் மளிகையகம்

நாகரீக உடைகள்

தரமான தங்க நகைகள்

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்

வீடியோ படங்களை முதன்முதலில் ஜேர்மனியில் வெளியிடுவோர்

பழைய, புதிய பாடல்கள்

எவர் சில்வர் பொருட்கள்

சீ.டி - ஓடியோக்கள்

எல்லாவற்றிற்கும் எப்பொழுதும் நாடுங்கள்

GERMANY யில் ....

JAFFNA

STORES
FEILEN - STR - 8
33602 BIELEFELD
TEL: 0521 174794

JUWELLERS & TEXTILES
WILHELM - STR - 28
59067 HAMM
TEL:02 381 162732
FAX: 02 381 162714

STORES
ROON - STR - 1
4700 HAMM - 1
TEL: 02381 12614

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
Tamils Rehabilitation Organisation
விளம்பரம் அல்ல உறவுகளின் உரையாடல்

உண்ண உணவில்லையே அம்மா கூறுகிறாள்!
உடுத்த உடையுமில்லை தங்கை தவிக்கின்றாள்!
இருக்க இடமும் கூட இல்லையே அப்பா ஏங்குகிறார்!
மருந்தும் மருத்துவ வசதிகளும் இல்லையேயென்று
நோயாளிகள் பதறுகிறார்கள்

எம்மையெல்லாம் இன அழிவுக்குள் உள்ளாக்கும்
ஸ்ரீலங்கா அரசாங்கம் உதவிகளைத் தரவே தராது -
என்று தமிழ்மக்கள் உறுதியாகக் கூறுகிறார்கள்.

அப்படியானால்,
இவர்களுக்கு யார் உதவுவது என்று கூறுங்கள்
வேறு யாருமல்ல,
நீங்களும், நாங்களும் தான் ஒரே உதவி.
நாளையல்ல இன்றே உதவிட வேண்டும்.

எமக்கு வேலையில்லை. Bill கட்டப் பணமில்லை.
வங்கி அட்டைக்கு வட்டி வளர்வதும் உண்மைதான்.
ஆனாலும், அவர்களுக்கும் நாம் தான் உதவவேண்டும்.
நம்மை தவிர யாருமே இல்லை

எப்படி உதவலாம் எனக் கூற நாம் இருக்கிறோம்
இப்படி உதவுகிறோம் என விளக்கமாய் கூறிடுவோம்
எங்கள் தொலைபேசி இலக்கம் உங்களைச் சுற்றி உண்டு
எவ்வளவு உதவிடலாம் எனத் தீர்மானியுங்கள்
சிறுதொகைதான் பெருவெள்ளம்
சிந்திக்க நேரமில்லை.

இயன்றதை இப்பொழுதே செய்யுங்கள்

Mr. Gunanathan.E
TRO, Canada.
(1416)463 7647

Mr.Kuhanachandran
TRO, U.K.
(44181) 520 5876

Mr. Aunanthan.G
TRO, Denmark
(4520) 23 88 97

Mr.Anantharajah.E
TRO, Germany
(4921) 665 8508

TRO,
Australia
(613) 9800 3899

Mr.Thurairajah.I
TRO, Norway
(47 22) 646 592

Dr. Ragavan.S
TRO,
South Africa
(27 471) 310 123

TRO
MALAYSIA
603 255 2472

TRO,
France
(331 46) 489 850

Mr. S.Raviraj
TRO, U.S.A.
(01 301) 729 2722

Mr.Sinnathurai.K
TRO,
Netherland
31 72 644 442

Mr. Murugan. P
TRO,
Italy
(39 91) 611 3179

Wilson Kiruparajah
TRO, SWEDEN
(4686) 870 649

Prof. V. Nithiyanandan
TRO, NEW ZEALAND
(649)537 0258

Mr. Shamugadas.S
TRO, Switzerland
(41 41) 260 8398

www.tamilarangam.net

கிரிக்கெட்: சிங்கள பிற்போக்குத் தேசியத்தின் குறியீடு!

-துஷ்யந்தி -

கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற இந்திய - இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான சர்வதேசப் போட்டிகளின் போது ஆச்சரிய மூட்டும் அதேநேரம், சிந்திக்க வைக்கும் ஒரு சம்பவம் நடைபெற்றது. "2வது டெஸ்ட்" போட்டியின் இறுதி நாளன்று பகல் மதியபோசன இடைவேளையின் போது இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று விளையாட்டு மைதானத்தின் மேல் வட்டமடித்தது. தாழப்பதிந்த ஹெலி கொப்டரில் இருந்து நூலேணியில் மைதானத்தில் இறங்கினார் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒரு வீரர். தரையிறங்கிய அவர் தனது முதுகுப்பையிலிருந்து, அன்றைய தினம் வெற்றி பெறும் அணிக்கு வழங்கப்படும் வெற்றிக் கிண்ணத்தை (Trophy) பத்திரமாக வெளியிலெடுத்து இராணுவ பாணியில் ஓடிச்சென்று கிரிக்கெட் சபைத் தலைவரிடம் கையளித்தார்.

அதிரடிப் படையினால் இராணுவ ஹெலிகொப்டரில் பாதுகாப்பாகக் கொண்டு வந்து கொடுக்குமளவுக்கு அக்கிண்ணம் ஒன்றும் பெறுமதிமிக்கதல்ல. ஆனால், இராணுவ கௌரவம் வழங்கப்படுமளவிற்கு "கிரிக்கெட்" உயர்ந்துவிட்டுள்ளது என்பதையே இது வெளிப்படுத்துகிறது. இன்று சிங்களத்தேசத்தைப் (Sinhala Nation) பொறுத்தவரையில் அதன் அனைத்து கௌரவத்திற்கும், மரியாதைக்கும் பாத்திரமானதாய் விளங்குவது இராணுவமே. இந்த இராணுவமே "சலாம்" போடுமளவிற்கு கிரிக்கெட் இருக்குமென்றால், இதை இனியும் வெறுமனே ஒரு விளையாட்டாக மாத்திரம் பார்க்க முடியாது. இதற்கு இன்னும் எத்தனை முகங்கள் உள்ளன. அவை கட்டமைக்க முயலும் சமூக உளவியல் என்ன? அது மொத்த சமூகத்தையும் எதை நோக்கிக் கொண்டு போகப் போகிறது என்பதை இச்சந்தர்பத்தில் நாம் மதிப்பிட்டேயாக வேண்டியுள்ளது.

கிரிக்கெட்டின் சமூக உளவியல்

ஒரு நூற்றாண்டுக்கும் மேலான வராற்றைக்கொண்டது கிரிக்கெட் விளையாட்டு. ஆரம்பத்தில் இது மேலைத்தேய "வெள்ளைப் பிரபுக்களின்" விளையாட்டாகவே இருந்து வந்தது. இலங்கையிலும் காலனிய ஆட்சி செய்தவர்களாலேயே கிரிக்கெட் விளையாட்டு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர், வெள்ளையரைப் போல் பாவனை பண்ணிய உள்நாட்டு தமிழ் - சிங்கள பிரபுக்களினால் இவ் விளையாட்டு தொடர்ந்து விளையாடப்பட்டு வந்தது. அப்பொழுதெல்லாம் சாதாரண மக்களுக்கு இது பற்றி எதுவும் தெரியாது. கிரிக்கெட், குறிப்பாக தென்னாசியாவின் சாதாரண மக்களது விளையாட்டாக எக்காலப்பகுதியில் மாறியது?

இது பற்றி ஜனக பியன்வில (Pravada Feb/March 1996) இவ்வாறு கூறுகிறார். "கிரிக்கெட் எவ்வாறு தென்னாசியாவில் இந்தளவுக்கு வெகுஜனத் தன்மையுடையதாகியது? கடந்த காலத்தில் வெள்ளளைக் காலனித்துவ வாதிகளுக்காயிருந்த விளையாட்டு இந்தளவு வெகுஜன பங்குபற்றலை எப்படி அடைந்தது? தென்னாசிய பிராந்தியத்தின் மாற்றம் பெறும் பொருளாதார அரசியல் இயக்கப் போக்குடன், வெகுஜனத் தொடர்பூடகத்தினூடாகவும் (Mass Media) நடைபெறும் கலாசார சர்வமயமாதலின் (Cultural Globalization) இயக்கப்போக்குடனும் இது நடைபெற வேண்டியேற்பட்டது. சர்வமயமாதல் இயக்கப்போக்கானது (Globalization Process) உலகப் பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பின் வரலாற்று வழியில் உருப்பெற்றதாகும். குறிப்பாக தொடர்பூடகங்களிலான (Communication) முன்னேற்றம் முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தின் கலாசார விளைவுகளை சர்வமயப்படுத்தியது. இப்படியாக உலகச் சந்தைக்காக எல்லைகளைத் தகர்த்த முதலாளித் துவம் பல விடயங்க ளையும் சர்வமயப்படுத்தியது போல் கிரிக்கெட்டையும் சர்வமயப் படுத்தியது.

இலங்கையில் 1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே. ஆர் அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பிரகடனப்படுத்தியது. அதை யொட்டி பல்வேறு துறைகளும் முதலாளித்துவ நலன்களைக் காக்கும் நோக்கில் வளர்ச்சி பெற்றன. "கோமான்களின் விளையாட்டான" கிரிக்கெட் முதலாளித்துவத்தின் குறியீடாகும் என ஜனக பியன்வில குறிப்பிடும் இவ்விளையாட்டு இலங்கையில் வளர்த்தெடுக்கப்பட்டது, முதலாளித்து வத்தின் குறியீடாக மாத்திரமல்ல, இலங்கையில் மேலாதிக்கம் செய்யும் சிங்களப் பிற்போக்கு தேசிய வாதத்தின் / இன வெறியின் குறியீடாகவும் தான்.

ஜே. ஆரின் காலகட்டமானது இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அரசியல், குறிப்பாக தேசிய பிரச்சினையில் தீர்க்கமான திருப்புமுனைகளை ஏற்படுத்திய காலகட்டமாகும். ஆட்சிக்கு வந்ததும் ஜே. ஆர் தன்னை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஆக்கிக்கொண்டார். முன்னாள் பிரதமரின் குடியுரிமையைப் பறித்தார். 80 இல் மாபெரும் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான அரச ஊழியர்களை

www.tamilarangam.net

82'ல் நடைபெற வேண்டிய பொதுத் தேர்தலை நடத்தாததோடு, மக்கள் விருப்பம் எனும் பெயரில் ஒரு நாடகத்தை ஆடி மீள ஆட்சியை உறுதிப்படுத்தி கொண்டார். 83 ஜுலையில் திட்டமிட்டு தமிழர் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டார். இதில் 1500 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 1,50,000 இற்கு மேற்பட்டடோர். வீடிழந்தனர். இது தொடர்பாக ஜே. ஆர் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் "சிங்கள மக்கள் தமது தேசிய அபிலாஷைகளை வெளிப்படுத்தினர்" எனக்கூறினார். (இச்செய்தி வானொலியில் ஒலிபரப்பாகையில் கொல்லப்பட்ட தமிழர் சடலங்கள் வீதிகளில் பாதி எரியுண்ட நிலையில் கிடந்தன. புகலிடமற்ற நிலையில் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள தமிழர் பரிதவித்துத் திரிந்து கொண்டிருந்தனர்...) பிற்காலத்தில், பாராளுமன்றத்தில் கெடுபிடியேற்பட்ட போது, திகதியிடப்படாத ராஜினாமாக் கடிதங்களை மந்திரிமார் மற்றும், பா.உ.க்களிடமிருந்து நிர்ப்பந்தமாக கேட்டுப்பெற்றார். இப்படியாக ஒரு எத்தேச்சாதிகாரவாதியாக இனவெறி கொண்டவராக ஜே. ஆர் செயற்பட்டார்.

இவரது காலத்திலேயே வெகுஜனப் பங்குபற்றலுடன் கூடிய கிரிக்கெட் விளையாட்டை வளர்த்தெடுப்பதற்கான ஆரம்பப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன.

"சிங்களவருக்கு இலங்கையை விட்டால் வேறு நாடு கிடையாது" எனும் சிந்தனையை சமகால சிங்கள தேசிய அரசியலில் ஆழப்பதித்தவரும் ஜே. ஆரே. அதைவிட எதற்கெடுத்தாலும் இந்தியாவுடன் இலங்கையைத் தொடர்புபடுத்தி, இந்தியாவைவிட தமது நிலை உயர்ந்துவிடும் எனும் கருத்தைக் கற்பனைத் தனமாக மக்கள் மத்தியில் விதைத்தவரும் இவரே. "எதிர்காலத்தில் நாம் தென் ஆசியாவுக்கே உணவு வழங்குவோம். 2000ம் ஆண்டில் இலங்கையில் உற்பத்தியாகும் மின்சாரத்தை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வோம். தென்னிந்தியாவில் விவசாயம் தொடங்குவற்கு முன்னரே இலங்கையில் நீர்பாசன முறையில் பயிர்ச்செய்கைதொடங்கிவிட்டது.. போன்ற பல "பொன்மொழிகளும்" இவர் காலத்தவையே. இது ஒரு வித தாழ்வுச் சிக்கலின் இயலாமையின் பிரதிபலிப்பாகும். இத்தாழ்வுச் சிக்கலானது, அனைத்தையும் மேலிட வேண்டும் எனும் எதிர்க்கோடி நிலைக்கு / வெறித்தனமான உணர்வுக்கு இட்டுச் செல்கிறது. பிற்போக்கு சிங்களத் தேசியவாதம் இப்போக்கை வெளிப்படையாகவே காட்டிக் கொள்கிறது என்றால் அது மிகையாகாது.

இன மற்றும் கலாசார மேலாதிக்கம்

முதலாம் உலக யுத்தத்திற்கு பிந்திய ஜெர்மானிய உளவியலை தாழ்வுச் சிக்கலுடன் தொடர்புபடுத்திக் காட்டும் சமூகவியலாளர்கள், ஆரிய இன உணர்வு / உலகையே தமக்குக் கீழ்ப்படுத்திட முயன்ற வெறி ஆகியவற்றிற்கு தாழ்வுச்சிக்கலையும் ஒரு காரணமாய்க் கூறுவர் . ஜெர்மன் நாசிகளுக்கு, பாசிசத்தைக் கட்டியமைப்பதற்கான பின்புலமாய் பிற்போக்குத் தேசியவாதம் / ஆரிய இனவெறி இருந்தது. ஜெர்மன் பிற்போக்குத் தேசியவாதத்தைக் கட்டியமைக்கும் போக்குகளில் ஒன்றாக அவர்கள் விளையாட்டுக்களை உபயோகித்துக் கொண்டனர். இது பற்றி Cast Eyes பகுதி (Sunday Island Aug, 17,1997) இவ்வாறு விபரிக்கிறது. "ஹிட்லரின் ஜெர்மனியில், விளையாட்டுக்கள் ஜெர்மன் பாசிசத்தின் வெற்றியைக் கொண்டாடும் விழாக்களாயிருந்தன. 1936 பெர்லினில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் பல போட்டிகளிலும் வெற்றிபெற்ற கறுப்பு அமெரிக்க ஓட்டவீரரான Jesse Owens ஐ ஹிட்லர் இழிவுபடுத்தினார். பாசிசவாதிகளுக்கு இன மற்றும் கலாசார மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான முயற்சிகளிலொன்றாக விளையாட்டுக்கள் உள்ளன" இவை ஆழமான கவனத்தை வேண்டிநிற்கும் வரிகள். இனவெறி மற்றும் தேசிய, கலாசார மேலாதிக்கம் ஆகியவற்றின் அருகாமையில் விளையாட்டுக்கள் வந்து கொண்டிருப்பதற்கு ஒலிம்பிக் வரலாறே சான்று.

1982 இல் இலங்கைக் கிரிக்கெட் அணி சர்வதேசப் போட்டிகளில் பங்கு பற்றும் அந்தஸ்தைப் பெற்றது. இதற்காக உத்தியோகபூர்வமாக நடைபெற்ற அங்குரார்ப்பண போட்டியில் இலங்கை அணி இந்தியாவுடன் விளையாடியது. போட்டிகளில் கலந்து கொள்வதற்காக இந்திய அணி இலங்கை வந்திருந்தது. சிங்கள இனவெறி மூர்க்கமாக வளர்ச்சி பெற்று வெளிப்படத் தொடங்கியிருந்த காலகட்டம் அது. "தமிழர் என்றால் இந்தியா; இந்தியா என்றால் தமிழ்" என்றே பார்த்துப் பழகிவிட்ட சிங்கள மக்கள் இலங்கை வந்திருந்த இந்திய அணியை பகைமையுடன் பார்த்தனர். வர்க்க, பாலின, மத, எல்லைகளைக் கடந்து இப்பார்வை அவர்களிடமிருந்து பகிரங்கமாக வெளிப்பட்டது. வளர்ச்சி பெற்று வந்த தமது இனவெறி உணர்வுகளை வெளிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்த அவர்கள் அதற்கான களமாக கிரிக்கெட் களத்தைக் கண்டனர். உடனே அதைப்பற்றி பிடித்துக்கொண்டனர். இந்திய அணி விளையாடும் போது காடையர் கூட்டம் கல்லெறிந்தது, ஊளையிட்டது தோசை, சாம்பார் எனக்கத்தியது. சில நேரங்களில் மைதானத்திற்குள்ளும் இறங்கிவிடும்... அப்போட்டியில் இலங்கை வெற்றி பெற்றது. வெற்றியைக் கொண்டாட ஜே. ஆர் தாமே நேரில் மைதானத்திற்கு வந்தார். சொற்பொழிவாற்றினார். மறுநாள், வேலை நாள் தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்க அந்நாளை பொது விடுமுறை நாளாக்கினார். இப்படியாக ஜே. ஆரின் காலத்திலேயே கிரிக்கெட் விளையாட்டு சிங்கள பிற்போக்கு தேசிய அரசியலில் கலப்பதற்கு அத்திவாரமிடப்பட்டிவிட்டது.

கிரிக்கெட்டும் சிங்கள தேசமும்

கிரிக்கெட்டை சிங்களத் தேசத்துடன் இனம்காணும் உளவியலுக்கு எதிர் நிலையாக இன்னுமொரு உளவியலும் உருவாகி வந்தது. அதுதான் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் உளவியல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள இனவெறியினால் ஓரங்கட்டப்பட்ட இம்மக்கள், தமது அரசியல் அபிலாஷைகளை மாத்திரமல்ல, குறைந்த பட்சம் ஒரு விளையாட்டினூடாகக் கிடைக்கும் வெற்றிக் களிப்பைக் கூட அனுபவிப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களாயிருந்தனர். முற்றும் சிங்கள விளையாட்டு வீரர்களாலான சிங்களத்தேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணியை இம்மக்களால் தமது பிரதிநிதியாய் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்களும் அதைத் தமது அரசியலின் எதிர்நிலையாகவே பார்த்தனர்.

அதனால், இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகளில் தம்மை இனங்கண்டனர். இந்தியாவுக்கு தமிழர்களும் பாகிஸ்தானுக்கு முஸ்லிம்களும் முன்னுரிமையளித்தனர். அதேபோல், தமிழர்கள் பாகிஸ்தானுக்கு இந்தியாவுக்கு அடுத்த இடத்தையும், முஸ்லிம்கள் இந்தியாவுக்கு பாகிஸ்தானுக்கு அடுத்த இடத்தையும் வழங்கினர். இவ்விரு தேசங்களை (Nations) சார்ந்த மக்களுமே இலங்கையின் தோல்வியை இரகசியமாக வரவேற்றனர்.

இப்படியாக, சிங்கள தேச உளவியல் மற்றும் அதற்கு வெளியிருக்கும். அதனால் ஒடுக்கப்படும் தேசங்களின் உளவியல் ஆகியவற்றை வெளிப்படையாகவே நாடிபிடித்துக் கூறிடும் களமாய் கிரிக்கெட் வளர்ந்து.

சிங்கள மக்களின் உளவயலை ஆட்சி செய்யும் பிற்போக்கு தேசிய வாத / இனவெறி உணர்வுகளை பலப்படுத்தும் காரணிகளிலொன்றாய்க் கிரிக்கெட் இருப்பதைக் கண்டு கொண்ட ஆட்சியாளர்கள் கிரிக்கெட்டை மேலும் ஊக்குவிப்பதன் மூலம் மக்களது பிற்போக்கு தேசிய வாத உணர்வுகளை மேலும் ஆழப்படுத்தி அதன் மூலமும் அரசியல் நடத்த முடியுமென்பதைக் கண்டு கொண்டனர்.

இதை நன்கு விளங்கிக்கொண்ட பிரேமதாச அதற்காக நிறையவே செலவளித்தார். அரசியல் தவறுகளை மறைத்து மறைத்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்கான கவசமாக கிரிக்கெட் பாவிக்கப்படத் தொடங்கியது - இவரது காலத்திலேயே. தான் மேற்கொண்ட இனவாத யுத்தத்தின் தோல்விகளை கிரிக்கெட்டைக் கொண்டு நன்றாகவே மறைத்துக் கொண்டார். அதேபோல், இனக்கலவரங்கள், ஏற்படக்கூடிய அளவிற்கு சிங்கள மக்கள் மத்தியில் இனவாத கொந்தளிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம், கிரிக்கெட்டைப் பாவித்து அவ்வுணர்வுகளை வழிந்தோடச் செய்தார். இதற்கேற்றாற்போலவே கிரிக்கெட் அணியின் உளவியலும் கட்டியமைக்கப்பட்டு வந்தது. அதன் உச்ச “ பலன்” தற்போதே வெளிப்படத் தொடங்கியுள்ளது.

(இன்னும் வரும)

உலகின் முடிவு..

கவிஞர்களோடு
ஒரு பயணம்
ஹோட்டன் சமவெளி வனங்களில்
இரண்டு மைல்தூர நீண்ட நடை
ஒரு மப்பு நாளும் கூட..
சங்ககாலப் போதையூட்டிய வனம் விரிகிறது.
புல்வெளிகளும் பாலங்களும்
சிற்றாறுகளும் தென்றலும்
கூடவே ஒரு கவிஞன் தந்த
இந்துஸ் தானி இசையும்
....
அன்றைக்கு மதுவும் இல்லை;
மங்கையும் இல்லை
மழைதான் தூறிற்று
நிலம் சிவக்கிறது: / ஈரம்
நதிகளைக்கடந்தோம்
நீரூற்றுக்களைக் கடந்தோம்
உயர உயர
முகில்களைத் தடவும்
மலைகளில் ஏறினோம்.
‘The Worlds Ends’

(‘நட்சத்திரன் செவ்விந்தியன் ’)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இம் மாதம் நவம்பர் 13ஆம் திகதியன்று ஜே.வி.பி, 8வது மாவீரர் தினத்தை நினைவு கூர்ந்தது. இன்று இலங்கையில் சக்தி வாய்ந்த இடதுசாரி இயக்கமாக முதன்மை நிலையில் இருப்பது ஜே.வி.பி.யே. 1971,1988 ஆகிய இருமுறையும் புரட்சி செய்யவெனப் புறப்பட்டு தோல்வி கண்டு, மீண்டும் புறப்பட்டுள்ள ஜே.வி.பி யானது இன்றும், இடதுசாரி இயக்கங்களிலேயே பெருமளவு உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும். நிறுவனக் கட்டமைப்பு, ஒழுங்கு விதிகள், போன்ற இறுக்கமான ஒழுங்குக்குட்பட்டு இயங்கிவரும் ஜே.வி.பி, இன்றும் அதிகார தரப்பினருக்கு பெரும் தலையிடியைக் கொடுத்து வரும் இயக்கமாகவும் எதற்கும் விலைபோகாத கட்சியாகவும் இருந்து வருகிறது என்றால் மிகையில்லை. 1989 ஆம் ஆண்டு நவம்பர் 13 தலைமை வழிபாடும் முக்கிய காரணமாக ஆகியிருந்தது. அதே வழிபாட்டுமுறையே இன்றும் அதன் போக்கில் குடிகொண்டுள்ளது.

விஜேவீர வாக்குமூலம்

அன்புக்குரிய நாட்டு மக்களே! நான் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் றோகண விஜேவீர, நான் நவம்பர் 13ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செயப்பட்ட நிலையில் பேசுகிறேன். நேற்று கண்டியில்–உலபன பகுதியிலிருந்து இராணுவம் என்னைக் கைது செய்தது, பின் கொழும்பு இராணுவமுகாமுக்கு கொண்டு வரப்பட்டு அதிகாரிகளின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டேன். நாட்டில் தற்போது உருவாகியிருக்கும் நிலை பற்றிய எனது

றோகண விஜேவீர; இறுதிக்கணம்

- கோமதி

ஆம் திகதி அதன் ஸ்தாபகரும் தலைவருமான றோகண விஜேவிர, ஆளும் அதிகார வெறியர்களால் கைதுசெய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, இறுதியில் ரகசியமாக சுடப்பட்டு, எரிக்கப்பட்டார். அத்தினத்தை வருடா வருடம் ஜே.வி.பி யினர் கொல்லப்பட்ட தங்களது தோழர்களின் நினைவாக அனுஷ்டித்து வருகின்றனர்.

விஜேவீரவின், புரட்சிகர பாத்திரம் , கட்சிக்குள் தலைமை வழிபாடு சதா காலம் நிலவுவதற்கு, அவரின் பாத்திரம், கட்சிக்குள் ஜனநாயக மத்தியத்துவத்துக்கு வழங்கிய இடம், விமர்சனம்–சுயவிமர்சனம் என்பவை குறித்த அணுகு முறை, ஆதிக்க சித்தாந்தங்களை சரியாக அடையாளம் காணாமை, கட்சிக்குள்ளும் அதற்கு வெளியிலும் காணப்பட்ட அராஜகம் என்பன உட்பட அது போன்ற தன்மைகள் குறித்து இக்கட்டுரை பேசவில்லை. அது வேறு ஒரு களத்தில் விரிவாகப் பேசப்பட வேண்டியவை. இக்கட்டுரை விஜேவீர படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமாக மட்டும் பேசுகிறது.

ஆதிக்க சக்திகள் புரட்சிகர சக்திகளை எப்போதுமே விட்டுவைப்பதில்லை என்பதும் அவ்வாறான புரட்சிகர அமைப்புகளை முழுமையாக அழிப்பதென்றால் அதன் தலைமையை அழித்து விட்டால் எல்லாம் அடங்கிவிடும் என நம்புவதும் சாதாரணமானது. அவ்வாறான நம்பிக்கை வெறுமனே சோஷலிசப் போராட்டம் மட்டுமல்ல பல்வேறு சமுகப் போராட்டங்களையும் கூட இதே அணுகுமுறையில் ஆதிக்கசக்திகள் நம்பிக்கை வைத்து வருவது பொதுவாக காணக்கூடியது. அந்த நம்பிக்கையின் நிமித்தமே விஜேவீர உட்பட ஜே.வி.பி.யின் மத்திய குழு உறுப்பினர்கள் (தற்போதைய தலைவர் சோமவங்ஷ அமரசிங்க தவிர்ந்த) அனைவரும் வேட்டையாடிக் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி. மீண்டும் பகிரங்க அரசியலுக்கு வர நீண்ட காலம் எடுத்தது. இந்தக் காலதாமதத்துக்கு விஜேவீர வளர்த்து வைத்திருந்த

கருத்தென்னவென்றால், நாடு அந்நிய ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் இச்சூழ்நிலையில் பல அழிவுகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் மக்கள் வன்முறையிலிருந்து விலகி அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

றோகண விஜேவீர படுகொலை செய்யப்படுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன் அவரை வதைக்குள்ளாக்கி வலுக்கட்டாயமாகப் பெறப்பட்ட வாக்குமூலமே இது . மேற்படி வாக்குமூலம் அடுத்த நாள் தொலைக் காட்சியிலும் காட்டப்பட்டது. வரலாறானது அதிகார வர்க்கத்தின் பிடிக்குள் சிக்கி பலியான புரட்சிகர தலைவர்களின் எத்தனையோ பேரின் படுகொலைகளையும் கடந்து போய்க்கொண்டிருக்கிறது.

சேகுவேரா சீ..ஐ.ஏ.வினால் பொலிவியாவில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். ஜெர்மானிய புரட்சிகர தலைவி ரோஸா லக்ஸம்பர்க் அந்நாட்டு அரச படையினரால் குரூரமாக கொலை செய்யப்பட்டு ஆற்றில் தூக்கியெறியப்பட்டார். லியோன் ட்ரொஸ்கி சீ.ஐ.ஏ.வினால் குரூரமான முறையில்கொலை செய்யப்பட்டார். நக்ஸலைட் தலைவர் சாருமஜும்தார் இந்திய ஆளும் வர்க்க கைக்கூலிகளால் ரகசியமாகக் கொலை செய்யப்பட்டார். அந்த போக்கின் தொடர்ச்சி இன்னும் மேலே மேலே சென்று கொண்டிருக்கிறது.

தலைமறைவும் தற்காப்புக்கான நிர்பந்தமும்

1971 கிளர்ச்சி, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியினால் அழித்து அடக்கப்பட்டது. இதன் போது 20,000 பேருக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். கிளர்ச்சிக்கான சூத்திரதாரிகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் விஜேவீர உட்பட 41 பேரின் மீது ஆணைக்குழு அமைத்து விசாரணை செய்யப்பட்டனர். அவர்களில் 31 பேர் சிறைத்தண்டனை பெற்றனர்.

1977 தேர்தல் பிரச்சாரத்தின்போது ஜே.ஆரால், சிறிமாவுக்கு எதிரான ஆயுதமாக அரசியல் கைதிகளை விடுதலை செய் எனும் கோஷம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாவிக்கப்பட்டது. வரலாறு காணாத வெற்றி பெற்ற ஜே.ஆர் சொன்னபடி செய்யும் நேர்மையாளனாக தன்னை காட்ட 1977 நவம்பர் 2ம் திகதி விஜேவீர உட்பட பல அரசியல் கைதிகளை விடுவித்தார்.

1982 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆரை எதிர்த்துப் போட்டியிட்ட அறுவரில் மூன்றாவதாக பெரும்பான்மை வாக்குகள் விஜேவீரவுக்கு கிடைத்திருந்தது. அத்துடன் மாவட்டசபைத் தேர்தலிலும் ஜே.வி.பிக்கு கணிசமான ஆசனங்கள் கிடைத்திருந்தன. மாவட்ட சபைத் தேர்தலில் இடம் பெற்ற தேர்தலில் மோசடிகளை எதிர்த்து ஜே.வி.பி. வழக்கும் தொடுத்திருந்தது. இந்த போக்கு தனது எதிர்கால அரசியலுக்கு அச்சுறுத்தல் என்பதை ஜே.ஆர் விளங்கிக் கொள்ள நேரம் செல்ல வில்லை. பலமடைந்து வரும் ஜே.வி.பி.யை அடக்க தருணம் பார்த்து வந்த ஜே.ஆர்., அடுத்த வருடமே 83 இனகலவரத்தை தூண்டிவிட்டதுமல்லாமல் அதற்கான முழுப்பொறுப்பையும் இடதுசாரிக் கட்சிகளான ஜே.வி.பி., நவசமசமாஜகட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் மீது சுமத்தினார்.

அக்கட்சிகளை தடைசெய்ததுடன், அதன் தலைவர்களை கைது செய்ய உத்தரவிட்டார். பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த கட்சிகளின் தலைவர்கள் பலர் சரணடைந்தனர். இந் நடவடிக்கை ஜே.வி.பி.யை தலைமறைவு அரசியலுக்கு இட்டுச்சென்றது. காலப்போக்கில் ந.ச.ச.க.,கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன மீதான தடைகள் நீக்கப்பட்ட போதும் ஜே.வி.பி. மீதான தடை நீக்கப்படவில்லை. தமது கட்சியின் மீதான தடையை நீக்கக் கோரி விஜேவீர பல முறை ஜே.ஆருக்கு கடிதம் எழுதியிருந்த போதும் அது தொடர்ந்து நிராகரிக்கப்பட்டது. ஜே.வி.பி.யின் தலைமறைவு அரசியலை இந்த நடவடிக்கை ஸ்தூலப்படுத்தியது. காலப்போக்கில் ஜே.வி.பி.யினர் மீதான அடக்குமுறையும் கட்டவிழ்க்கப்பட்டது. இதன் காரணமாக ஜே.வி.பியினர் மீதான அடக்குமுறையும் கட்டவிழ்க்கப்பட்டது. இதன் காரணமாக ஜே.வி.பியினர் தமது தற்காப்புக்காக ஆயத பாணிகளாக வேண்டிய நிர்பந்தத்திற்கு தள்ளப்பட்டனர். இந்த அடக்குமுறை அதிகரித்த வேளையில் அதற்கு பதிலடி கொடுத்தனர். பிரேமதாச பதவியில் அமர்ந்ததும் ஜே.வி.பி.யினர் எனும் பேரில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவி இளைஞர்கள் கொல்லப்பட்டதுடன் ஜே.வி.பியின் அனைத்து வேலைகளும் முடக்கப்பட்டன. அன்றைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தனது மொழியில் கேம் ஓவர் (Game over) என்றார்.

அரசு—ஜே.வி.பி பேச்சுவார்தை

ஜே.வி.பி. தலைவர்களைப் பிடிப்பதற்கென்றே பிரேமதாச அரசாங்கம், ஒப்பரேசன் கம்பைன்ஸ் எனும் இராணுவ உட்பிரிவொன்றை உருவாக்கியிருந்தது.

ஜே.வி.பி.யை முழுமையாக அழித்துவிடும் திட்டத்தை அரசாங்கம் மிகவும் தந்திரமாக செய்து வந்தது. பிரேமதாச பல தடவை ஜே.வி.பி.யுடன் தான் பேச்சுவார்த்தை நடாத்த தயாராக இருப்பதாகவும் காலம் தாழ்த்த வேண்டாம் என்றும் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார். ஆரம்பத்தில் இதில் உள்நோக்கம் இருக்கும் என்றும் தம்மை பிடிக்க விரிக்கும் வலை என்றும் நம்பி அசட்டையாக இருந்த ஜே.வி.பி.யின் தலைமை, பின்னர் பேச்சுவார்த்தைக்கு தாம் தயாரென ரகசியமாக சிக்னல் கொடுத்தது. சலாகா தலாளி மற்றும் அமைச்சர் தொண்டமான் ஆகியோரினூடாக இந்த முயற்சிகள் நடந்தன. முன் கூட்டியே செய்திருந்த ஏற்பாட்டின் பிரகாரம் 1989 ஒக்டோபர் 14ஆம் திகதியன்று ரம்பொட தோட்டத்திலுள்ள தொண்டமானின் வீட்டில் ஜே.வி.பி.யின் முக்கியஸ்தர் ஒருவர் மொழி பெயர்ப்பாளர் ஒருவருடன் அரசின் பிரதிநிதியான தொண்டமானுடனான பேச்சுவார்த்தை ஆரம்பமானது. இச்சந்திப்பில் ஜே.வி.பி.யினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளையும், முன்னேற்றத்தையும் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு அவ்வப்போது தெரிவித்து வந்தார் தொண்டமான். இப்பேச்சுவார்த்தை பற்றி ஜே.வி.பி.க்குள் முரண்பாடான கருத்தும் இருந்தது. குறிப்பாக அரசுடன் எந்த விதத்திலும் உடன்பாடொன்று காண்பது தேவையற்றது என்ற கருத்து பலமாக இருந்தது. இதன் காரணமாக நவம்பர் 8 ஆம் திகதியன்று நடாத்தப்படவிருந்த பேச்சுவார்த்தை ஒத்திப் போடப்பட்டது. இந்த 8ஆம் திகதிக்கும் 12ஆம் திகதிக்குமிடையில் தான் ஜே.வி.பியின்



தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள். இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாக இன்று தொண்டமானும் எதுவும் கூறப்போவதில்லை. ஜே.வி.பி.யும் இதனை ஒப்புக்கொள்ளப்போவதில்லை. பிரேமதாசவும் உயிருடன் இல்லை. ஆனால் உள்ளளவில் தொண்டமானுடனான இப்பேச்சுவார்த்தை தான், தமது தலைவர்கள் வலையில் அகப்பட காரணமாக இருந்திருக்கிறது என்பதை கட்சி தலைவர்கள் பலர் நம்பி வருகின்றார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசு விரித்த வலையும் காட்டிக்கொடுப்பும்

இந்த நிலையில் தான் டீ.எம்.ஆனந்த கைது செய்யப்பட்டார். ஜே.வி.பி.யின் தலைமையை ஒழித்துக் கட்டுவதாயின் அதன் தொடர்பு வலைப்பின்னலை தேடிக்கண்டு பிடிக்க வேண்டும் என ஒப்பரேஷன் கம்பைன்ஸ் தீர்மானித்திருந்தது. அதன்படி ஏற்கனவே கிடைத்திருந்த தகவல்களின்படி மூவர் இலக்கு வைக்கப்பட்டனர். சோமவங் அமரசிங்க, கதுருபொகுணு மற்றும் டீ.எம்.ஆனந்த ஆகியோரே அவர்கள். கதுருபொகுணுவுக்கும் ஆனந்தவுக்குமிடையிலான தொடர்பு ஆனந்தவின் டிரைவருக்கூடாக நடப்பதாகத் தெரிய வந்தது. பிலியந்தலையில் வைத்து கதுருபொகுணு பிடிக்கப்பட்டார். அவரின் தகவலின் பின்னர் தான் டீ.எம்.ஆனந்த கொழும்பு மாவட்ட ஜே.வி.பி.யின் தலைவர் எனப் பாதுகாப்புப் பிரிவினருக்கு தெரியவந்தது. படையினரின் அடுத்த நாடகம் ஆரம்பமானது. கதுருபொகுணுவுடன் வேடமணிந்து சென்ற இராணுவகப்டனை டீ.எம். ஆனந்தவின் டிரைவரிடம் அவர் தலைவரிடமிருந்து ரகசிய தகவல் ஒன்றை கொண்டு வந்திருப்பதாகவும் ஆனந்தவிடம் இதனை ஒப்படைக்க அழைத்துச்செல்லும்படியும் கேட்கவே, அவரும் தெமட்டகொடைக்கு அழைத்துச்சென்றார். இலகுவாக படையின் வலையில் சிக்கிக் கொண்ட ஆனந்தவை மூன்று நாட்களாக கடும் சித்திரவதை செய்து உண்மையை கக்க வைத்தனர். ஜே.வி.பி.யின் தொடர்புகள் அனைத்தும் வெளிப்படுத்தப்பட்டன. அவர் வெளியிட்டிருந்த தக வல்களின் படி முதலில் பண்டார வளையில் ரெஜினோல்ட் பெட்ரிக் எனும் பெயரில் இருந்து வந்த சோமவங் அமரசிங்க தங்கியிருந்த வீட்டைச் சுற்ற வளைத்தனர். ஆனால் அதற்குள்சோமவங்அமரசிங்க தப்பிப்போயிருந்தார். வீட்டை சல்லடை போட்டு தேடிப் பார்த்ததில் ஆதாரங்கள் எதுவும் மிஞ்சியிருக்க வில்லை.

பல்லேகல படைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆனந்தவை மீண்டும் சித்திரவதை செய்து உண்மையை வரவழைக்க முயற்சித்தனர். Water treatment எனப்படும் தலைகீழாக தொங்கவிட்டு தண்ணீரில் தலையை அமிழ்த்தி வதை கொடுத்தனர். இறுதியில் விஜேவீரவின் இருப்பிடத்தையும் கக்கினார். எச்.பீ.ஹேரத் உட்பட இன்னும் பலரின் இருப்பிடங்களையும் டீ.எம்.ஆனந்த வெளியிட்டிருந்தார்.

விஜேவீர பிடிபட்டமை

இத்தகவல் உடனடியாக தலைமையகத்துக்கு அனுப்பப பட்டது. உலபனையில் அமைந்துள்ள விஜேவீரவின் இருப்பிடத்துக்குப் போகும் வழியை தெளிவாக ஆனந்தாவுக்கூடாக அறிந்து சென்றனர்.

ஒப்பிரேஷன் கம்பைன் பிரிவிலிருந்து ஒரு படையணி விஜேவீரவை பிடிப்பதற்கென்று சென்றது.

சென் மேரி எஸ்பேட்டில் அமைந்துள்ள அந்த பங்களாவின் சிகப்புநிற வாயிற்கதவை தாண்டிச் சென்றுகொண்டிருந்தது வாகனம்.. 1989 நவம்பர் 10ஆம் திகதி பிற்பகல் 2.00மணி. விஜேவீர வழமைபோல தனது பிள்ளைகளுடன் ஒன்றாக மேசையில் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார். திடீரென நுழைந்த வாகனத்திலிருந்து வேகமாக இறங்கிச் சென்ற படையினர் வீட்டையும் விஜேவீரவையும் சுற்றி வளைத்தனர். சூழ்ந்து கொண்டவர்கள் கேள்வி எழுப்ப முன்னமே விஜேவீர அவர்களை நோக்கி கேள்வி எழுப்பினார்.

"என்ன இது? என்னை என்ன செய்யப் போகிறீர்கள்?"

"ரோகண விஜேவீர இல்லை. விஜேவீர என்பவர் யார்? உங்களது கணிப்பு தவறு என நான் நினைக்கிறேன். நான் அந்த நாயக்க. நன்றாகப் பாருங்கள்.. இவ்வாறு கூறியதும் கேனர்ல் சானக்க பெரேரா தனது 9 எம்.எம்.பிஸ்டலை எடுத்தக் கொண்டு முன்னமே பாய்ந்து விஜேவீராவின் தலையில் பிஸ்டலை வைத்து...

நீ விஜேவீர அல்லவா?

அதிர்ச்சியை வெளியே காட்டது அமைதியக, விஜேவீர

"நீங்கள் கண்டியில் இருந்தா வருகிறீர்கள்" எனக் கேள்வி எழுப்பினார்.

அதுவரை இந்நபர் விஜேவீர தானா என்ற சந்தேகம் இருந்த படையினருக்கு இந்தக் கேள்வியும், அதன் தொனியும் தமது இலக்கு சரிதான் என்பதை நிரூபித்தது.

நான் உங்களோடு வந்து விடுகிறேன் எனது குடும்பவத்தவரை எதுவும் பண்ணிவிடாதீர்கள் என்று கூறி, விஜேவீர இராணுவத்தினரின் யு.ஹு.368 இலக்க வாகனத்தில் ஏறினார். விஜேவீர இருந்த வாகனத்திற்கு முன்னும் பின்னுமாக 5 வாகனங்களில் படையினர் சென்றனர். வாகனம் கொழும்பு ஹெவ்லொக் டவுனில் அமைந்துள்ள ஒப்பிரேஷன் கம்பைன்ஸ் தலைமையகத்தை அடைந்தது.

அத்த நாயக்க எனும் விஜேவீர

ஒரு வருடத்துக்கு கூடாத வகையில் இருப்பிடங்களை மாற்றி குடியிருந்து வந்த விஜேவீர உலபனை வீட்டுக்கு 1987 செப்டம்பர் 2ஆம் திகதியன்றிலிருந்து அத்தநாயக்க எனும் பேரில் தனது குடும்பத்துடன் குடியிருக்கத் தொடங்கியிருக்கிறார். பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்துச்செல்லுதல் உட்பட பத்திரிகைகள் தொடக்கம் ஏனைய வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்குவது அனைத்தையும் முதிர்ந்த வீட்டு வேலையாள் ஒருவர் செய்து வந்தார். அத்தநாயக்க எவருடனும் வீணாக பேச்சு வைத்துக்கொள்வதில்லை. முதியவர் இல்லாத வேளைகளில் அக்கடமைகளை அத்தநாயக்கவே செய்வார். திருமதி அத்தநாயக்க பற்றி சுற்றத்தார் நல்ல மதிப்பு வைத்திருந்தனர்.உலபனை இருப்பிடத்திற்கு ஜே.வி.பி.யின் தலைவர்கள் நான்கு பேர் மட்டுமே வந்து போயிருந்தனர். தனது சிறு குழந்தை கூட தனது தகப்பனார் தான் விஜேவீர என்பதை அறியாது இருக்குமளவுக்கு இரகசியம் பாதுகாக்கப்பட்டிருந்தது.

ஒரு முறை ஜே.வி.பி.யின் இராணுவப்பிரிவான தேஷப்பிரேமி ஜனதா வியாபார (தேசாபிமான மக்கள் இயக்கம்) வைச் சேர்ந்த உறுப்பினர்கள் அடையாள அட்டைகளை பறித்துக் கொண்டிருந்தனர். அத்தநாயக்கவிடமும் துப்பாக்கியைக் காட்டி அடையாள அட்டையைக் கேட்டு மிரட்டினர். வியாபார நடவடிக்கைகளுக்காக நாடு முழுதும் போய் வரும் தான் அடையாள அட்டையை தர முடியாது என வாதிட்டுள்ளார். இதன் மூலம் தெரிவது என்னவென்றால் கண்டி மாவட்ட ஜே.வி.பி. தலைவர் கூட தமது தலைவரின் இருப்பிடத்தை அறிந்திருக்கவில்லை என்பதே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சித்திரவதை தொடக்கம்

அன்று இரவு முழுவதும் விஜேவீர சித்திரவதைக்குட் படுத்தப்பட்டார். எஞ்சியவர்கள் இருக்கும் இடத்தைச் சொல்லுமாறு வற்புறுத்தினர். உண்மையில் விஜேவீரவுக்கு கூட ஏனையோரின் இருப்பிடங்கள் அனைத்தும் தெரிந்திருக்கவில்லை. இரவு 12 .45 அளவில் இருபடையினர் விஜேவீரவின் குடும்ப புகைப்படம் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தனர். இப்போதோ அடையாளம் கண்டுபிடிக்க முடியாத வகையில் தாடி மீசையில்லாமல் இருந்தார். விஜேவீர அடுத்தநாள் காலை 9.30 அளவில் விஜேவீரவின் விரல் ரேகைகள் பரீட்சிக்கப்பட்டு அதன் முடிவு கிடைத்திருந்தது. அன்று முழுவதும் சித்திரவதை தொடர்ந்தது. இதன் போது தான் ஜே.வி.பி.யின் மத்திய குழு உறுப்பினர்களான கமநாயக் கவின் இருப்பிடத்தையும் ஏனையோரது விபரங் களையும் விஜேவீர வெளியிட்டார் என அரச யந்திரத்தின் காவல் நாய்களான தேசிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டபோதும், அது பொய்யென்பது பின்னர்தான் பலருக்குத் தெரிய வந்தது. கமநாயக்க பிடிபட்டிருந்த போது பாதுகாப்பமச்சர் ரஞ்சன் விஜேரத்ன வெளியிட்டசெய்திலும் கமநாயக்கவை விஜேவீரதான் காட்டிக் கொடுத்ததாக தெரிவித்திருந்தார்.

பிரேமதாசாவின் உத்தரவு

இறுதியாக மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன பிரிகேடியர் சானக பெரேரா, பிரிகேடியர் லக்கிஅல்கம, பிரிகேடியர் ஜயசுந்தர கேர்ணல் பலகல்ல, மேஜர் தோரதெனிய, மேஜர் உடுகம்பொல, கெப்டன் கபூர் ஆகியோர் விஜேவீரவை என்னசெய்வது என்பதுபற்றிக் கலந்துரையாடினார். பின்னர் அதைப்பற்றி ரஞ்சித் விஜேரத்னவுடன், சிசில் வைத்திய ரத்னவும் வேறு சில அதிகாரிகளும் கலந்துரையாடினர். பின்னர் இதைப்பற்றி கெசல்வத்தையில் ஜனாதிபதியின் சொந்தவீட்டில் இருந்த ஜனாதிபதி பிரேமதாசாவுடன் தொடர்பு கொண்டு முடிவைக் கேட்டனர். அரசியல் ரீதியில் ஏற்படும் பிரச்சினைகளை தான் கவனித்துக் கொள்வதாகவும் நேரத்தைக் கடத்தாமல் உடனடியாக விஜேவீரவை முடித்து விடும்படியும் கெசல்வத்தையில் இருந்து தகவல் வந்தது.

அதன் படி, விஜேவீரவை கொல்லும் பொறுப்பை பிரதிப் பொலீஸ்மா அதிபர் கபூர்க் கேர்ணல், தோரதெனிய மற்றும் லெப்டினென்ட் கேணல் ஒருவருக்கும் அளிக்கப்பட்டது.

அதுவரை விஜேவீர பிடிபட்ட தகவல் முழுவதும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. கேள்விகள் பல கேட்கப்பட்டன. அவற்றுக்கு அமைதியாக பதில் அளித்தார். விஜேவீர இறுதியில், ஒரு கடதாசியை வாங்கித் தனக்குள் படித்தார். பின் அதிலுள்ளபடி வீடியோ முன்னிலையில் உரையாற்றப் பணிக்கப்பட்டார். மீண்டும் கேள்விகள் கேட்கப்பட்டன. கமந-ாயக்க எங்கே? என கேட்டபோது, அப்படியான கேள்விகள் கேட்பது அர்த்தமற்றது. என விஜேவீர பதிலளித்தார். அன்றிரவு 10.45 வரை கேள்விகள் கேட்கப்பட்டன. அப்போது, பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவும் வந்து சேர்ந்திருந்தார். 15 நிமிடங்கள் ரஞ்சன் விஜேரட்ன அவருடன் உரையாடி இருக்கிறார்.

விஜேவீர பிரிந்தார்

விஜேவீரவை யு.ஹ.601 இலக்க வாகனம் ஏற்றிக் கொண்டு புறப்பட்டது. பொரல்லையில் காசல் வீதிக்கு அருகில் உள்ள கோல்ப மைதானத்தில் இலக்கம் 6 குழியருகில் வாகனம் வந்து தரித்தது. பெரிய மரத்தினடியில் ரோகண விஜேவீர கொண்டு செல்லப்பட்டார்இ தனக்கு என்ன நடக்கப் போகிறது என்பதை அவர் அறியாமல் இருக்க நியாயமில்லை.

இவனை உயிரோடு கொளுத்துவோம் என ஒருபடையினன் கூறினான்.

இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறாய். மரணபயம் உன்னை ஆட்கொள்ளவில்லையா?

இல்லை. அப்படி ஒன்றையும் உணரவில்லை. நான் எப்போதும் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டுதான் எனது கடமைகளை செய்து வருகிறேன். எனது மரணம் எப்போது எங்கே நடக்கும் என்பதை மட்டும் தான் அறியாமல் இருந்தேன். தன்னால் எதிர்த்தாக்குதல் நடாத்த முடியாத நிராயுதபாணியாக இருக்கும் நிலையில் சிலமணி நேரங்களுக்கு முன்னர் வரை அடி, உதை போன்ற வதைகளுக்கு முகம் கொடுத்த நிலையில், அந்த வலிகூட மாறுமுன்னர் தனது இறுதிநேரம் கிட்டி விட்டது என்பதை தெரிந்த நிலையிலும், ஆயுதமுனையில் அளிக்கப்பட்ட இந்த பதில் நிச்சயம் அந்தக் கொலைஞர்களைக் கூட ஆச்சரியப்பட வைக்காமல் இருக்கமுடியாது.

கை துப்பாக்கியை எடுத்து முதலாவதாகச் சுட்டவன் கபூர். விஜேவீர அப்படியே சாய்தார். துடிதுடித்துக்கொண்டிருந்தார். ஹாங்....... ஹாங்...... டக்கென்று முடி.....

சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. தோரதெனிய தனது கைத்துப்பாக்கியால் விஜேவீரவின் நெஞ்சை தோட்டாக்கள் முடியும் வரை சுட்டுத்தள்ளினான். ரோகண விஜேவீர துடிதுடித்துக்கொண்டிருந்தார். விடியக்காலை 3.00 மணிக்கு அந்த உடல் மைதானத்திற்கு பின்னால் அமைந்திருந்த பொறலைகனத்தை மைதானத்திற்கு அதே வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டது. ஏற்கனவே, அந்த வாகனத்தில் எச்.பீ.ஹெரத்தின் பிரேதமும் கிடந்தது.

இரண்டு பிரேதமும் பொறலை மயானத்தில் கேஸ்ஸில் எரிக்கப்பட்டன. எரிக்கும் கருவிக்கு விஜேவீரவின் உடல் தூக்கிப்போடப்பட்டபோது, அவரது உயிர் முற்றாகப் போயிருக்கவில்லை.

அரசின் பொய்ப் பிரச்சாரம்

விஜேவீரவை இத்தனை பயங்கரமாக, இரகசியமாக படுகொலை செய்த அரசாங்கம் விஜேவீரவை நவம்பர் 10ம் திகதியேகைது செய்திருந்த போதும், விஜேவீரவை கொலை செய்த அடையா-ளங்கள் முழுவதையும் அழித்ததன் பின்னர் தான், - 13ம் திகதி - அதுபற்றித் தகவல் அறிவித்தது. 14ம் திகதியன்று சகல பத்திரிகைகளிலும், இதுபற்றிய தலைப்புச் செய்திகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

முன்னாள் மிலிட்டரி பொலிஸைச் சேர்ந்த படப்பிடிப்பாளர் இந்திரானந்த டி சில்வாவால் எடுக்கப்பட்ட புகைப்படம்.

அப்புகைப்படம் ஓவியர் ஒருவரிடம் கொடுக்கப்பட்டு தாடி மீசை என்பனவை வரையப்பட்டு விஜேவீர என திரிக்கப்பட்ட புகைப்படம் இது

இரகசியம் வெளியிட்ட படையினன்

ராகுபத்த கங்கானம்கே இந்திரானந்த டி.சில்வா என்பவர் தான் விஜேவீரவை இறுதியாக படமெடுத்தவர். இராணுவப் பொலிஸ் ஐச் சேர்ந்த இவர், அக்காலப்பகுதியில் படையினரால் கொல்லப்பட்ட இளைஞர்கள் பலர் கொல்லப்படுவதற்கு முன்னரும் கொல்லப்பட்ட பின்னரும் புகைப்படம் எடுக்கவேண்டியது இவரது கடமை. பிற்காலத்தில் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவை கொல்ல சதித்திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 15 வருட சிறைத் தண்டனையை அனுபவித்து வருபவர். கடந்த வருடம் நவம்பர் மாதம் 29 திகதியன்று அவர் வழக்கறிஞருக்கூடாக ஒரு வாக்குமூலத்தை வெளியிட்டிருந்தார். அவ் வாக்குமூலத்தில் பல உண்மைகளை வெளியிட்டிருந்தார்.

"....அன்று 1989 நவம்பர் 12ம் திகதி நான் தூங்கிக் கொண்டிருந்தபோது 11 மணியளவில் எமது படையைச் சேர்ந்த கப்டன் ஒருவர் வந்து என்னை எழுப்பினார். ஒரு அவசர கடமைக்காக இரகசியமாக தன்னுடன் புறப்பட்டு வரும்படியும், வெளியில் வாகனம் நிற்பதாகவும், கமராவை எடுத்துக் கொண்டு வரும்படியும் கூறினார். அந்த முகாமில் இருந்து இரகசியமாக நாங்கள் இருவரும் வெளியேறினோம். தற்போதைய பணி குறித்து எந்த ஒரு போதும் வாய் திறக்காது இருக்கும் படியும் உத்தரவிட்டார். கொழும்பு திம்பிரிகஸ்யாயவில் அமைந்துள்ள இரகசிய நடவடிக்கை இணைப்புச் செயலகத்தை அடைந்தோம். மேல் மாடியில், சிரேஷ்ட அதிகாரிகள் 15 பேர் அளவில் கூடியிருந்தனர். கைது செய்யப்பட்டிருந்த நபர் ஒருவரும் மேல் மாடியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவர் அளிக்கும் வாக்குமூலமும் வீடியோவில் பதிவாகிக் கொண்டிருந்தது. அப்போது தான் நான் தெரிந்து கொண்டேன் அவர் வேறு யாருமல்ல, ஜே.வி.பி.யின் தலைவர் ரோகண விஜேவீர என்பது அதன் போது நான் அவரை பலகோணங்களில் எட்டுப் புகைப்படங்கள் எடுத்தேன். வீடியோ செய்து கொண்டிருக்கும் போதே அதிகாரிகள் அவரிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர் அதற்கு அவருக்கே உரிய முறையில் பதில் அளித்துக் கொண்டிருந்தார். பல கொலைகளுடன் எவ்வாறு தமது கட்சித் தோழர்கள் வீணாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர் என்பதை விளக்கினார். ஐ.தே.க. வின் திட்டமிட்ட செயற்பாடுகள் தம்மைத் தலைமறைவுக்கு இட்டுச் சென்றதையும் விரிவாக விளக்கினார். இதே வேளை நான் அதே கட்டிடத்தில் கீழ்த் தளத்தில் இன்னும் ஒரு நபரை புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தேன். அவர் தான் ஜே.வி.பி.யின் அரசியல் பிரிவைச் சேர்ந்த எச்.பீ.கேரத். மிகவும் வதை புரியப்பட்ட நிலையில் இருந்த அவரை புகைப்படம் எடுக்க மிகவும் சிரமப்பட்டேன். அவரது உடலை ஒழுங்காக நிறுத்தி வைக்கக்கூட சிரமப்பட்டோம்.

சிலமணி நேரத்துக்குப் பின் விஜேவீரவின் கண்களும் கைகளும் கட்டப்பட்டு வாகனத்தில் ஏற்றப்பட்டு பொரல்லையில் காசல் வீதிக்கருகில் உள்ள கோல்ப் மைதானத்திற்கு கொண்டுசெல்லப்பட்டார்."

நியாயமான விசாரணை கொமிசன் ஒன்று அமைக்கப்பட்டு விசாரணை செய்யப்படும் பட்சத்தில் இவ் உண்மைகளை தான் வெளியிடத் தயாராக இருப்பதாகவும், பல புகைப்படங்கள் அடங்கிய ஆதாரங்கள் பலவற்றையும், அப்போது தான் ஒப்படைப்பதாகவும் இவர் தெரிவித்திருக்கிறார்.

வெளியிடப்பட்டிருந்தன. பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட்டி இத்தகவலை வெளியிட்டிருந்தார். அத்தகவல்கள் அடுத்தநாள் பத்திரிகைகளில் பின்வருமாறு வெளியிட்டிருந்தன.

மக்கள் விடுதலை முன்னனியின் தலைவர் ரோகண விஜேவீர நேற்றைக்கு முன்தினம் கம்பொல உலபனவில் உள்ள வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டு, கொழும்பிலுள்ள ஜே.வி.பி.யின் தகவல் மத்திய நிலையத்தைக் காட்டுவதற்கு வந்துகொண்டிருந்த போது, அதே வாகனத்தில் கொண்டுவரப்பட்ட எச்.பீ. ஹேரத் படையினரின் துப்பாக்கியைப் பறித்து விஜேவீரவை சுட்டுக்கொன்றார். ஹேரத்தை படையினர் சுட்டதில் ஹேரத்தும் கொல்லப்பட்டார். அவசரகால சட்டத்தின் கீழ் அவர்களது இறுதிக்கிரியைகள் இராணுவத்தால் செய்து முடிக்கப்பட்டது. இதன்மூலம் அராசாங்கம் விஜேவீரவை பிடித்துவிட்டோம். அவர் தனது ஏனைய தோழர்களை அரசாங்கத்திற்கு காட்டிக் கொடுக்க முயற்சித்த போது, அவரது தோழர் ஒருவராலேயே கொலை செய்யப்பட்டார். நாங்கள் கொல்லவில்லை என்பதையே சாதிக்க விரும்பியது. ஆனால் பொதுவாக அரசின் இந்தக் கூற்றை பொதுமக்கள் நம்பியிறுக்கவில்லை. விஜேவீர கொல்லப்பட்ட இரகசியம் முதன்முதலில் பாராளுமன்றத்தில் தான் அம்பலமானது. ஆனால் அதனையும் பல வதந்திகளில் ஒன்றென்றே பலர் கருதினர்.

நன்றி நண்பர்களே.
மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம். புலம் - மார்ச் 1ம் திகதி வெளிவர முயலும்.
உங்களுடன் உரையாட கேட்டுப் பார் என்று ஒரு பகுதி அடுத்தஇதழில்ஆரம்பமாகின்றது. பதில்கள் தருபவர் பரதேசி. எதைப்பற்றியும் கேட்கலாம். கேள்விகளை அனுப்புங்கள்.

கேட்டுப்பார்
புலம்
IBC - Tamil
P .O.Box 1505
London SW8 2ZH.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net